# இயல்பு மீறிய குழந்தைகள்

கலாநிதி முருகு தயாநிதி









வெளியீடு
சோபிஜயஹரி

# இயல்பு மீறிய குழந்தைகள்

கல்வி அமைச்சு

அனுமதிப்பத்திரம்

புத்தகத்தின் பெயர் : இயல்பு மீறிய குழந்தைகள்

நூலாசிரியர் : கலாநிதி முருகு தயாநிதி

அனுமதிப்பத்திரம் இல. : EPAB/2019/26311

1952 பெப்ரவரி மாதம் 29ம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை அரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரமான உதவி நன்கொடை பெறும் சுய இரட்டை மொழி மற்றும் ஆங்கிலம் பாடசாலை தொடர்பான பிரமாணக் குறிப்பின் 19/ஏ வாசகத்தின் கீழ் கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் பாடசாலை நூலகப் புத்தகமாக அனுமதிக்கிறேன்.

புஷ்பகுமார விதானகே
செயலாளர்
கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை

2019 ஆகஸ்ட் மாதம் 29

கல்வி அமைச்சு "இசுருபாய" பத்தரமுல்லை

அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் திகதி 2024.08.28

# இயல்பு மீறிய குழந்தைகள்

**கலாநிதி முருகு தயாநிதி**
MA, PGDE, M.Ed, MPhil, Ph.D
சிரேஷ்ட விரிவுரையாளர்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

வெளியீடு
சோபிஜயஹரி

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | இயல்பு மீறிய குழந்தைகள் |
| ஆசிரியர் | : | முருகு தயாநிதி |
| உரிமை | : | முருகு தயாநிதி |
| வெளியீடு | : | சோபிஜயஹரி |
| அச்சு | : | குமரன் புத்தக இல்லம் |
| | | 39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6 |
| விலை | : | 500.00 |

| | | |
|---|---|---|
| Title | : | Iyalpu Meeriya Kulanthaigal |
| Author | : | Murugu Thayanithy |
| Copy Right | : | Murugu Thayanithy |
| Published by | : | Shopiyayahari |
| Printed by | : | Kumaran Press (Pvt) Ltd. |
| | | 39, 36th Lane, Colombo -6 |
| Price | : | 500.00 |

ISBN 978-955-35603-4-6

# அணிந்துரை

விஷேட தேவையுடைய பிள்ளைகளைப் பற்றிய விழிப்புணர்வு தற்காலத்தில் உலகலாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகக் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக பேண்தகு விருத்தி இலக்குகள் 2015 - 2030 இல் கல்விக்கான இலக்குகளில் விஷேட தேவையுடைய பிள்ளைகளை சமூகத்தில் உட்படுத்தி கல்வி வழங்குதல் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த நோக்கத்தை அடையும் வகையில் உலக வங்கியானது நிதியுதவிகளை அதிகம் வழங்குகின்றது. உலகிலுள்ள அபிவிருத்தி அடைந்த நாடுகள், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் என்ற வேறுபாடின்றி அனைத்து நாடுகளும் பல்வேறு செயற்றிட்டங்களை உருவாக்கி இப்பிள்ளைகளுக்கு பயிற்சிகளை அளித்து வருகின்றன. இது பிள்ளையின் பலம்சார் அடிப்படையான அணுகுமுறையாகும். இது இப்பிள்ளைகளிடம் காணப்படும் தனித்துவமான திறன்களை விருத்திசெய்து இவர்களை சமூகத்தில் மற்றவர்களில் தங்கியிராமல் சுயமாக வாழ்வதற்கு ஏற்ற நபர்களாக வாழ வழிசமைக்கின்றது.

தென்னாசிய நாடுகளைப் பொறுத்த வரையில் விஷேட தேவையுடைய மாணவர்களைப் பற்றிய விழிப்புணர்பு சிறப்பாக உள்ளதாகக் கூற முடியாது. இந்நாடுகளில் வாழும் விஷேட தேவையுடைய பிள்ளைகள் பலர் தமது வீடுகளுக்குள்ளேயே முடக்கப்படும் பரிதாபகரமான நிலை காணப்படுகின்றது. பங்குதாரரின் பொறுப்பின்மை, தேசிய ரீதியான கொள்கை வகுக்கப்படாமை, பிற்போக்கான சிந்தனைகள் போன்றன இந்தப் பிள்ளைகள் முறையான கல்வியைப்

பெறத் தடையாக அமைகின்றன. இந்த நிலைக்கு இலங்கையும் விதிவிலக்கானதல்ல. எனினும், தென்னாசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் விஷேட தேவையுடைய பிள்ளைகளின் நிலை ஓரளவு திருப்திகரமான மட்டத்தில் இருப்பதாக நாம் பெருமைப்பட முடியுமெனக் கூற முடியும். விஷேட தேவையுடைய பிள்ளைகளுக் காக இலங்கை அரசு சில முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளது.

விஷேட தேவையுடைய பிள்ளைகளுக்குக் கற்பிக்கவென இத் துறையில் சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை அரசு பாடசா லைகளில் நியமித்துள்ளது. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தில் விஷேட கல்வித்துறை உருவாக்கப்பட்டு இத் துறையில் ஈடுபட்டவர்களுக்கான இளமாணி, பட்டப்பின் டிப்ளோமா என பல கற்கைநெறிகள் நடத்தப்படுகின்றன. மேலும் இலங்கை தேசிய கல்வி நிறுவகத்தின் உட்படுத்தற் கல்வித்துறை இத்துறையில் கணிசமான பங்களிப்பை நல்குகின்றது. இலங்கையில் உள்ள தேசிய கல்வியியல் கல்லூரிகள் பலவற்றில் விஷேட தேவை கல்வி ஆசிரி யர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர். இலங்கையில் உள்ள பல பாட சாலைகளில் விஷேட தேவையுடைய பிள்ளைகள் பயின்று வருவது அதிகரித்துக் கொண்டிருக்கின்றது.

விஷேட தேவையுடைய பிள்ளைகளின் நிலை இலங்கையில் இவ்வாறு இருந்தபோதிலும் இங்குள்ள தமிழ்ச் சூழலில் இப் பிள்ளைகளைப் பற்றிய விழிப்புணர்வு குறைவாகவே உள்ளமை வேதனைக்குரியது. பல தமிழ்ப் பாடசாலைகளின் நிர்வாகங்கள் விஷேட தேவையுடைய பிள்ளைகளை உள்வாங்கப் பின்னிற்கின்றன. இப்பாடசாலைகளின் பௌதிகச் சூழல்களும் இதற்கேற்றவாறு அமைக்கப்படவில்லை என்பதும் நோக்கத்தக்கது. மேலும் விஷேட தேவையுடைய பிள்ளைகளுக்குக் கற்பிக்கவென அரசினால் நியமிக் கப்பட்ட இத்துறையில் சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை சாதாரண பிள்ளைகளுக்கு கற்பிக்க அனுப்பப்படுகின்ற நிலை இலங்கைத் தமிழ்ப் பாடசாலைகளில் வெகுசாதாரணமாகக் காணப் படுகின்றது. இதனால் விஷேட தேவைகளையுடைய பல தமிழ்ப்

பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் செல்வதில் சிக்கலான நிலைமை காணப்படுகின்றது. இத்துறையில் பயின்று இதற்கென நியமனம் பெற்ற தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் பலர் வேறுதுறைகளில் ஆர்வம் காட்டும் நிலையும் காணப்படுகின்றது. மேலும் பல தமிழ்ப் பெற்றோர்கள்கூட விஷேட தேவையுடைய தமது பிள்ளைகளைப் பற்றிய அக்கறை இன்றி இருக்கின்றமை அவதானத்துக்குரியது.

இந்தப் பின்புலத்தில்தான் கலாநிதி முருகு தயாநிதி அவர்களின் இயல்பு மீறிய குழந்தைகள் என்ற நூலை நோக்க வேண்டியுள்ளது. தமிழ்த்துறையில் கல்வி தொடர்பான தலைப்பில் தனது கலாநிதிப் பட்டத்தினைப் பூர்த்திசெய்த தயாநிதி அவர்கள் இலங்கை தேசிய கல்வி நிறுவகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். தனது ஆர்வத்தினாலும் விருப்பினாலும் விஷேட கல்வித்துறையில் நூலை எழுதியுள்ள இவரைப் பாராட்டவேண்டும்.

இந்த நூலானது நன்னூலில் இயல்பு மீறிய குழந்தைகள், கல்வியலாளர் பார்வையில் இயல்பு மீறிய குழந்தைகள், மீத்திறனு டைய பிள்ளைகள், ஆக்கத்திறனுடைய பிள்ளைகள், மெல்லக் கற்கும் மாணவர்கள், உடல் இயலாமையுள்ள குழந்தைகள், கற்கும் திறனில் குறைபாடுடைய மாணவர்கள், பிழையான சீராக்கமுடைய பிள்ளைகள், உட்படுத்தற் கல்வி, இலங்கையில் கல்வி பெறும் வாய்ப்பு ஆகிய பத்துக் கட்டுரைகளின் தொகுப்பாக அமைந்துள்ளது.

விஷேட கல்வித்துறையானது தமிழுக்கு மிகப் புதியது என்ற கருத்து பலரிடம் காணப்படுகின்றது. ஆனால் தயாநிதி அவர்கள் வேதம், தொல்காப்பியம், நன்னூல் எனப் பல நூல்களில் இது தொடர்பாகக் கூறப்பட்டவைகளை விளக்குகிறார். இதன் மூலம் இவர் விஷேட கல்வியானது தமிழுக்குப் புதிதானதன்று என்பதனை நிறுவுகின்றார். இவ்வாறே மற்றைய கட்டுரைகளிலும் இத்துறை சார்ந்த பல்வேறு விடயங்களை விரிவாக ஆராய்ந்துள்ளார்.

தமிழ் மொழியைப்பொறுத்த வரையில் இத்துறை சார்ந்த நூல் கள் மிக அரிது என்றே குறிப்பிடமுடியும். எனவே விஷேட கல்வித்

துறையைப் பொறுத்தவரையில் இந்த நூல் பாலை வனப் பசுந்தரை யென்றே குறிப்பிடலாம். விஷேட கல்வித்துறையில் பணிபுரியும் தமிழ் தெரிந்தவர்களுக்கும் தமிழ் பேசுகின்ற விஷேட தேவையுடைய பிள்ளைகளின் பெற்றோ ருக்கும் இந்த நூல் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை. நூலாசிரியர் இத்துறையில் மேலும் பல நூல்களைத் தரவேண்டும்.

நன்றி.

கலாநிதி தேவராசா முகுந்தன்
முதுநிலை விரிவுரையாளர்
முன்பிள்ளைப் பருவவிருத்தி மற்றும் ஆரம்பக் கல்விப் பிரிவு
கல்விப்பீடம்
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
நாவல, நுகேகொடை.

# முகவுரை

தமிழாராய்ச்சி என்பது இன்னும் ஆழமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் உள்ளது. தமிழ்த்துறையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்ற ஆராய்ச்சியாளர்கள் பலரும் தமிழ்மொழி, பண்பாடு முதலிய நிலைகளிலே தங்கள் ஆராய்ச்சி முடிவுகளை முன்வைக்கின்றனர். ஆனால், பண்டைத்தமிழில் பொதிந்துள்ள விடயங்களைத் கல்விப் புலத்தில் ஆராய்கின்ற நிலை குறை வாகவே இருந்துவருகின்றது. அதனால் பழந்தமிழில் உள்ள கல்விச் சிந்தனைகள் எம்மைவிட்டு விலகி அல்லது மறைந்து செல்லும் நிலைக்கு உட்படுகின்றன. இந்த நிலையில் மேலைத்தேய கல்வியின் வரவு ஒரு புதிய கண்டுபிடிப்புப்போல் எங்களை அதன்பால் ஈர்க்கின்றது. அதனை நாமும் புதியவரவாகவே ஏற்றுக்கொள்கின்றோம். பண்டைத் தமிழில் பொதிந்துள்ள கல்விச் சிந்தனை பற்றிய ஆய்வுகள் இன்னும் தவழ் நிலையில் உள்ளமையினால் பழந்தமிழ்ச் சிந்தனையில் அடையாளமாகும் கல்விச் சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் விடுகின்றோம். பண்டைத் தமிழில் கல்வி குறித்த சிந்தனைகளை ஆராய்வதனால் நவீன கல்விச் சிந்தனைகள் அவற்றில் மூழ்குவதனை இலகுவாகவே அறிந்துகொள்ளமுடிகின்றது. இதற்காகக் கல்விப்புல ஆராய்ச்சி கள் மேலும் முன்கொண்டுசெல்லப்படவேண்டும். அதற்காக மாணவர்களை அத்துறைசார்ந்த ஆய்வுப் புலத்துக்கு உட்படுத்துவது அவசியமானதாகும். தமிழையும் கல்வியியலையும் ஆழமாகக் கற்கின்ற மாணவர்களால் கூடுமான வரையில் பழந்தமிழில் புதையுண்டுள்ள கல்விச் சிந்தனைகளைத் தேடி ஆராயமுடிகின்றது.

அந்த வகையிலே இயல்பு மீறிய குழந்தைகள் பற்றிய சிந்தனைகள் பழந்தமிழில் பொதிந்துள்ளமையினைக் கண்டு கொள்ளமுடிகின்றது.

இயல்புமீறிய குழந்தைகள் எனும் பதம் இலங்கையில் விசேட கல்வி தேவைப்படும் மாணவர்கள் என்பதைச் குறிக்கின்றது. இன்று விசேட தேவையுடைய மாணவர்கள் என்பதனையும் தாண்டி அது உட்படுத்தற் கல்வி என்ற பதத்தினால் மேலும் வளம்படுத்தப்பட்டிருக்கின்றது. உட்படுத்தற் கல்வி, பிள்ளைகளை வகுப்பறையில் பாகுபாடின்றி நோக்குவதனை குறித்துநிற்கின்றது. எவ்வாறாயினும் இதன் வரலாறு என்பது அண்மைக் காலத்தில் பரிணமித்ததுதான். ஆனால், இயல்பு மீறிய குழந்தைகள் பற்றிய பதிவு வேதங்களைத் தொடர்ந்து அதன் இறுதியாகத் தோன்றிய உபநிடதங்களில் பதிவாகின்றன. இவ்வாறான காலவோட்டத்தில் நன்னூலில் இயல்புமீறிய குழந்தைகள் பற்றிய தெளிவு அடையாளப்படுத்தப்படுகின்றது. ஆசிரியம் பற்றியும் மாணவர்களுடைய கல்வி பற்றியும் தெளிவுபடுத்தும் நன்னூல், மாணவர்களை மூன்று வகையாகப் பிரித்து அடையாளப்படுத்துவதன் வாயிலாக மாணவர் தன்மை பற்றிய விளக்கத்தினைத் தருகின்றது. கி.பி 13ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்படும் இந்த இலக்கண நூலில்தான் மாணாக்கருடைய தன்மை பற்றிய தெளிவு முதன்முதலாக பதிவாகின்றது. எனவே, இன்றைய கல்வி உலகம் சிந்திப்பதற்கு முன்னரே இயல்பு மீறிய குழந்தைகள் பற்றித் தமிழ் நூல்கள் பட்டியற்படுத்தி விளக்கம் தந்துள்ளன.

இயல்பு மீறிய குழந்தைகளை விசேட தேவையுடைய பிள்ளைகள் என்று அழைக்கின்றனர். இந்தப் பதம் மீத்தறன் உள்ள மாணவர்களையும் மெல்லக் கற்கும் மாணவர்களையும் உள்ளடக்குகின்றது. மீத்திறன் உள்ள மாணவர்களின் கல்வி ஈவு 130 என்று வைத்துக்கொள்வோம். அவ்வாறான குழந்தைகள் 130 க்குக் கூடுதலான கல்வி ஈவினைக் கொண்டவர்களாக இருப்பார்களானால் அவர்கள் மீத்திறனில் இயல்பு மீறிய குழந்தைகளாக அடையாளப் படுத்தப்படுகின்றார்கள். அதேநேரம் சாதாரண கல்வி ஈவு 100 இருக்க வேண்டிய குழந்தைகள், அதற்கு கீழ் தங்களது கல்வி

ஈவினைக் கொண்டிருப்பார்களாக இருந்தால் அவர்களும் தங்களுடைய இயல்பில் இருந்து மீறி இருக்கின்றார்கள். ஆகவேதான், இயல்பு மீறிய குழந்தைகள் என்பது இந்த இருவகையினரையும் சுட்டிநிற்பதனை அடையாளப்படுத்துகின்றது.

குழந்தைகள், பிள்ளைகள் என்ற சொற்கள் கல்விப் புலத்தில் பயன்படுத்தப்படுகின்றது. இங்கு குழந்தைகள் என்ற சொல்லே கையாளப்படுகின்றது. 1925ஆம் ஆண்டு ஜெனிவாவில் இடம்பெற்ற சர்வதேச மாநாட்டில் குழந்தைகளுக்கு இருக்கவேண்டிய அடிப்படை உரிமைகள், பின்பற்றவேண்டிய நடைமுறைகள், மற்றும் கல்வி குறித்து ஒவ்வொரு நாட்டின் அரசுக்கும் தெளிவுபடுத்தப்பட்டது. தொடர்ந்து 1954 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை சர்வதேச குழந்தைகள் தினத்தை நவம்பர் 20ஆக ஏற்றுக்கொண்டது. இச்சபை, குழந்தைகள் என்போர் 18 வயதுக்குக் குறைந்தவர்கள் என்பதனை அடையாளப்படுத்துகின்றது.

1959ஆம் ஆண்டு 20ஆம் திகதி குழந்தைகளின் உரிமைப் பிரகடனமும் 1989ஆம் ஆண்டு குழந்தைகள் தினத்தில்தான் குழந்தைகளின் உரிமை மீதான ஒப்பந்தமும் ஐக்கியநாடு சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. குழந்தைகள் குறைந்தபட்சம் வாழும் உரிமை, பாதுகாக்கப்படும் உரிமை, பங்கேற்கும் உரிமை, முன்னேற்ற உரிமை எனும் நான்கு பிரிவுகளின் ஊடாக உரிமைகளையும் சுதந்திரத்தினையும் பெறவேண்டும் என்கின்றது. இப்புத்தகத்தில் சொற்பிணைப்புக்களின் வசதிகருதி குழந்தைகள், பிள்ளைகள், மாணவர்கள் என்று கையாளப்படுகின்றது.

இன்று இயல்பு மீறிய குழந்தைகளுக்குக் கல்வி வழங்கும் முறை பற்றிப் பல்வேறு நாடுகளும் சிந்திக்கத் தொடங்கியுள்ளன. அதனால் கல்வியின் தாற்பரியம் பெரிதும் உணரப்படுகின்றது. அதற்காக அந்தந்த நாடுகள் சிறப்பான கற்பித்தல் - கற்றல் முறைகளுடன் அதனை நடைமுறைப்படுத்தி வருகின்றன. நமது நாடு போன்ற, வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் இதன் போக்கு இன்னும் விருத்தியடைய வேண்டிய நிலையிலேயே உள்ளது. இலங்கையினைப் பொறுத்தவரையில் விசேட கல்வியின் போக்கு பெரிதும் உணரப்பட்ட

நிலையில், அதற்கான சந்தர்ப்பங்களை அரசாங்கம் பல நிலைகளில் வழங்கி வருகின்றது. அது ஒரு சிறந்த வாய்ப்பாக மாணவர்களக்கு கிடைப்பதனையிட்டு பெருமைகொள்ளமுடியும்.

இயல்பு மீறிய குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுதல் என்பது இலகுபட்ட விடயமல்ல. ஏனெனில், அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு மனப்பாங்கு கொண்டவர்கள். எனினும், கற்பித்தல் - கற்றல் ஒருமுகப்பட்ட நிலையில் வகுப்பறைச் சூழலில் கொண்டு செல்லப்படுவதற்காக இந்த நூலாக்க முயற்சியினை மேற்கொண்டுள்ளேன். பெரிதும் விசேட கல்வியினைக் கற்பிக்கின்ற வர்கள், மற்றும் பெற்றோர்கள் இதன்படி ஒழுகினால் ஒரு சிறந்த பேற்றினை அடையலாம் என்ற எண்ணப்பாட்டுடன் இந்த முயற்சி கற்பித்தல் - கற்றல் நிலையில் விளக்கப்படுகின்றது. இதற்காக இயல்பு மீறிய குழந்தைகள் பற்றிய பல்வேறு தன்மைகளை இயன்றளவு சுருக்க விளக்கமாக முன்வைத்துள்ளேன். நீங்கள் கற்பிக்கும், கற்கும் சூழலுக்கு ஏற்ப அதில் மாற்றம் செய்தும் முன் கொண்டு செல்லலாம்.

இந்த நூல் வெளிவருவதற்கு உதவிய அனைத்து உள்ளங்க ளுக்கும் எனது நன்றிகள். குறிப்பாக இந்த நூல் பற்றிக் குறிப்பிட்டு அதற்கு அணிந்துரை ஒன்று கேட்டபோது மனமுவந்து அப்பணியினை நிறைவுசெய்த மதிப்புக்குரிய கலாநிதி தேவராசா முகுந்தன் அவர்க ளுக்கும், இந்நூலின் கனதி கருதி வாழ்த்துரை வழங்கிய பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்களுக்கும், உடபடுத்தற் கல்வி தொடர்பாக ஆலோசனை வழங்கிய பி.வினிதாஜினி அவர்களுக்கும் எனது அன்பு கலந்த நன்றிகள் உரித்தாகட்டும். ஆய்வு முயற்சி சிறப்பாக அமைவதற்கு துணையாக இருக்கும் துணைவியார், புதல்வர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். அத்தோடு இந்நூலை அச்சிட்டு வடிவமைத்து தந்த குமரன் புத்தக இல்லத்தாருக்கும் எனது நன்றிகள்.

முருகு தயாநிதி

+94779028965
muruguthayanithy@gmail.com

# வாழ்த்துரை

அண்மைக் காலங்களில் கல்வியியல் தொடர்பான ஒரு தொகையான நூல்கள் தமிழ் மொழியில் வெளிவந்துள்ளமை ஆரோக்கியமான விடயமாகும். எவ்வாறாயினும் கல்வியியல் என்று மிகப் பொதுவாகக் கூறினாலும் அதனைச் சார்ந்த துறைகளின் தொகை அதிகம். அவ்வாறு துறைவாரியாக ஒரு கணக்கெடுப்பினைச் செய்யும்போது சில துறைகளில் மிகச் சில நூல்களே வெளிவந்துள்ளன. இத்துறைகள் பற்றி சற்று விரிவாகக் கூறலாம். கல்வித் தத்துவம், கல்வி உளவியல், கல்வி முகாமைத்துவம், கல்வி அளவீடும் மதிப்பீடும், ஒப்பியல் கல்வி, கற்பித்தல் முறையியல் எனச் சிலவற்றைப் பட்டியற்படுத்தி னாலும் இன்னும் ஏராளமான துறைகளை இனங்காணமுடியும். யாம் குறிப்பாகக் கூறவிழைவது கல்வி உளவியல், பிள்ளை உளவியல் தொடர்பான ஆக்கங்களையாகும். எமக்குத் தெரிய பேராசிரியர் ச.முத்துலிங்கம் அவர்களுடைய உளவியல் நூலுக்குப் பின்னர் யோ.பெனடிக்பாலன், க.சின்னத்தம்பி, கலாநிதி செ.அருள் மொழி எனப் பட்டியல் இட்டாலும் இத்துறையில் வெளிவரும் நூல்கள் மிகக் குறைவாகவே உள்ளன. அற்கான காரணங்களை இவ்விடத்தில் ஆராய்வதற்கில்லை.

இப்பின்புலத்தில் கலாநிதி முருகு தயாநிதி அவர்கள் எழுதியுள்ள இந்நூல் குறிப்பிடத்தக்கது. இதனைக் கல்வியியல் என்ற பொதுப் பட்டியலுக்குள் அடக்கலாம் என்றாலும், இதனைப் பிரதானமாக பிள்ளை உளவியல் அல்லது விசேட தேவையுடைய பிள்ளைகள் என்ற பிரிவுக்குள் அடக்குவது சாலப் பொருத்தமென்று கருது கின்றேன். இவ்வகையில் இத்துறைக்கு ஒரு புதிய வரவாக இந்நூலை

நாம் கருத்தில் கொள்கின்றோம். நவீன பிள்ளை உளவியல் அல்லது விசேட தேவையுடைய பிள்ளைகள் என்ற விடயம் தொடர்பாக அண்மைக்கால ஆய்வுகளையும் அவை தொடர்பான முடிவுகளையும் தமிழ் வாசகர்களுக்கு குறிப்பாக இத்துறைசார்ந்த ஆசிரியர்களுக்கு மட்டுமன்றிச் சகல தமிழ் பேசும் பெற்றோர்களுக்கும் பயனுள்ள ஒரு நூலை நூலாசிரியர் தந்துள்ளமை பாராட்டுக்குரியதாகும். நேரடியாக நவீன மேல்நாட்டு நூல்களுக்குச் செல்லாது எமது தமிழ் மரபின் குறிப்பாக நன்னூல், தொல்காப்பியம் முதலிய தமிழ் நூல் களில் இயல்பு மீறிய குழந்தைகள் பற்றிய கருத்துக்களைத் தேடி ஆராய்ந்து முதலாம் அத்தியாயத்தைத் தந்திருப்பது ஒரு விசேட அம்சமாகும்.

எமது ஆசிரியர்களும் பெற்றோர்களும் எமது நாட்டின் கல்வி உலகுடன் தொடர்புடையவர்கள். அவர்கள் தமது பிள்ளைகளுக்குக் கற்பிக்கும்போது அல்லது வளர்க்கும்போது அப்பணியினைத் தொழில் முறையாகச் செய்வதற்கு உதவும் வகையில் நூலாசிரியர் பிள்ளைகளைப் பல்வேறுமுறைகளில் வகைப்படுத்தி சுருக்கமாக ஆராய்ந்திருப்பது இந்நூலின் மற்றுமொரு சிறப்பம்சம்.

இவ்வகையில் நிச்சயமாக ஆசிரியர் துறையும், பெற்றோர்களும் உள்ளடங்கிய தமிழ் கூறும் நல்லுலகம் இந்நூலுக்குரிய வரவேற்பை வழங்க வேண்டுமென்பது எமது வேண்டுகோளாகும்.

பேராசிரியர் சோ.சந்திரசேகரம்
மேனாள் பீடாதிபதி
கல்வியியற் பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்

# சமர்ப்பணம்

பெற்று வளர்த்து, கல்வி தந்து கனத்த பணி எனக்காய் ஆற்றி, இயல்பு மீறிய பிள்ளையாய் ஆக்கி, பேரானந்தப் பெருவாழ்வு பெற்ற அன்புப் பெற்றோர் முருகேசு பொன்னம்மா எனும் இருமணிகளுக்கு இந்நூல் சமர்ப்பணம்

1. பார்வைக் குறைபாடுடையவர்கள்
2. காக்கைவலி நோயுடையவர்கள்
3. உடல் குறைபாடுடையவர்கள்
4. காது கேளாதவர்கள்
5. கேள்விக் குறைபாடுடையவர்கள்
6. கல்வியில் பிற்போக்குடையவர்கள்
7. பிறழ்வான பொருத்தப்பாடுடையவர்கள்
8. பேச்சுக் குறைபாடுடையவர்கள்
9. மனவெழுச்சிக் குழப்பமுடையவர்கள்
10. மீத்திறனுடைய பிள்ளைகள்

அமெரிக்கா

1950ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க நாட்டில் விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகளாக அடையாளப்படுத்தப்பட்டவர்கள்.

1. மீத்திறன் உடையவர்கள்
2. உளக்குறைபாடுடையவர்கள் ஆனால், கல்வி கற்பிக்கக் கூடியவர்கள் மற்றும் பயிற்சியளிக்கக் கூடியவர்கள்
3. மனவெழுச்சிக் குழப்பங்களை உடையவர்கள்
4. பிறழ்வான பொருத்தப்பாடுடையவர்கள்
5. பேச்சுக் குறைபாடுடையவர்கள்
6. ஊமையானவர்கள்
7. கேள்விக் குறைபாடுடையவர்கள்
8. குருடர்கள்
9. பார்வைக் குறைபாடுடையவர்கள்
10. முடமானவர்கள்
11. வேறுபட்ட அசாதாரண குறைபாடுடையவர்கள்
12. ஏனையோர்

அவுஸ்ரேலியா

1860ஆம் ஆண்டு விசேட தேவையுடைய மாணவர்களுக்காக பாட சாலை ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இதில் பார்வைக் குறைபாடுடையவர்களுக்கும் செவிப்புலன் குறைபாடுடை யவர்களுக்கும் கல்வி வழங்கப்பட்டது. 1920 ஆண்டு காலத்தில் ஏனைய குறைபாடுடைய மாணவர்களுக்கு கல்வி வழங்கப்பட்டி ருக்கின்றது.

யப்பான்

யப்பானில் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்காக சாதாரண பாடசாலை, சிறப்புப் பாடசாலை, பல்கலைக்கழகம் என்ற அடிப்ப டையில் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு இத்தகைய வசதி சிறப்பாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கினறது. இரண்டாம் உலக மகாயுத்தத்தால் இந்த நாடு அதிகம் பாதிக்கப்பட்டிருந்தது. அதன் நிமித்தம் அங்கு குறைபாடுடைய பிள்ளைகளின் பெருக்கம் மற்றைய நாடுகளைவிட அதிகமாகும். அதனை நிவிர்த்தி செய்யும் வகையில் பாடசாலை முறை அங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நாடு அறிவுப் பொருளாதாரத்தினை நோக்கிச் செல்வதால் அவர்களுடைய விசேட கல்வியும் அதற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. மாணவர் களின் குறைபாடுகளுக்கு ஏற்ப வகுப்பு நிலையிலும் அவர்களுடைய எண்ணிக்கை மாறுபடுகின்றது. இந்த மாணவர்களின் அறிவையும் ஆற்றலையும் அதிகரிக்கும் வகையில் தொழினுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி கற்பித்தல் - கற்றல் இடம் பெற்றுவருவதும் அந்நாட்டுக் கல்வியின் சிறப்பம்சமாகும்.

இந்தியா

1970 ஆம் ஆண்டு காலத்தில் விசேட கல்வி அறிமுகமாகின்றது. இதற்கு முன்னர் விசேட தேவையுடைய பிள்ளைகள் வீட்டில் பராமரிக்கப் பட்டார்கள். இதன் தொடர்ச்சியாக 1980ஆம் ஆண்டு காலத்தில் கிறிஸ்தவ மிசநெறி மாதிரிக் கல்விப் பட்டறைகளை உருவாக்கிக் கல்வி கொடுக்கப்பட்டது. பின்னர் 1986ஆம் ஆண்டு விசேட கல்வி கொள்கைக்காக யாப்பு உருவாக்கப்பட்டு ஊனமுற்றவர்களுக்கான கல்வி வழங்கப்பட்டது. 1991ஆம்

ஆண்டு காலத்தில் ஊனமுற்றோர் கவனிப்பு அதிகம் பேணப்பட்டது. இன்றைய நிலையில் பல நிறுவனங்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்புக்களை வழங்கிவருகின்றன.

1975ஆம் ஆண்டில், அனைத்து குழந்தைகளுக்குமான கல்வி (EHCA PL 94 - 142) கொடுக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டது. மாநிலங்கள் தோறும் ''இலவச மற்றும் பொருத்தமான பொதுக் கல்வி'' (FAPE) அனைத்து மாணவர்களுக்கும் (உடல், மன, அல்லது, நடத்தைக் குறைபாடுகள் உள்ளிட்ட அனைவருக்கும்) வழங்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தியது. இந்த விசேட கல்வி, ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு பன்முறை ஒழுங்குபடுத்தும் குழு மற்றும், ஆண்டு தோறும் தனிப்பயனாக்கப்பட்ட கல்வித் திட்டத்தின் (I.I.P) அபிவிருத்தி, கல்வி மற்றும் நடத்தை இலக்குகள், சேவைகளை வழங்குவதற்கும் மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டுதல்களையும் விரிவுபடுத்தியது.

இலங்கை

இலங்கையின் கல்வி அமைச்சு ஆறுவகையான விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகள் இருப்பதாக அடையாளப்படுத்தியுள்ளது.

1. உளக் குறைபாடுகள் உடையோர்
2. கேள்விக் குறைபாடுகள் உடையோர்
3. பார்வைக் குறைபாடுகள் உடையோர்
4. பலவகைப் பேச்சுக் குறைபாடுகள் உடையோர்
5. முடம் போன்ற உடல் குறைபாடுகள் உடையோர்
6. நடத்தைக் குறைபாடுகள் உடையோர்

இன்றைய கல்வி உலகில் இயல்பு மீறிய குழந்தைகளைக் கீழ்வருமாறு வகைப்படுத்துகின்றனர்

1. மீத்திறனும் விசேட நிபுணத்துவமும்
2. கற்றல் இயலாமைகள்
3. மொழிதலும் மொழிக் குறைபாடுகளும்

4. மெதுவாக உளவளர்ச்சியடைதல்
5. தீவிர மனவெழுச்சிப் பிரச்சினைகள்
6. பல்வித இயலாமைகள்
7. உடலியற் குறைபாடுகள்
8. வேறு சுகாதாரக் குறைபாடுகள்
9. ஓட்டிசம்
10. கவனமிழப்புப் பிறழ்வு
11. கேட்டல் குறைபாடு
12. செவிட்டுத் தன்மை
13. பார்வைக் குறைபாடு
14. குருடுத் தன்மை
15. தற்சிந்தனை
16. மூளையில் ஏற்பட்ட பாதிப்பு

**அசாதாரண குழந்தைகளின் வகைப்பாடு**

1. அறிவுத் திறனில் அசாதாரணமானவர்கள்
   a. மீத்திறன், விசேட நிபுணர்த்துவம் உடையவர்கள்
   b. ஆக்கத்திறன் மிகுந்து காணப்படுபவர்கள்
   c. மெதுவாகக் கற்போர்
   d. மனவளர்ச்சி குன்றியோர்
2. உடற்குறைபாடுடையவர்கள்
   a. பார்வைத்திறன் குறைபாடுடையோர்
   b. செவித்திறன் குறைபாடுடையோர்
   c. பேச்சுத்திறன் குறைபாடுடையோர்
   d. உடலியற் குறைபாடுடையோர்
   e. மூளைக்காயமுடையோர்

3. மனவெழுச்சி மற்றும் சமுகவளர்ச்சியில் குறைபாடுடையோர்
   a. நெறிபிறழ் நடத்தை உடையோர்
   b. குற்றவாளிகள்
4. பல்வகைக் குறைபாடுடையோர்

மேலே குறிப்பிட்டவற்றுள் ஒன்றுக்கு மேற்பட்ட குறைபாடுடையவர்கள்.

நுண்ணறிவுச் சட்டகம்

இயல்புமீறிய குழந்தைகளை இச்சட்டகத்தின் வாயிலாக அறியமுடிகின்றது. மாணவர்கள் நுண்ணறிவில் எவ்வாறான தன்மையில் உள்ளனர் என்பதனை ஆராய்ந்து அளவிட்டுக் கணித்துள்ளமையினை இச்சட்டகம் காட்டுகின்றது. அது நுண்ணறிவு ஈவின் அடிப்படையில் அளவிடப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றது.

| இல | நுண்ணறிவு வகைகள் | நுண்ணறிவு ஈவு | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | மேதை (Genius) | 140க்கு மேல் | 0.25 |
| 2 | மிகத்திறனுடையோர் (Very Superior) | 130 - 139 | 0.75 |
| 3 | திறனுடையோர் (Superior) | 120 - 129 | 6.00 |
| 4 | சராசரிக்கு மேல் (Above Average) | 110 - 119 | 13.00 |
| 5 | சாதாரணம் அல்லது சராசரி (Normal / Average) | 90 - 109 | 60.00 |
| 6 | சராசரிக்குக் கீழ் (Below Average) | 80 - 89 | 13.00 |
| 7 | மந்தமானவர்கள் (Border Line) | 70 - 79 | 6.00 |

| | | | |
|---|---|---|---|
| 8 | பேதையர் (Moron) | 50 - 69 | 0.75 |
| 9 | மூடர் (Imbecile) | 25 - 49 | 0.25 |
| 10 | முட்டாள் (Idiot) | 24க்கு கீழ் | 0.25 |

கில்பொர்டின் நுண்ணறிவு அமைப்புக்கொள்கை பற்றி இன்று பெரிதும் பேசுகின்றனர். அவருடைய கொள்கை முப்பரிமானக் கொள்கையாகும். இவரது கருத்துப்படி 120 நுண்ணறிவுத் திறன்கள் முப்பரிமாணங்களாக அமைந்துள்ளன. அவை செயல், பொருள், விளைவு என்பன. இந்த மூன்றும் பல உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது.

செயல் எனும் பகுதி ஐந்து உட்கூறுகளைக் கொண்டு அமைந்துள்ளன.

1. அறிதல் - கொடுத்த விவரங்களிலிருந்து கேட்கப்பட்டதை உடனடியாகக் கண்டுபிடித்துப் பொருள் உணர்த்தல்.
2. நினைவு கூர்தல் - கற்றல் செய்திகளை தேவையான பொழுது வெளிக்கொணர்தல்.
3. குவிசிந்தனை - கொடுக்கப்பட்டுள்ள விபரங்களிலிருந்து பொதுவாக எதிர்பார்க்கப்படும் பயன் என்ன என்பதனைக் கண்டறிதல்.
4. விரிசிந்தனை - கொடுக்கப்பட்டுள்ள விபரங்களிலிருந்து புதுமை மற்றும் பல்வேறு வித்தியாசமான வியக்கத்தகு கோணத்தில் சிந்தித்தல்.
5. மதிப்பீடு - கொடுக்கப்பட்டுள்ள விவரம் எந்தளவுக்கு பொருத்தமானதாகவும் சரியானதாகவும் விரும்பத்தக்கதாகவும் இருக்கின்றதென்ற முடிவுக்கு வருதல்.

பொருள் எனும் பகுதியில் நான்கு உட்கூறுகள் அடங்குகின்றன.

1. உருவம் - கையாளப்படும் விபரம், உருவங்கள், படங்கள் என்பவற்றின் அளவு, வண்ணம், பின்னணி, கோட்பாடு, போன்றவை இதில் அடங்கும்.
2. குறியீடு - இதில் எழுத்துக்கள், சொற்கள், குறியீடுகள், போன்றவை அடங்கும்.

3. சொற்பொருள் - உபயோகிக்கப்படும் சொற்களுக்கான பொருள் படங்கள் உணர்த்தும் செய்திகள் இதில் அடங்கும்.
4. நடத்தை - ஒருவரது மனப்பான்மை, விருப்பம், சிந்தனை, புலக்காட்சி, மனநிலை முதலிய சொல்சாரா விபரங்கள் அடங்கு கின்றன.

விளைவு எனும் பகுதியில் ஆறு உட்கூறுகள் அடங்குகின்றன.

1. அலகுகள் - முழுமையான காட்சிக்கோட்பாடுகளின் தனித்த விவரங்களை இணைத்துப் பொருள்காணுதல்.
2. வகைகள் - பொருட்களின் பண்புகளின் அடிப்படையில் வகைப்படுத்தல்.
3. தொடர்புகள் - கொடுக்கப்பட்டுள்ள விபரங்களுக்கிடையே யான தொடர்பை ஊகித்தறிதல்.
4. ஒருங்கமைப்புக்கள் - கொடுக்கப்பட்ட விவரங்களை அல்லது, செய்திகளை ஒருங்கிணைத்து ஒரு அமைப்பு அல்லது வடிவத்தை ஏற்படுத்துதல்.
5. மாற்றியமைப்புக்கள் - கொடுக்கப்பட்ட விவரங்களை அல்லது, செய்திகளை வேறு வகையில் வரையறுத்தலும் மற்றும் மாற்றியமைத்தலும்.
6. அனுமானங்கள் - கொடுத்துள்ள விபரங்களிலிருந்து பெறப் படும் பனிப்புக்களும் மற்றும் எதிர்பார்க்கக்கூடிய விளைவு களும் இதில் அடங்கும்.

இவருடைய இந்த நுண்ணறிவு பற்றிய கோட்பாட்டுச் சிந்தனைகள் $5 x 4 x 6 = 120$ என அமைகின்றது. அதாவது, திறமையான மாணவனது நுண்ணறிவு ஈவு 120க்கு மேல் அமைவதனை இவர் இந்த வகையில் குறித்துக் காட்டுகின்றார். அதாவது, ஒவ்வொரு செயற்பாட்டுத் தொடர்பும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட நிலையில் தீர்மானங்கள் நிறைவேறுகின்றன. கற்பித்தல் - கற்றலில் வகுப்பறையில் உள்ள மாணவர்களின் திறனை வரையறுத்து அதற்கேற்ப அவனைக் கற்றலில் ஊக்கப்படுத்தமுடியும் என்பது இவருடைய கோட்பாட்டின் வாயிலாகக் கண்டுகொள்ளமுடிகின்றது.

# 3

# மீத்திறனுடைய பிள்ளைகள்

*அறிவுத்திறன் மிக்க மாணவர்கள் ஒரு வகுப்பில் 3 சதவீதம் முதல் 5 சதவீதம் வரை இருப்பர். இன்றைய வகுப்பறைச் சூழலில் இத்தகைய மாணவர்கள் சரிவர கவனிக்கப்படுவதில்லை என்ற குறைபாடு இருக்கவே செய்கின்றது. பொதுவாக இவர்களுடைய கல்வித் தேவைகள் நிறைவேறுவதில்லை. சாதாரண மாணவர் நிலையிலேயே இவர்களும் நோக்கப்படுகின்றனர். இவ்வாறான நிலையில் இம்மாணவர்கள் வெறுப்படைகின்ற நிலை உருவாகின்றது. ஆகையால் ஆசிரியர் தம் வகுப்பிலுள்ள மீத்திறன் மாணவர்களை இனங்கண்டு அவர்களின் முழு வளர்ச்சிக்கு வகை செய்யும் வகையில் கல்வியை வழங்கவேண்டும்.*

## மீத்திறன் மாணவர்களை அடையாளம் காணுதல்

*'ரேமர்' என்பவர் நடத்திய பரிசோதனை முக்கியமானதாகும். இவர், உலகத்தில் பிரபல்யமாக இருந்த விஞ்ஞானிகள், தத்துவஞானிகள், கலைஞர்களின் பிள்ளைகளை ஆராய்ந்தார். அப்பரிசோதனையில் சிறுவயதில் இருந்தே அவர்கள் மீத்திறன் உடையவர்களாக இருந்தார்கள் என்பதனை அடையாளப்படுத்துகின்றார். எனினும், இன்றைய கல்விச் சூழலில் மீத்திறன் உடைய பிள்ளைகள் பின்வரும் நிலையில் கண்டறியப்படுகின்றனர்.*

1. *நுண்ணறிவு ஈவு 120க்கு மேல் இருந்தால் அத்தகையவர்கள் மீத்திறன்மிக்க மாணவர்களாக இருப்பர்.*
2. *அவர்களுடைய சிந்தனை உயர்நிலையில் இருக்கும்.*
3. *பாடசாலைகளில் உள்ள புள்ளிப்பதிவேடுகளைக் கொண்டு அவர்களை அடையாளம் காணலாம்.*

4. நல்ல சொல்வளம், நல்ல நினைவாற்றல், பரந்த கவனம் மற்றும் அதிகம் படிக்கும் திறன் கொண்டிருப்பர்.
5. ஆசிரியர் கூறும் கருத்துகளை விரைவாகவும் எளிதாகவும் புரிந்துகொள்வர்.
6. மாணவர் தம் ஓய்வுநேரத்தை மிக பயனுள்ள முறையில் பயன்படுத்துவர்.
7. கருத்தியல் நிலையை எளிதாக புரிந்துகொள்வர்.
8. வகுப்பில் மிக நுட்பமான வினாக்களை எழுப்புவர்.
9. தொடர்ந்து முயன்று எந்த சிக்கல்களையும் தீர்ப்பர்.
10. தங்கள் வயது நிலைக்கு அதிகமான புத்தகங்களைப் படிப்பர்.
11. நம்பிக்கைக்கு உரியவர்களாகவும், நேர்மையானவர்களாகவும் இருப்பர்.
12. பாட சம்பந்தப்பட்ட செயல்களில் அதிகம் பங்குகொள்வர்.
13. உற்று நோக்கும் திறன் கொண்டவராக இருப்பர்.
14. படித்த கருத்தை எளிதில் தக்கவைத்துக்கொள்வர்.
15. ஒரு பாடத்தில் பெற்ற அறிவை ஏனைய பாடங்களுக்கும் தொடர்புப்படுத்துவர்.

**மீத்திறன் உள்ள குழந்தைகளின் கல்வி ஈவைக் கண்டறியும் முறை**

இயல்பு மீறிய குழந்தைகளின் நுண்ணறிவு ஈவு அல்லது கல்வி ஈவு பின்வரும் சூத்திரத்தால் அளவிடப்படுகின்றது.

நுண்ணறிவு ஈவு அல்லது கல்வி ஈவு = உளவயது x 100 / கால வயது

உதாரணமாக இலங்கையில் 7 வயதுடைய மாணவன் தரம் 3 இல் கற்கவேண்டும். அவரது காலவயது 7 ஆகும். ஆனால், அந்த மாணவன் 9 வயதுடைய மாணவனின் திறன் உடையவனாகப் பிரகாசிக்கின்றான். அப்படியானால் அவனுடைய நுண்ணறிவு ஈவு பின்வருமாறு அமையும்.

நுண்ணறிவு ஈவு அல்லது கல்வி ஈவு = உளவயது x 100 /காலவயது

நுண்ணறிவு ஈவு அல்லது கல்வி ஈவு = 9 x 100 / 7

நுண்ணறிவு ஈவு அல்லது கல்வி ஈவு = 100 / 7

நுண்ணறிவு ஈவு அல்லது கல்வி ஈவு = 9 x 100 / 7

நுண்ணறிவு ஈவு அல்லது கல்வி ஈவு = 128.57

சராசரி நுண்ணறிவு ஈவு அல்லது கல்வி ஈவு 129 ஆகும். இந்த ஈவினை அண்ணளவாக 130க்கு மேல் என்பர்.

## மீத்திறன் மிக்க மாணவர்களுக்கான கற்பித்தல் - கற்றல் செயலொழுங்கு

### பாடசாலைகளில் தனிப் பிரிவினை ஏற்படுத்தல்

மீத்திறன் உடைய மாணவர்கள் உள்ள நிலையில் அவர்களுக்கான தனியான வகுப்புக்களை ஏற்படுத்திக்கொள்வது நல்லது. தனிமைப் படுத்தும் போது மற்ற மாணவர்களுடன் பழகுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துவது அவசியமானதாகும். இல்லாவிடில் மாணவர்கள் தனிமைப்பட்டு பேதங்களும் கர்வமும் உண்டாகலாம். இலங்கையில் உட்படுத்தற்கல்வி நடைமுறையில் உள்ளமையினால் இத்தகைய முறை நடைமுறையில் ஒழுங்குபடுத்தப்படவில்லை.

### அறிவைப் பகிர்வதற்குச் சந்தர்ப்பம் கொடுத்தல்

மீத்திறன் உடைய மாணவர்கள் தொலைக்காட்சி, பத்திரிகை, வானொலி, கணனி முதலிய சாதனங்கள் மூலம் அவர்கள் அறிவினைப் பெறுவார்கள். அவ்வாறு பெற்ற அறிவினை மற்றவர் களுடன் பகிர்ந்துகொள்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுத்த லோடு, புது அறிவையும் பெறுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்தல்.

### அழகியல் உணர்வை ஏற்படுத்துவதற்கு வழிகாட்டுதல்

இவர்களுடைய சிந்தனையினைத் திருப்பிவிடுவதற்காக அழகியற் கலைகளின்பால் ஊக்கப்படுத்த வேண்டும். சித்திரம் கீறுதல், இசையுடன் பாடுதல், நடித்தல் முதலிய செயற்பாடுகளைச் செய் வதற்கு வழிப்படுத்தல்.

### தங்கள் அனுபவங்களை வழங்குதல்

மாணவர்களது வேறுபட்ட ஆற்றல்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக அவசியமான அனுபவங்களை வழங்குதல் வேண்டும். இதற்காக அவர்களுடைய ஆற்றல்களை மதிக்கவேண்டும். அத்தோடு அவர்களுக்கு ஆலோசனை வழங்குதல் அவசியமாகின்றது.

### நேரத்தினைப் பயனுள்ள வகையில் கழிப்பதற்கு வழிப்படுத்தல்

மீத்திறன் உடைய மாணவர்கள் எப்போதும் செயற்படக்கூடியவர்கள். ஆகவே, அவர்களுடைய செயற்பாடுகளைச் சிறப்பாக முன்கொண்டு செல் வதற்கு நேரத்தினைப் பயனுள்ளவகையில் செலவு செய்வதற்கான பயிற்சிகளையும் முயற்சிகளையும் கொடுக்கவேண்டும்.

### ஆற்றல்களை ஊக்கப்படுத்தல்

மீத்திறன் உள்ள மாணவர்களின் செயற்பாடு நேரியவழியில் செல்வதற்கு ஆசிரியர் உதவிபுரிதல் வேண்டும். அவர்களை ஊக்கப்படுத்துவதன் வாயிலாக அவர்களது ஆற்றுகைத்திறன் மேலும் அதிகரிக்கும். அதற்காக ஆசிரியர் அவர்களது திறமைகளைப் பாராட்டி ஊக்கப்படுத்தவேண்டும்.

### வகுப்பேற்றம்

மீத்திறன் உடைய மாணவர்களை வகுப்பேற்றம் செய்வது சிறந்தது. ஒரு வகுப்பிலிருந்து மற்ற வகுப்புக்கு வகுப்பேற்றம் செய்யலாம். உதாரணமாக, தரம் 3 இல் கல்வி கற்கும் மாணவனை நேரடியாகத் தரம் 4க்கு வகுப்பேற்றலாம். இவ்வாறான முறை தொடர்ந்து இடம்பெற்றால் சமூகமுதிர்ச்சி பெறமுடியாமல் போவதற்கும் வாய்ப்புள்ளது. இன்று இலங்கையில் அத்தகைய செயற்பாடுகள் முன்கொண்டு செல்லப்படுவதில்லை.

### பாடவிதானத்தை வளம்படுத்தல்

பாடவிடயங்களை அந்தந்த வகுப்புக்குரிய மட்டத்தோடு மட்டுப்படுத்தாமல், அவற்றிலும் பார்க்க உயர்ந்த மட்டத்தில் கற்பதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்த வேண்டும். இதற்காக ஆசிரியர் விசேட

வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துவது அவசியமானதாகும். மீத்திறனுடைய மாணவர்களை அழைத்து பாடவிதானத்தில் உள்ள அலகுகளை ஆழமாகக் கற்பதற்கும் வழிப்படுத்தி அதனோடிணைந்த செயற்பாடுகளைச் செய்வதற்கு ஊக்கப்படுத்துதல் வேண்டும். இவர்களுக்கான கண்காணிப்பும் அவசியமாகும்.

### மேல் வகுப்பு மாணவர்களுடன் இணைத்துக் கற்பித்தல்

மீத்திறன் உடைய மாணவர்களை அதற்கு முந்திய வகுப்பு மாணவர் களுடன் சேர்ந்து கற்பிக்கலாம். அதனால் மாணவனுடைய மீத்திறன் அளவினை இலகுவாக அடையாளப்படுத்திவிடலாம்.

### கணினியைப் பயன்படுத்த வழிப்படுத்தல்

ஏனைய மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பதற்காக மீத்திறன் உள்ள மாணவர்களை கணனிக்கூடத்திற்கு அனுப்பி அல்லது, அதற்குரிய வசதியினைச் செய்துகொடுத்து கணினி மூலம் தானே கற்பதற்கான வாய்ப்பினைப்பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்.

### நூலகப் பயன்பாடு

நூலகப் புத்தகங்கள், மேற்கோள் நூல்கள் ஆகியவற்றைப் படிக்க ஊக்குவிக்க வேண்டும். இதனால் பாடம் சம்பந்தமாகவும் பாட விதானத்திற்கு அப்பால் நின்றும் சிந்திக்க வாய்ப்பு ஏற்படுகின்றது.

### கடினமான பயிற்சி

சிக்கல்களை தீர்க்க பயிற்சியளிக்கலாம். சிக்கல்களின் தீர்வை மாற்று முறையில் காண்பதற்கு ஊக்குவிக்க வேண்டும். இதற்காகப் பயிற்சி களைக் கொடுப்பது சிறந்தது.

### விசேட கற்பித்தல் முறை

பாடங்களை கற்பிக்கக் கண்டறிமுறை, ஆய்வறிமுறை, சிக்கல் தீர்க்கும்முறை மற்றும் கலந்துரையாடல் முறை முதலிய பொருத்த மான முறைகளைக் கையாண்டு கற்பிக்கலாம்.

### சுற்றுலா

கல்விச்சுற்றுலாவினை ஏற்பாடுசெய்து கற்பித்தல் - கற்றலுடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்கு முன்னுரிமைகொடுத்து துலங்கச் செய்தல் அவசியமானதாகும்.

### விவரங்களைத் திரட்டுதல்

விவரங்களைத் திரட்டுதல், அட்டவணைப்படுத்துதல் மற்றும் விளக்க மளித்தல் போன்ற செயல்களுக்கு வாய்ப்புகளைக் கொடுத்தல்.

### கண்காணிப்பு

மீத்திறன் குறைந்த மாணவர்களை கண்காணிக்க, மேற்பார்வை படிப்பை பார்வையிட இம்மாணவர்களை பயன்படுத்தல்.

### உபகரணங்களை அமைக்க ஊக்கப்படுத்தல்

கற்பித்தல் - கற்றலுடன் தொடர்புடைய சிறப்பான உபகரணங் களை அமைக்க இவர்களை ஊக்குவிக்கலாம்.

### ஆக்கங்களை எழுதுவதற்கு ஊக்குவித்தல்

கட்டுரை, கவிதை, குறுநாடகம், சிறிய கதை போன்ற பல்வேறு ஆக்கங்களை எழுதுவதற்கு இவர்களை ஊக்குவிக்கலாம்.

### மாணவர்களின் தெரிவுக்கு முன்னுரிமையளித்தல்

படிக்கவிரும்பும் பாடங்களை தேர்ந்தெடுக்க இம்மாணவர்களுக்கு முழு உரிமை வழங்கவேண்டும்.

### மீத்திறன் மாணவர்களுக்கான மதிப்பீடுகள்

1. குழு நுண்மதிச் சோதனை
2. தேர்ச்சி அறிக்கை
3. தனியாள் நுண்மதிச் சோதனை
4. ஆக்கவேலைச் சோதனை
5. மொழி ஆற்றலை அளவிடுதல்
6. விரிவானதும் தொடர்ச்சியானதுமான மதிப்பீடுகள்

இந்த வகையான சோதனை முறை, அபிவிருத்தி அடைந்த நாடு களில் மீத்திறன் உடைய பிள்ளைகளைக் கண்டறிவதற்காகப் பயன் படுத்தப்படுகின்றது.

### மாணவர்களை வேறுபடுத்தி அறிதல்

சாதாரண பிள்ளைகளில் இருந்து மீத்திறன் உடைய பிள்ளைகளை வேறுபடுத்தி அறிவதற்காக கத்தெறின் சொக்ஸ் மயில்ஸ் மாரிசன் (Cathorene Cox Miles Martinson), போல்ட்வின் (Boldwin) ஆகியவர்கள் மேற்கொண்ட பரிசோதனைகளில் இருந்து பின்வரும் தகவல்கள் பெறப்பட்டன. இதன் அடிப்படையில் மாணவர்களை இலகுவாக வேறுபிரித்து அறிந்து கல்வியினைப் புகட்ட முடியும் என்பது அவர்க ளுடைய பரிசோதனையின் முடிவாகும். இந்த முறையினை வகுப்ப றையில் பயன்படுத்தி ஆசிரியர் மாணவர்களை இனங்கண்டு கற்பித்தல் - கற்றலை இலகுவாக முன்கொண்டு செல்லமுடியும்.

1. சுயாதீனமான சிந்தனை
2. ஞான சக்தி
3. ஆழமான விளக்கம்
4. ஞாபக சக்தி
5. ஆக்கத்திறன்
6. உற்பத்தித் திறன்
7. நம்பிக்கைத் தன்மை
8. வேலையில் ஈடுபடும் தன்மை
9. மற்றவர்கள் மீது செலுத்தும் செல்வாக்கின் அளவு
10. உறுதிப்பாடு
11. மற்றவர்களை விட முன்னணியில் நிற்கும் விருப்பம்
12. எதிர்கால எதிர்பார்ப்புக்களை அடையும் விருப்பம்

### விசேடநிபுணத்துவம்

மீத்திறனுடைய மாணவர்களில் விசேட நிபுணத்துவம் கொண்ட மாணவர்களும் இருப்பார்கள். மீத்திறன் உள்ள மாணவர்கள் பல விடயங்களில் தங்கள் திறமையினை வெளிப்படுத்துவார்கள்.

ஆனால், விசேட நிபுணத்துவம் உள்ள பிள்ளைகள் ஒரு விடயத்தில் அதீத கவனம் காட்டுவார்கள். அவர் அத்துறையில் சிறப்புத் தேர்ச்சி உடையவராகக் காணப்படுவார். அவர் அந்த விடயம் பற்றியே சிந்திப்பார்கள். அவர்களைக் கையாள்வதிலும் ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும். இத்தகைய மாணவர்கள் பிற்காலத்தில் கண்டுபிடிப்பாளர்களாகவும் விஞ்ஞானிகளாகவும் வருவதற்கு அதிக வாய்ப்புக்கள் எழுகின்றது. இவர்களுக்காக ஆசிரியர் கற்பித்தல் முறையினை வடிவமைத்துக்கொள்வது அவசியமாகின்றது.

# 4

# ஆக்கத்திறனுடைய பிள்ளைகள்

புத்தாக்க உலகில் கல்வி உளவியல், மாணவரது கற்றலை அறிவியல் பூர்வமாக விளக்கமுற்படுகிறது. இதற்கு முக்கியமாக இரு காரணங் கள் உள்ளன. ஒன்று மனிதனது சுதந்திரமான சிந்தனையும், தனித் தன்மையும் கட்டுப்படுத்துகின்ற நிலை பல நாடுகளில் காணப்படு கின்றன. இரண்டாவது தொழினுட்ப சமுதாய வளர்ச்சிக்கு புதிய கருத்துக்களும் கண்டுபிடிபிடிப்புக்களும் தேவைப்படுகின்றன. இதற்கான அடிப்படை, ஆக்கச் செயற்பாடே என்பதோடு, ஆக்கச் செயற்பாட்டின் விளைவு புதுமையுடையதாக (Novelty) இருக்கும் என்றும் குறிப்பிடுவர். ஆக்கத்திறன் ஆக்கச் சிந்தனையுடன் தொடர்பு டையது. ஆக்கச்செயற்பாடு அமைவதற்கு உதவக்கூடிய பல்வேறு பண்புகள், ஆற்றல்கள் ஆகியவற்றின் தொகுப்பு ஆக்கத்திறனாகின்றது. பழைய எண்ணங்களை புதுவடிவத்தில் அமைப்புறச் செய்தலும், பழைய எண்ணங்களிடையே புதுத்தொடர்புகளைக் காணுதலும் ஆக்கச் சிந்தனையுடன் தொடர்புபட்டதாகும். பொதுவாகவே, ஆக்கச் செயற்பாடு என்பது அவரவர் உழைப்பில் உருவாவதாகும். ஆக்கத்திறன், புதியனவற்றைப் புனையும் திறன் போன்ற சொற்கள் கல்வி உலகில் இன்று பரவலாகப் பேசப்படுகின்றது. முழுமை யாகவோ பகுதியாகவோ புதுமையை இனங்காணலும் வெளிப் படுத்தலும் என ஆக்கச் செயற்பாடு பொதுவாகக் கொள்ளப்படுகின்றது. அதன் விளைவுகள் காட்சி வடிவிலோ கருத்து வடிவிலோ அமைய லாம். மரபுவழி நடத்தையைவிட்டு மாற்றுவழியில் சிந்தித்தல், புதிய தொடர்புகளைக் கண்டறிதலும் பழைய அமைப்புக்களைப் புதிய உச்சங்களை நோக்கி நிலைமாற்றஞ் செய்தலும், பிரச்சினையை விடுவித்து புத்தாக்கங்களை ஏற்படுத்துவதும் ஆக்கச் செயற்பாடு எனக் கொள்ளப்படுகின்றது.

ஸி.ஆர்.ரோஜர்ஸ் (**C.R.Rogers**) என்பவரின் வரையறைப்படி ''ஆக்கச் செயற்பாடு என்பது ஒருவரது தனித் தன்மைக்கும் அவரது வாழ்வில் எதிர்ப்படும் பொருட்கள், மனிதர்கள், நிகழ்வுகள், சூழ் நிலைகள் ஆகியவற்றிற்கும் இடையே ஏற்படும் இடைவினையினால் புதுமையான பொருட்களோ, தொடர்புகளோ விளைவதாகும் என்றார். கார்ல் ரோஜர்ஸின் திசைகாட்டா அணுகுமுறையின் பாதிப்பு கல்வி முறையிலும் பெரிதாகக் காணமுடிகிறது. ஒருவர் தானே தனக்குகந்த திசையைத் தேடும்போது அவருக்கென்று மிகப் பொருத்த மான திசையை நிர்ணயிக்கமுடிகிறது எனும் அடிப்படையில் மாணவர் மையக்கல்வி அமைகிறது. இக்கல்வி முறையில் மாணவரே தன் தேவைக்கேற்ப தன் கல்வித் தேவைகளை நிர்ணயம் செய்கிறார். இங்கு ஆசிரியரின் பங்கும், பணியும் ஒரு வழிநடத்தலையே மைய மாகக் கொண்டிருக்கும். ஆசிரியர் கற்றுக் கொடுத்து மாணவர் அதை மனப்பாடம் செய்வதல்லாமல், மாணவரே முன்சுறுசுறுப்புள்ள வனாக (Proactive) கற்றுக்கொள்ளும் பணியில் இறங்குவார். அவருக்கு உதவி தேவைப்படும் போது மட்டுமே ஆசிரியரை அணுகுவார். கார்ல் ரோஜர்ஸின் உளவியல் கருத்துக்களில் மனிதனின் தனித் துவத்துக்கு மிகவும் முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு தனி மனிதனிதனும் அவன் அவனுக்கென்ற தனித்துவமான சூழ் நிலையில் வளர்ந்து மற்றவர்கள் அனைவரையும் விட வித்தியாசமான நபராக இயல்பு பெறுகிறான். அசல் மற்றும் மதிப்பு ஆகியன ஆக்கத் திறனுடைய மாணவர்களிடம் காணப்படும் சிறப்புக்களாகும்.

### ஆக்கத்திறன் பண்புகள்

இறுதியில், ஆக்கத்திறன் விளைவு பிறரால் உணரக்கூடிய அல்லது, துய்க்கக்கூடிய வகையில் அமையும். புதுப் பொருளோ புதிய வழிமுறைகளோ இவற்றுள் வருகின்றன. ஒரு செய்யுள், ஒரு பாடல், ஓர் அறிவியல் கோட்பாடு, ஓர் இயந்திரம் போன்ற படைப்புக்கள். பொதுவாகவே ஆக்கத்திறன் இயற்கையிலே குழந்தைகளிடம் அமைந்து காணப்பட்டாலும், பொருத்தமான கற்பித்தல் - கற்றல் முறைகள் மூலம் அவற்றை மலரச் செய்யவும், வளரச் செய்யவும் முடியும் என்று நம்பப்படுகின்றது. ஆக்கச் சிந்தனை விளைவு பிறரால் உணரக்கூடியதாக இருத்தல் வேண்டும்

என்று சிலர் கூறினாலும், அதன் உள்ளகம் புதியது புனைதலாகும். ஆக்கத்திறனால் தோன்றும் படைப்புக்கள் படைப்பாளிக்கு மகிழ்ச்சியையும், திருப்தியையும் அளிக்கின்றன. ஒவ்வொருவரது ஆக்கத் திறன் சிந்தனையும் படைப்பும் தனித்தன்மை வாய்ந்தவை. படைப்பாளிகள் ''ஒன்றிப்போயிருத்தலை'' வெளிப்படுத்தும் கூற்றுக்களை அதிகம் பயன்படுத்துவார்கள். உதாரணமாக பார்த்தால் இது என்னுடைய தனித்த கருத்து, நான் இந்தப் பிச்சைக்காரனுக்கான தீர்வைக் கண்டுபிடித்துள்ளேன் போன்ற சொல்லாடல்கள் இதனை விளக்குகின்றன. ஆக்கத்திறன் விரிசிந்தனையோடு தொடர்புடையது. இது குறிப்பிட்ட தூண்டலுக்குச் சாத்தியமான பல்வேறு துலங்கல்களைத் தோற்றுவிக்க முயல்கின்றது. புதிய கோணத்தில் சிந்தித்தல், ஒரு பிரச்சினையைப் பல்வேறு வழிகளில் கையாள முற்படுதல் போன்றன விரிசிந்தனையின் பண்பாகும். ஏற்கனவே உணரப்பட்ட வழிமுறைகளையே கையாள்வது புதியன புனைதலுக்கு வழிவகுக்காது. மாறாகப் அது பழக்கத்தின் விளைவால் உண்டாகும் செய்திறன் மேம்பாட்டை அதிகரிக்கும். ஆக்கத்திறன் பல்வகைப்பட்டவை. இது புதிய அறிவியல் கண்டுபிடிப்புக்கள், கவிதை புனைதல், சிற்பங்கள் வடித்தல், ஓவியம் தீட்டுதல், இசை அமைத்தல், உடைவடிவமைப்பு, உணவுப்பொருட்கள் தயாரித்தல், பல்வேறு தொழில்களில் ஏற்படுத்தப்பட்ட செயற்பாடுகளும் அமைப்பு முறைகளும் போன்ற நம் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் வெளிப்படக் கூடியவையாக அமையப்பெறுகின்றன.

கில்பேர்ட் ஆக்கத்திறனின் முக்கிய பண்புகளைக் குறிப்பிடுகின்றார். அவை பிரச்சினைகள் பற்றிய நுண்ணுணர்வு, தடையின்றித் துரிதமாகச் சிந்தித்தல், சிந்தனையில் நெகிழ்ச்சி, தனித்தன்மை, அகக்காட்சித்தாவல், விடாமுயற்சி, புதிய தொடர்புகளைக் காண விழைதல் போன்றனவாகும். ஆக்கத்திறனுக்கு கற்பனை மட்டுமிருந்தால் போதாது, இக்கற்பனைக்கு உதவக்கூடிய பொருளறிவும் இருத்தல் அவசியமாகும். இப்பொருளறிவைப் புதியமுறையில் பயன்படுத்தவும், இவற்றுக்கிடையே புதுத் தொடர்பைக் கண்டு கொள்ளவும் கற்பனை உதவுகின்றது. ஒவ்வொரு நபரிடமும் ஆக்கத்திறன் இருக்கிறது ஆனால், அளவில்தான் வேறுபடுகின்றது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

**ஆக்கத்திறன் செயற்பாட்டின் படிநிலைகள்**

ஆக்கத்திறன் செயற்பாடுகள் பற்றி அறிஞர்கள் பலர் குறிப்பிடு கின்றபோதும், அவற்றுள் பொதுத்தன்மை காணப்படுவதனை அவதானிக்கமுடிகின்றது.

கிரகாம்வா ஆக்கச் செயற்பாட்டுக்காக நான்கு படிநிலைகளைக் குறிப்பிடுகின்றார்.

**ஆயத்தம்** இது பிரச்சினையினை ஒருமுகப்படுத்தல், தொடர்பு டைய விபரங்களைச் சேகரித்தல், பிறரோடு விவாதித்தல், மேற் கொள்ளவேண்டிய உத்திகளைச் சிந்தித்தல் என்பனவற்றை உள்ளடக்குகின்றது.

**உள்வளர்ச்சி** இது ஏற்கனவே பெற்ற அனுபவங்களையும், சேகரித்த விவரங்களையும் உள்வாங்கி, புரட்டிப்போட்டுப் புதிய கோணத்தில் சிந்தித்தல், வெளிப்புறத் தொந்தரவுகள் இன்றி தனித்திருத்தல் அவசியம் என்பனவற்றை கொண்டுள்ளது.

**உள்ளொளி தோன்றுதல்** என்பது பிரச்சினைக்கான தீர்வு தோன்றுவதை, கோஹ்லரின் சிந்தனையில் விடப்பட்ட மனிதக் குரங்கு, தொங்கவிடப்பட்ட வாழைப்பழத்தினை பெற்றதன் வாயிலாகத் தெளிவுபடுத்தப்படுகின்றது. அதாவது, உட்காட்சி எப்போது வேண்டுமானாலும் நிகழக்கூடும். கனவில்கூடத் தோன்ற லாம் என்பதனை விளக்குகின்றது.

**சரிபார்த்தல்** என்பது தீர்வு சரிதானா என்று சோதித்துப் பார்க் கப்படும். சோதனை நிகழ்த்தி அதன் அடிப்படையில் பெறப்பட்ட தீர்வுகளுக்குத் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டு, முழுமை யாக்கப்படுவதனைத் தெளிவுபடுத்துகின்றது. ஐ.ஏ.ரெய்லர் (1975) ஆக்கச் செயற்பாடு பற்றி ஐந்து படிநிலைகளைத் தந்துள்ளார். வெளியீட்டு ஆக்கமலர்ச்சி, விளைவுதரும் ஆக்கமலர்ச்சி, கண்டு பிடிப்புமுனைப்பு ஆக்க மலர்ச்சி, புத்தாக்கமுனைப்பு ஆக்கமலர்ச்சி, உயர்நிலை முகிழ்ப்பு ஆக்கமலர்ச்சி என்பனவாகும். வல்லாஸ் ஆக்கச் செயன்முறை நான்கு படிநிலைகளைக் கொண்டதாக விளக்கு கின்றார். தயாரிப்புநிலை, அடைகாக்கும்நிலை, ஒளிவிடும் நிலை, மீளாய்வுப்படுத்தும் நிலை ஆகியனவாகும். றொஸ்மன் என்பவர் ஆக்கச் செயன்முறை ஏழு படிநிலைகளைக் கொண்டதாகக் குறிப்

பிடுவார். ஒரு தேவையை அல்லது பிரச்சினையை உற்றுநோக்கல், தேவையைப் பகுத்தாராய்தல், கிடைக்கப்பெறக்கூடிய தகவல்களை அளவு செய்தல், தீர்வுகளை உருவாக்கிக்கொள்ளல், தீர்வுகளைத் திறனாய்வுப்படுத்தல், புதிய எண்ணம் அல்லது புத்தாக்கத்தின் பிறப்பு, முன்னைய தீர்வுகளை அடிப்படையாகக்கொண்ட பொருத் தமான தீர்வுக்கு வருதல் என்பன. றொறன்சும் மேயஸ் என்பவர் ஆக்கச் செயன்முறை ஏழு படிநிலைகளைக் கொண்டதாகக் குறிப் பிடுவார். பிரச்சினை பற்றி பிரக்ஞை கொள்ளல், அதனுடன் இணைந்த தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், தீர்வுகளைத் தேடுதல், முடிவுகளைத் தொடர்பாடலுக்குக் கொண்டுவருதல் ஆகியன. ஸ்ரெயின் என்பவர் ஆக்கச் செயன்முறை ஏழு படிநிலை களைக் கொண்டது என்கின்றார், தயாரித்தல் நிலை, கருதுகோளாக்கும் நிலை, கருதுகோளைப் பரிசீலிக்கும் நிலை, முடிவுகளைத் தொடர் பாடல் செய்யும் நிலை ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றார்.

## ஆக்தத்திறன்மிக்க குழந்தைகளைக் கண்டறிதல்

ஆக்கத்திறன்மிக்க குழந்தைகளைக் கண்டறிவதற்காகக் கீழ்வரும் முறைகளைப் பயன்படுத்துகின்றனர். ஒன்று ஆக்கத்திறன் சோத னைகளைப் பயன்படுத்துதல். மற்றயது சோதனை அல்லாத பிற வழிகளைப் பயன்படுத்துதல். ஆக்கத்திறன் சோதனையில் சில மொழி உருப்படிகளையும், வேறு சில படங்களையும் பயன்படுத்து கின்றனர். இயல்பான பயனுக்கு அப்பாற்பட்ட புதிய பயன்களும்: புத்தகத்தின் பயன்கள், நடக்கவியலா நிகழ்ச்சிகள், ஐந்து நிமிடங் களில் எத்தனை நிகழ்ச்சிகளைக் குறிக்கமுடியுமோ அதனைக் குறித்தல், இவ்வாறு நிகழ்ந்தால் எனக் கற்பனை செய்து கொள்ளல், விளையாட்டுப்பொருட்களை மேலும் சிறப்பாக ஆக்குதல், முடிவுறாத உருவங்களை வரைந்து முடித்து, அவற்றுக்குப் பெயர் சூட்டுதல், காகித வெட்டுருக்களைக் கொண்டு புதிய படங்களை உருவாக்குதல், புலக்காட்சியைத் தூண்டும் வகையில் விடையளிக்கச் செய்தல் போன்ற செயற்பாடுகள் அமையப்பெறுகின்றன. இதேபோல் சோதனை அல்லாத பிறவழிகளையும் பயன்படுத்துகின்றனர். உற்று நோக்குதல், நேர்காணல், தரஅளவுகோல், சரிபார்க்கும் பட்டியல், ஆளுமைப்பட்டியல் போன்றனவாகும்.

ஆக்கத்திறனின் புறக்கூறுகளாக செயலில் ஈடுபடும்போது முழு ஈடுபாடு கொண்டிருத்தல், ஒருவருடைய ஆர்வமிகுதியினைக் கண்டறிதல், பேச்சில் ஒப்புவமைகளை அதிக அளவில் பயன் படுத்துதல், எழுதுதல், படித்தல், ஓவியம் வரைதல், போன்றவற்றில் அதிக அளவு உடற்சக்தியினைச் செலவழித்துச் செயற்படுதல், பிறர் கூறுவதை உடனடியாக ஏற்றுக்கொள்ளாமை, ஒரு கருத்தின் உண்மையைப் பலகோணங்களில் ஆராய்தல், தனது புதிய கருத்துக்களைப் பிறரிடம் எடுத்துக்கூறுவதில் ஆர்வம், ஆக்கச் செயல்களில் தொடர்ந்து சலிப்பின்றி ஈடுபடுதல், புரட்சியான கருத்துக்களை, அச்சமும் கூச்சமுமின்றி சுதந்திரத்துடன் எடுத்துக் கூறுதல், எளிதில் கவனச் சிதைவடையாமை, பிரச்சினை ஒரு விடை யோடு நிறைவடையாமல், மாற்றுவிடைகளைக் கண்டுபிடிக்க முயலுதல், பொருத்தமற்ற கருத்து என முதலில் படுவதை ஆராய முற்படுதல் போன்றனவற்றை அடையாளப்படுத்துகின்றனர்.

### ஆக்கத்திறன் உள்ள குழந்தைகள்

ஆக்கத்திறன் உள்ள குழந்தைகள் பகல் நேரத்தில் மட்டுமன்றி தனியாக இருந்து வேலை செய்ய விரும்பவார்கள். விநோதமான எண்ணம் கொண்டவர்களாக இருப்பார்கள், முரண் பாடான கருத்துக் களைப் பகிர்ந்து கொள்வார்கள். மீத்திறன் வேறுவேறு தன்மை கொண்ட நிலையில் இருக்கும், ஆனால் குறிப்பிட்ட மீத்திறன் உள்ள குழந்தைகளிடம் ஆக்கத்திறன் இல்லாமலும் இருக்கலாம். எளிய வேலைகளில் உயர்ந்த தரத்தை வற்புறுத்துவது, நெகிழ்ச் சியற்ற ஒரே மாதிரியான ஒப்படைகளைக் கொடுத்தல், தேர்வு மதிப்புக்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல், எதேச்சதிகாரப் போக்குடைய ஆசிரியரும் வகுப்பறைச் சூழலும் அமையப்பெறல் போன்ற எண்ணப்பாடுகள் இருந்தபோதும் குழந்தைகளிடையே ஆக்கத்திறனை வளர்ப்பதற்காக பல அறிஞர்கள் பல்வேறு கருத்துக் களை முன்வைக்கின்றனர்.

கெல்லர் என்பார், கல்வி ஏற்பாடு மாணவர்களுக்கு அறை கூவலாக அமைதல் வேண்டும், மாணவர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியான வெவ்வேறு ஒப்படைப்புக்களை அளித்து ஆசிரியர் களின் தகுந்த மேற்பார்வையில் அவற்றைத் தயாரிக்கச் செய்தல்

வேண்டும். சிறந்த திறன்மிக்க ஆசிரியர்களின் சேவையை மாணவர் களுக்குக் கிடைக்கச்செய்தல், உண்மை என்பது தெரிவிப்பதல்ல, மாறாகத் தேடி அடைதலாகும் என்ற தத்துவத்தில் நம்பிக்கை வைத்தல், ஆசிரியர்களுக்கு பாடப் பொருளிலும் கற்பித்தல் முறையிலும் சேவைக்காலப் பயிற்சியளித்தல் வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றார். டாரென்ஸ் என்பவர், மாணவர்கள் தொடுக்கும் புதுமையான வினாக்களை ஆசிரியர் மதித்தல், தங்கள் கருத்துக்களுக்கு மதிப்புண்டு என்பதை மாணவர்களுக்கு உணர்த்தல், மாணவர்களின் கற்பனைக் கருத்துக்களை வரவேற்று விவாதித்தல், மதிப்பிடப் படுவோமோ என்ற அச்சமின்றி, சிலவேளைகளிலாவது மாணவர்கள் சுதந்திரமாக இயங்க அனுமதித்தல், மதிப்பிடுதலில் காரணங்களையும் விளைவுகளையும் சுட்டிக்காட்ட வேண்டுமே தவிர ''இது நன்று அது தவறு'' என்று ஒட்டு மொத்தமாகக் கூறுவதைத் தவிர்த்தல் வேண்டும் என்றும் தெளிவுபடுத்துகின்றார். டெமாஸ், கோவன் ஆகியோர் செயல் இடம்பெறும்போது அவற்றுக்கு உரமூட்டுதல், செயற்பாட்டினைச் செய்வதற்குத் தூண்டுதல், உளவியல் பாதுகாப் பையும் சுதந்திர உணர்வையும் தூண்டுதல், வழிகாட்டுவதன் வாயிலா கக் புதியவற்றைக் கண்டறியச் செய்தல், ஒவ்வொரு செயற்பாட்டு முடிவிலும் உற்சாகப்படுத்தல் வேண்டும் என்றும் குறிப் பிடுகின்றனர்.

ஆக்கத்திறன் வளர்ச்சிக்காக பல்வேறு உத்திகளைப் பல அறிஞர் கள் கூறியபோதும், அவற்றினைக் கீழ்வரும் பொது உத்திமூலம் வகைப்படுத்துகின்றனர். வகுப்பறையில் கருத்துக்களை அச்சமின்றி வெளிப்படுத்த மாணவர்களுக்குச் சுதந்திரமளித்தல், எந்தப் பாடப் பிரச்சினை பற்றியும் புதிய முறையிலும், மரபுவழி விடைகளிலிருந்து விலகிய முறையிலும் விடையளிக்க ஊக்கப்படுத்தல், மாணவரது ஆராய்தல் பண்பினைத் தூண்டுதல், வைதல், குறைகூறுதல், தண்டனைகள் ஆகியன இல்லாத வகுப்பறைச் சூழ்நிலை உருவா வதற்கு உதவுதல், தேர்வு வினாக்கள் வெறும் நினைவாற்றலை மட்டுமே சோதிக்காமல் சிந்தனையைத் தூண்டும் வகையில் இருத்தல், கற்பித்தல் முறைகள் சிந்தனையைத் தூண்டும் வகையில் இருத்தல், நல்லபடிப்பு மற்றும் கற்றல் பழக்கங்களை ஊக்குவித்தல், நூலகத்தையும் அறிவியல் ஆய்வகத்தையும் அதிக அளவில்

மாணவர்கள் பயன்படுத்தும் வண்ணம் கற்றல் - கற்பித்தலை சுயகற்றலடிப்படையில் முன்கொண்டு செல்லல், கற்பிக்கும் பொழுது மூளை விசைப்படுத்தல் போன்றவவைகளை அடையாளப்படுத்த முடிகின்றது.

### குவிசிந்தனையும் விரிசிந்தனையும்

கோல்ப்(1974) முன்மொழிந்த கற்றல் கொள்கை நான்கு நிலைகளைக்கொண்ட கற்றல் செயலின் அடிப்படையில் நான்குவித கற்றல் பணிகளை (Learning Styles) விபரிக்கின்றது. கற்றல் பணி என்பது பல்வேறு நிலைகளில் அமைந்திருந்தபோதும் அவை இரு முக்கிய மாறிகளின் விளைவால் உருவாகின்றன. ஒன்று தகவல்களைக் கையாளும்முறை. (Processing information) மற்றையது ஒன்றை நோக்கும்முறை (Perception) இந்த இரண்டு மாறிகளின் இடைவினைகளால் பின்வரும் நான்கு கற்றல் பணிகள் உருவாகின்றன. விரிசிந்தனை (உணர்தல் மற்றும் பார்த்தல்), எதையும் முழுமையாக உள்வாங்கி தன்மயமாக்கிக்கொள்ளுதல்.(பார்த்தல் மற்றும் சிந்தித்தல்), குவிசிந்தனை (செய்து பார்த்து சிந்தித்தல்.), ஒன்றிணைதல் (செய்து பார்த்தலும் உணர்தலும்) என்பனவாகும்.

### விரிசிந்தனை

ஒரு குறிப்பிட்ட தூண்டல் வெவ்வேறுவிதமான பல துலங்கல்களை வரவழைக்கும் விதத்தில் செயற்படுமானால் அதனை விரிசிந்தனையின் தோற்றுவாய் என்கின்றோம். இத்தகையவர்கள் வழக்கமான திசையில் சிந்திப்பதற்கு மாறாக புதுக்கோணங்களில் சிந்தித்து தீர்வைப்பெற முயற்சிப்பர். இதனைப் பக்கவாட்டுச்சிந்தனை (Lateral Thinking) என்போரும் உளர். விரிசிந்தனையாளர்கள் புதுக் கண்டுபிடிப்புக்களை நிகழ்த்துவர். அவ்வாறு படைத்தவற்றை குவிசிந்தனையாளர்கள் திறம்பட நிர்வகிப்பர். இத்தகையோர் எந்த வியடமானாலும் அவற்றைப் பல்வேறு கோணங்களில் நோக்குவதற்கு முற்படுவர். பல்வேறு தகவல்களைச் சேகரித்து கற்பனைகளையும் பயன்படுத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பர். அதாவது, பல்வேறு நிகழ்வுகளை வெவ்வேறு கோணங்களில் நோக்கி தமது அறிவைப்பெருக்கமுயல்வர்.

### குவிசிந்தனை

ஒரு குறிப்பிட்ட தூண்டலுக்கான துலங்கல் யாவும் ஒரே ஒரு இலக்கினை அடையும் விதத்தில் சிந்தனைப்போக்கு அமையுமானால் அதனைக் குவிசிந்தனை என்கின்றோம். இதனைச் செங்குத்துச் சிந்தனை என்று அழைப்போரும் உளர். அனைவராலும் ஏற்கக்கூடிய சரியான விடையை அல்லது, தீர்வைப்பெற முயல்வதே குவி சிந்தனையின் குறிக்கோளாகும். 12 + 12 = 24 இத்தகையோர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் ஆர்வம்கொள்வர். இவர்கள் தொழினுட்பம் வாய்ந்த பணிகளையே அதிகம் விரும்புவர். சமூகம் மற்றும் மனித உறவுகளைப் பேணுவதில் நாட்டம் கொள்வர். இத்தகையோர் தொழினுட்ப வல்லுநர்களாக விருப்பம் கொண்டிருப்பர். நடைமுறைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண விழைவர்.

### எதையும் முழுமையாக உள்வாங்கி தன்மயமாக்கிக் கொள்ளுதல் (பார்த்தல் மற்றும் சிந்தித்தல்)

எதையும் தர்க்கரீதியாகச் சிந்தித்து புரிந்துகொள்ள முற்படுவர். கருத்துக்களை அறிந்துகொண்டு, செய்து பார்த்துப் புரிந்துகொள்வதைவிட தெளிவாக விளக்கங்கள் பெறுவதிலேயே அதிக நாட்டம் கொள்வார்கள். இத்தகைய மாணவர்கள் அறிவியல் மற்றும் கணிதக் கற்றலில் சிறந்து விளங்குவர். கட்டுரைகளைப் படித்தல், விரிவுரைகளைக் கேட்டல், தர்க்கரீதியான எண்ணங்களை வடிவமைத்தல் ஆகியவற்றையே அதிகம் விரும்புவர்.

### ஒன்றிணைதல் (செய்து பார்த்தலும் உணர்தலும்)

தர்க்கரீதியான சிந்தனையைவிட எதையும் தானே செய்து பார்த்திட முனைவர். மற்றவர்கள் கண்டறிந்தவற்றைப் பயன்படுத்தி பரிசோதனை அணுகுமுறையைக் கையாளுவர். திட்டங்களை வகுத்து புதுப்புது அனுபவங்களைப் பெறுவதில் நாட்டம்கொள்வர். மற்றவர்கள் கண்டறிந்தவற்றையும் ஏற்றுக் கொள்ளத் தயங்கமாட்டார்கள்.

## ஆக்கத்திறனுக்கும் நுண்ணறிவுக்குமிடையேயான வேறுபாடுகள்

நுண்ணறிவுக்கு குவிசிந்தனையும், ஆக்கத்திறனுக்கு விரிசிந்த னையும் அடிப்படையாக அமைகின்றன. குவிசிந்தனையில் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய சரியான விடையை அல்லது தீர்வைப்பெறுவதே குறிக்கோளாகக்கொள்ளப்படுகின்றது. ஆனால், விரிசிந்தனையில் வெவ்வேறு விதமான பல்வகைத் தீர்வுகளை பெற முயற்சி செய்யப்படுகின்றது. நுண்ணறிவுச் சோதனை உருப்படி ஒவ்வொன்றுக்கும் ஒரே ஒரு சரியான விடையே உண்டு. ஆனால், ஆக்கத்திறன் சோதனையில் ஒவ்வொரு உருப்படிக்கும் பல துலங்கல்கள் அல்லது விடைகள் புனையப்பட வேண்டியிருக்கும். அதாவது, ஆக்கத் திறனுக்கு நுண்ணறிவு ஈவு பெற்றிருக்க வேண்டியதில்லை. (நுண்ணறிவு ஈவு உளவயதின் கீழ் காலவயது x 100 என அதன் சமன்பாடு அமைகின்றது) நுண்ணறிவு ஈவு உடை யோர் அதிக ஆக்கத்திறனுடன் திகழவேண்டியதில்லை. ஆனால், போதுமான சராசரி நுண்ணறிவு இன்றி ஆக்கத்திறன் தோன்ற வாய்ப்பில்லை. நுண்ணறிவுச் சோதனைகள் விரைவாகச் செயற் படுதலையும், சரியான விடை என்று ஒப்புக்கொண்டவற்றை வழங்கு தலையும் வலியுறுத்து கின்றன. விடையளிப்பதில் சோதிப்பவனின் தனித்தன்மைக்கு வாய்ப்பில்லை. ஆனால், ஆக்கத்திறன் சோத னைகளில் தனித்தன்மை, சிந்தனை நெகிழ்ச்சி, கருத்து விரிவாக்கம், துரிதமாகவும் தடையின்றியும் சிந்தித்தல், புதுமை படைத்தல், ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன. ஆக்கத் திறன் மிக்க குழந்தைகள் பலர் சமுதாயத்தில் பின்தங்கிய குழுக்களில் காணப்படுகின்றனர்.

### அரசாங்கம் கொடுக்கும் வாய்ப்பு

எதிர்கால சவால்களை வெற்றிகொள்வதற்குத் தேவையான திறமை களுடன்கூடிய படைப்பாற்றல் மிக்க இளைய சமுதாயத்தினரை உருவாக்கும்பொருட்டு, பாடசாலை மாணவரது திறமையினை விருத்திசெய்வதனை நோக்கமாகக்கொண்டு, ''சுபக'' புலமைப் பரிசில்லேலைத் திட்டமானது 2017ஆம் ஆண்டு முதல் நடை முறைப்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் ஆரம்பகட்டமாக

இடைநிலைக் கல்விப் பிரிவில் விசேட திறமைகளை வெளிப் படுத்திய, உரிய வருடத்தில் தரம் 12இல் அனுமதிக்கப்பட்டு உயர் தரக் கல்வியை ஆரம்பிக்கும் மாணவர்களிடையே தேர்ந்தெடுக்கப் படும் 1000 மாணவர்களுக்கு, 20 மாதகால வரையறைக்கு, ரூபா 50000 பெறுமதியான புலமைப் பரிசிலை சமனான 20 தவணைக ளாகப் பிரித்து வழங்கப்படுகின்றது. (மாதமொன்றுக்கு ரூபா 2500) (சுற்றுநிருப இலக்கம் 29/2017) இந்தப் புலமைப் பரிசிலின் நோக் கமாக "சுபக" மாணவர்களது விசேட திறமைகளை விருத்தி செய் வதோடு, அவர்கள் கல்வி இலக்குகளை அடைவதற்கான சந்தர்ப் பத்தையும் பெற்றுக்கொடுத்தல், நாட்டின் அபிவிருத்திக்கு விசேட பங்களிப்பினைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய திறமைகளுடன் கூடிய பல துறைகளில் நிபுணத்துவமுள்ள மாணவர்களுக்கு அத்துறைக ளில் உள்ள நிபுணத்துவத்தினை ஊக்கப்படுத்தல். இந்தப் புலமைப் பரிசில்களானது மூன்று துறைகளுக்கு வழங்கப்படுகின்றது.

1. புதிய கண்டுபிடிப்புக்காகப் பெற்றுக்கொண்ட வெற்றிகள்.
2. அழகியல் செயற்பாடுகளுக்காகப் பெற்றுக்கொண்ட வெற்றிகள்.
3. விளையாட்டுக்காகப் பெற்றுக்கொண்ட வெற்றிகள்.

சுருங்கிவரும் இன்றைய உலகில் ஆக்கத்திறனை மேம்படுத்துவ தற்காக பல்வேறு வழிகளில் சிந்தித்து வருகின்ற நிலையில், மாண வர்களிடையே ஆக்கத்திறனை மேம்படுத்துவதற்கு ஆசிரியர்கள் சிறப்பான ஒத்துழைப்பினை வழங்கவேண்டும். அதற்காக கற்பித்தல் - கற்றலை வினைத்திறன் உடையதாக மாற்றிக்கொள்வது அவசியமான தாகும். இந்த வகையில் இயல்புமீறிய மாணவர்களை இனங்கண்டு அவர்களைப் பொருத்தமான துறைக்கு ஊக்கப்படுத்துவது ஆசிரியர் களின் பணியும், பண்புமாகும். அவ்வாறான ஆக்கத்திறன் சிந்தனை உடையவர்கள் நாட்டின் அறிவுப்பொருளாதாரத்துக்கும் அதன் வளர்ச்சிக்கும் ஊன்றுகோலாக அமைவார்கள்.

# 5

# மெல்லக் கற்கும் மாணவர்கள்

கல்வியில் பின்தங்கிய மாணவர்கள், மெல்லக் கற்கும் மாணவர்கள் அருகி இன்று நுண்ணறிவு இயலாமை உள்ளவர்கள் என்ற பதம் கல்வி உலகில் பெரிதும் பேசப்படுகின்றது. இவர்களுடைய நுண்ணறிவு வீதம் 70க்கும் 80க்கும் இடையில் இருக்கும் என்று உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். பிரித்தானிய கல்வி உளவி யலாளரான ஸிறில்பேர்ட் என்பவரின் கூற்றுப்படி '' பாடசாலை வாழ்க்கையில் தனது வயதுக்குரிய வகுப்பிலும் பார்க்கக் குறைவான தரத்தில் கற்பதில் சிரமப்படும் மாணவர்கள் பின்தங்கிய மாணவர்கள் எனக் கூறலாம்'' என்றார். ஸிறில் பர்ட் (Cyril Burt) என்பவர் ''தன்னோடு ஒத்த வயதுடைய பிற குழந்தைகள் சாதாரணமாக எந்த வகுப்புக்குரிய வேலைகளை திறம்படச் செய்கின்றார்களோ, அதற்கு அடுத்த கீழ் வகுப்பு பாடவேளைகளையும் செய்யாதிருக்கும் மாண வர்களை பின்தங்கியவர்கள் என்று அடையாளப்படுத்துகின்றார்'' இத்தகைய நிலையில் உள்ள மாணவர்கள் தங்களுடைய வகுப்பைக் காட்டிலும் கீழ்வகுப்பு பயிற்சிகளைச் செய்வதிலும் குறைபாடுடைய வர்களாகத் திகழ்வார்கள். பொதுவாக இவர்களுடைய திறன் குறை பாடுடையதாகவே இருக்கும். அதனால் அத்தகைய மாணவர்களை முன்கொண்டு செல்வதில் ஆசிரியர் பல்வேறு கற்பித்தல் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டிவரும். இத்தகைய மாணவர்களில் அதிக மாணவர்களுக்கு கல்வியைப் பெற்றுக்கொடுக்க முடியும். ஆனால், அதிகமான மாணவர்கள் ஏனைய மாணவர்களைவிட குறைந்த அடைவுமட்டத்தில் உள்ளனர். இவர்கள் குறிப்பிட்ட அடைவை நோக்கி மெதுவாகவே முன்னேறுகின்றனர். மெல்லக் கற்கும் மாண வர்களை இருவகையாக அடையாளப்படுத்துகின்றனர்.

1. குறைவளர்ச்சியுடைய பிள்ளைகள்
2. உளப் பிற்போக்குடைய பிள்ளைகள்

**குறைவளர்ச்சியுடைய பிள்ளைகள்**

ஓரளவு குறை வளர்ச்சி

இத்தகைய மாணவர்களுக்குக் கல்வி புகட்டமுடியும். எழுதுவ தற்கும் வாசிப்பதற்கும் கற்பிக்கலாம். அத்தோடு கணித்தலையும் கற்பிக்கமுடியும் என்கின்றனர்.

குறைவளர்ச்சி

இத்தகைய மாணவர்களுக்கு குறிப்பிட்ட ஒரு மட்டம்வரைக் கற்பித்து, அவர்களில் அதிகமான மாணவர்களை எழுதவும், வாசிக்கவும் செய்யலாம்.

உளப் பிற்போக்குடைய பிள்ளைகள்

1. உளப் பிற்போக்கு மிக அதிகம் உடையோர்
2. உளப் பிற்போக்கு அதிகம் உடையோர்
3. ஓரளவு உளப் பிற்போக்குடையோர்
4. குறைவான உளப் பிற்போக்குடையோர்

உளப்பிற்போக்கு பின்வரும் காரணிகளுடன் தொடர்புடையது

1. குறைந்த விவேகம்
2. நடத்தைக் குறைபாடு
3. வளர்ச்சியின்போது உளப்பிற்போக்கு இயல்புகள் தோன்றுதல்.

மெல்லக் கற்போரின் பண்புகள்

1. இவர்களால் ஒரு விடயத்தினைப் விளங்கி விரைவாக முன் கொண்டு செல்வது கடினம்.
2. உண்மைப் பொருட்களைச் சிந்திப்பதிலும் கண்டறிவதிலும் சிக்கலும் தாமதமும் ஏற்படும்.
3. ஆர்வமும் கவனமும் குறைந்து காணப்படும்.

4. பரீட்சைகளில் மிகக் குறைந்த புள்ளிகளைப் பெறுவார்கள்.
5. ஒருவிடயத்தினை நிறைவு செய்வதற்கு மற்றவர்களுடைய உதவியை நாடுபவர்களாக இருப்பார்கள்.
6. செயற்பாடுகளைச் செய்வதில் தாமதம் உள்ளவர்களாக இருப்பார்கள்.
7. பாடசாலைக்கு நேரம் தாழ்த்தி வருவதுடன், சில நாட்களில் வராமலும் விடுவார்கள்.
8. நெறிபிறழ்ந்த செயற்பாடுகளுக்கு துணைபோனவர்களாக இருப்பார்கள்.
9. தனித்திருப்பதில் விருப்பம் கொண்டிருப்பார்கள்.
10. மிகச் சிறிய செயற்பாடுகளைச் செய்வதற்கு தைரியம் இல்லாமல் இருப்பார்கள்.
11. தன்னைச் சூழவுள்ள பொருட்கள் மீது புதுமை நாட்டம் இல்லாதவர்களாக இருப்பார்கள்.
12. பாடசாலை வேலைகளில் விருப்பம் காட்டமாட்டார்கள்.

**மெல்லக் கற்பதற்கான காரணங்கள்**

கல்வியில் மாணவர்கள் பின்தங்குவதற்கான காரணங்களாக சூழற் காரணிகளும், பரம்பரைக் காரணிகளும் தாக்கம் செலுத்துகின்றன. மரபு நிலைக் காரணிகளால் ஏற்படும் தாக்கம் தீவிரமானதாகவும், முழுமையாகச் சீர் செய்யமுடியாதவையாகவும் இருக்கலாம். ஆனால், சூழ்நிலைக் காரணிகளால் ஏற்படும் தாக்கம் அளவில் பாதிப்பு குறைவானதாகும். அதனைச் சீர் செய்யவும் முடியும். பொதுவாக மாணவர்களுக்கு வாய்ப்புக்கள் பொருத்தமாகக் கிடைக்காமையால்தான் அவர்களது திறமைக்கேற்ற சாதனை படைப்பதில் பின்தங்கி நிற்கின்றனர். பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள் இந்த நிலையினை அடைவதுண்டு. இலங்கையினைப் பொறுத்தவகையில் மாணவர்களுக்கான வாய்ப்பு அதிகம் கொடுக்கப்படுகின்றன. எல்லா மாணவர்களும் கற்கவேண்டும் என்பதற்கான கல்வி வாய்ப்பு இருந்தும் சில மாணவர்கள் கற்பதில் சிரமம் காட்டுவதனை அறியமுடிகின்றது. அதற்கு அவர்கள்

வாழும் சூழல், கலாசாரம், பண்பாடு, பொருளாதாரம், சமவயதுக் குழுக்கள், சமயநிறுவனங்கள் முதலிய காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. இவை மாற்றியமைக்கப்படும்போது கற்றலில் சிக்கலற்ற தன்மையினை முன்கொண்டு செல்ல வாய்ப்பு அதிகம் ஏற்படுகின்றது.

### மெல்லக் கற்போரைக் கண்டறிதல்

மெல்லக் கற்போரின் கல்வி ஈவு 70 தொடக்கம் 80 வரைக்குமாக இருக்கும். அவர்களைக் கண்டறிவதற்காகப் பின்வரும் சூத்திரம் பயன்படுகின்றது.

நுண்ணறிவு ஈவு அல்லது கல்வி ஈவு

$$= \frac{\text{உளவயது} \times 100}{\text{கால வயது}}$$

$= 5 \times 100 / 7$

$= 500 / 7$

$= 71.42$

$= 71$

சராசரி நுண்ணறிவு ஈவு அல்லது கல்வி ஈவு 71 ஆகும். மெல்லக் கற்போரின் கல்வி ஈவு 70 தொடக்கம் 80 வரையும் அமையும் என்பர்.

மேலும், இவர்களுடைய மருத்துவப் பரிசோதனை அறிக்கைகள், ஒழுங்கு நடத்தை பற்றிய அறிக்கைகள், சுற்றுச் சூழலில் சேகரிக்கப்பட்ட விபரங்கள் முதலியவற்றின் அடிப்படையிலும் கற்றலில் பின்தங்கிய மாணவர்களைக் கண்டறியலாம்.

### பாடசாலைகளில் மெல்லக் கற்போருக்கு உதவுதல்

1. மீளவலியுறுத்தல்

   ★ வகுப்பறைச் செயற்பாட்டினை வெற்றிகரமாக முன்கொண்டு செல்வதற்காக மீளவலியுறுத்தல் வேண்டும். மீளவலியுறுத்தல், சமூகரீதியான மீளவலியுறுத்தல், செயல் ரீதியான மீளவலியுறுத்தல், பொருள் ரீதியான மீளவலியுறுத்தல் என அமைகின்றன.

- ★ மெல்லக் கற்கும் மாணவர்கள் ஆற்றுகின்ற மிகச் சிறிய செயற்பாடுகளுக்காக மீளவலியுறுத்தல் செய்ய வேண்டும். அந்த மீளவலியுறுத்தல் தாமதப்படுத்தப்படக்கூடாது.
- ★ ஒரு விடயத்தினைக் கற்றதன் பின்னர் அதனைக் கிரகித்துள் ளனரா என்பதற்காக மீளவலியுறுத்தல் செய்தல்வேண்டும்.
- ★ மாணவர் விரும்புகின்ற செயற்பாட்டுக்கு முன்னுரிமை யளித்து அவற்றை மீளவலியுறுத்துவதன் ஊடாக மேலும் ஊக்கம் கொடுத்தல்வேண்டும்.
- ★ நன்னடத்தை ஒன்றை அவதானித்தவிடத்து உடன் மீளவலி யுறுத்தல் வேண்டும். தாமதித்தால் அது பிழையான நடத்தை ஒன்றிற்கான உந்துதலாகக் கூட அமையலாம்.

2. செயன்முறைக் கற்பித்தலுக்கு முன்னுரிமை கொடுத்தல். வாய்மொழியாகக் கற்பிப்பதனைக் குறைத்து பொருட்களை, உபகரணங்களைக் கையாண்டு கற்பித்தல் சிறப்பானது. இதற்காகக் கட்புல, செவிப்புல சாதனங்களைப் பயன்படுத்த லாம். இதனால் பாடப்பொருள் விளங்குகின்ற தன்மை அதிகரிக்கும்.
3. எப்போதும் பாடச் செயற்பாடுகள் தெளிவாக இருத்தல் வேண்டும். சந்தேகம் ஏற்படின் துலங்கல் வெளிப்படாது.
4. மாணவர்களுடைய சுயவிபரங்களைத் திரட்டி அவர்களுடைய சமூகப் பின்னணியை அறிந்து அதற்கேற்ப ஆசிரியர் செயற்பட வேண்டும்.
5. பாடம் நடத்திக்கொண்டிருக்கும்போதும் பாடமுடிவில் தனிக் கவனம் காட்டவேண்டும். அவசியமான சந்தர்ப்பங்களில் மேலதிக வகுப்புக்களை நடத்துதல் வேண்டும்.
6. பயிற்சிகள் கொடுத்ததன் பின்னர் அவர்களில் அருகில் சென்று தனிக்கவனம் காட்டுதல் வேண்டும். பயிற்சி வினாக்கள் எப்போதும் எளிய முறையிலே அமைந்திருக்க வேண்டும்.
7. ஒரு விடயம் பற்றி திரும்பத் திரும்பப் பயிற்சி கொடுத்தல் வேண்டும். அப்போதுதான் ஞாபகத்தில் வைத்திருப்பான்.
8. ஆசிரியர் - மாணவர் தொடர்பு

9. பெற்றோர் - ஆசிரியர் தொடர்பினை கட்டிபெழுப்புதல் வேண்டும்.
10. அடைவு இலக்குகளை இலகுவான முறையில் முன்கொண்டு செல்லுதல்.
11. தண்டனைக்குப் பதிலாக ஊக்கப்படுத்த வேண்டும்.
12. மனதை ஒருமுகப்படுத்தும் திறனை வளர்த்தல் வேண்டும்.
13. குறிப்பிட்ட கற்றல் பேற்றினை புரிந்துகொள்ளும் வரைக்கும் செயற்பாட்டில் கவனம் செலுத்துதல் வேண்டும்.
14. கற்றல் பேற்றினை சிறுசிறு பகுதியாக ஏறுவரிசைப்படி அமைக்க வேண்டும். மீத்திறன் உள்ள மாணவனுக்கு அமையும் கற்றற் பேறுபோல் அமையாது. அந்தக் கற்றற்பேறு மேலும் பல துண்டுகளாக ஆக்கப்படுதல் வேண்டும்.
15. ஆசிரியர் தனது நடத்தைப் பாங்கினை மாணவர்களுடைய நிலைக்கு ஏற்ப மாற்றிக்கொள்ள வேண்டும். அதனால் சமரச உணர்வு விருத்தியடைய வாய்ப்பு ஏற்படுகின்றது.
16. குறைகாண்பது என்ற விடயத்தினை ஒதுக்கி வைத்து விட்டு, குறை, என்ன தன்மையினால் உண்டானது என்பதனை அவதானித்து, அதனை அந்த இடத்தில் வைத்தே சீர்செய்ய வேண்டும். அதற்காக ஆசிரியருக்குப் பொறுமை அவசியமாகும்.
17. மாணவர்களை எப்போதும் உற்சாகம் உடையவர்களாக மாற்ற வேண்டும். வகுப்பறைச் சூழல் மகிழ்ச்சிகரமானதாக இருப்பது அவசியமானதாகும். மகிழ்ச்சி, கற்றலின் வேகத்தினை அதிகரிக்கச் செய்கின்றது. அந்தப் பாதை நோக்கி அவர்களை உற்சாக மூட்டுதல் வேண்டும்.
18. பொறுப்புக்களைப் பொறுப்பானவர்களிடம் கையளித்து அதனைக் கண்காணித்தல் வேண்டும்.
19. பரிசில்கள், பாராட்டுக்களை வழங்கி ஊக்கப்படுத்த வேண்டும். இவை கற்றல் சார் நிலையில் இல்லாமல் பிற செயற்பாடுகளுக்கும் கொடுக்கப்படலாம். சில மாணவர்கள் நேரத்துக்கு வருவார்கள், சுத்தமாக வருவார்கள் இவ்வாறான தன்மைகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டு அவர்களை உற்சாகப்படுத்தல் வேண்டும்.

## மனவளர்ச்சி குன்றிய மாணவர்கள்

மனவளர்ச்சி குன்றியோர் பற்றி பலவாறு விளக்கங்கள் தரப்பட்ட போதும் ''அமெரிக்க மனவளர்ச்சிக் குறைபாட்டுக் கழகம்'' மன வளர்ச்சி குன்றியிருத்தல் பற்றி வரையறுத்துள்ளது. வளர்ச்சிப் பருவ நிலைகளில் தோன்றும் அறிதிறன் செயற்பாட்டுக் குறைவு (சரா சரிக்குக் கீழான) காரணமாகத் தகவமைப்பு நடத்தையில் பின் தங்கியிருத்தலே மனவளர்ச்சி குன்றியிருத்தல் எனப்படும். மன வளர்ச்சி குன்றியிருத்தல் என்பது இரண்டு அடிப்படையில் நோக்கப்படுகின்றது.

1. நடத்தை மூலம் வெளிப்படும் அறிகுறிகள்.
2. அறிதிறன் கொண்டியங்குதல், தகவமைப்பு நடத்தையைப் பெறுதல் ஆகிய இரண்டிலும் குறைபாடு காணப்படுதல்.

டோலி (**Doli**) என்பவர் மனவளர்ச்சி குன்றியிருப்பதற்கான விளக்கத் தினைப் பின்வருமாறு அடையாளப்படுத்துகின்றார்.

1. சமூகத்திறனில் குறைபாடு இருப்பதால், தன்னைத்தானே பராமரித்துக்கொள்ள இயலாமை.
2. மனவன்மைகள் சராசரிக்குக் கீழ் இருத்தல். (Mental Subnormality)
3. ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் வளர்ச்சிக்கு அறிகுறியான செயல்களில் சராசரியைவிட பின்தங்கி இருத்தல்.
4. பிறக்கும்போதே தோன்றுவது. (Constitutional Origin)
5. குழந்தை வளர்ச்சியடைந்து முதிர்ச்சிபெறும் காலகட்டத்தோடு தொடர்புடையது.
6. குணப்படுத்தமுடியாத (Incurable) நிலையில் காணப்படுதல்.

## மனவளர்ச்சி குன்றிய மாணவர்களை அடையாளம் காணுதல்

1. பெற்றோர்களின் துணைகொண்டு அறிவதற்காக ஆசிரியர் முயலுதல் வேண்டும்.
2. சகபாடிகளின் துணைகொண்டு அறியலாம். அதற்காக குழந்தையுடன் நன்றாகப் பழகும் சகபாடியினைக் கண்டு தகவலைப் பெறுவது நன்று. அந்தத் தகவல்கூடப் பரிசோ திக்கப்படவேண்டும்.

3. மாணவர்களின் பொதுவான நடத்தையினை உற்று நோக்குதல் மூலம் அறியலாம். இந்த உற்றுநோக்குதல் வகுப்பறைக்குள்ளும் வகுப்பறைக்கு வெளியிலும் அமைதல் நன்று.
4. வகுப்பறையில் மிகவும் இலகுவான சோதனைகளை நடத்தி அவர்களின் தன்மையினை அறித்து கொள்ளுதல்.
5. நுண்ணறிவுச் சோதனையினை நடத்தி அந்த புள்ளி வீத மட்டத்தினைவைத்துத் தெரிந்துகொள்ளுதல்.
6. சமூக உறவுச் சோதனைகளின் அடிப்படையில் கண்டறிதல்.

## மனவளர்ச்சி குற்றியோரின் வகைப்பாடு

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளை உளவியலாளர்கள் மூன்று வகைக்குட்படுத்துகின்றனர்.

1. பேதையர் (Morons)
2. மூடர்கள் (Imbeciles)
3. முட்டாள்கள் (Idiots)

## பேதையர் (Morons)

கற்பிக்கத்தக்க மனவளர்ச்சி குன்றிய இவர்களுடைய நுண்ணறிவு ஈவு 50 முதல் 70 வரைக்குள் இருக்கும். இத்தகைய மாணவர்கள் ஆரம்ப வகுப்புக்களிலும் காணப்படலாம். அதனால் அவர்கள் ஆரம்பக் கல்வியினைப் பூர்த்திசெய்யாமல் போகலாம். அவ்வாறான வர்களால் மேற்கொண்டு கற்கமுடியாத நிலை தோன்ற வாய்ப்பு எற்படுகின்றது. இவ்வாறான தன்மைகொண்ட மாணவர்களுக்கு விசேட வகுப்புக்களின் ஊடாகக் அவர்களுக்கான அடிப்படைக் கல்வியை வழங்குவதற்கு முனைய வேண்டும்.

## மூடர்கள்

பயிற்சியளிக்கத்தக்க மனவளர்ச்சி குன்றியவர்கள் என்று கல்விப் புலத்தில் அழைக்கப்படும் இவர்களுடைய நுண்ணறிவு ஈவு 25 முதல் 50 வரைக்கும் இருக்கும். இவர்கள் பேச்சு மற்றும் சைகைகள் வாயிலாக தமது எண்ணத்தை வெளிப்படுத்தவும், மற்றவர்கள் கூறுவதைப் புரிந்துகொள்ளவும் முயல்வர். இவர்களுடைய மொழித்

திறன் விருத்தி சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுவதால் இத்தகைய குழந்தைகள் பாடசாலைக்கு அனுப்பப்படுவதில்லை. இவர்கள் குறைபாடுடைய மாணவர்களாக இருப்பதனால் அவர்களுக்குத் தொழிற்பயிற்சியளித்தல் அவசியமாகின்றது. தொழிற் பேட்டைகளில் பயிற்சிகொடுத்து அவர்களுடைய திறன்களை வளர்த்து சமூகத்திற்கு பயன்பெறவைக்கமுடியும். இதற்காக ஆசிரியர் சிறந்த உளவியலாளராகத் திகழவேண்டும்.

### முட்டாள்கள்

பாதுகாப்போடு பராமரிக்கப்படுபவர் என்ற பெயரால் அழைக்கப்படும் இவர்களுடைய நுண்ணறிவு ஈவு 25 க்குக் குறைவாக இருக்கும். இவர்களால் தனித்து இயங்க முடியாது. மற்றவர்களைச் சார்ந்தே இயங்கும் இவர்கள் தமக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளைக்கூட அவர்களால் பூர்த்திசெய்யமுடியாதவர்களாக இருப்பார்கள். இத்தகைய தன்மையில் உள்ளவர்களுக்கு கல்வி அறிவு புகட்டுதலோ, செயற்திறன் பயிற்சியளித்தலோ இயலாத செயற்பாடாக ஆகிவிடுகின்றது. எனவே, இவர்களைப் பிறர் பாதுகாப்பில் வைத்து பராமரித்துக் கொள்வது அவசியமாகின்றது.

### மனவளர்ச்சிக் குன்றியோருக்கான கல்வி வாய்ப்பு

மனவளர்ச்சி குன்றியிருக்கும் குழந்தைகள் கல்வி புகட்டக்கூடிய நிலையில் இருந்தால் அவர்களுக்கு கட்டாயம் சிறப்புக் கல்வி வழங்குவது அவசியமாகின்றது. இத்தகையவர்கள்மீது விசேட கவனம் செலுத்தவேண்டும். வகுப்பறையில் அல்லது, வீட்டில் இவர்களுக்கான பராமரிப்பும் கவனிப்பும் சிறந்த வகையில் அமைந்திருக்கவேண்டும். அவர்கள் வாழ்வதற்குத் தேவையான அறிவையும், தங்களைப் பராமரித்துக் கொள்வதற்கான திறன்களையும் கொடுப்பது அவசியமாகின்றது. அவ்வாறு செய்யும்போது அவர்கள் இயலுமானவரை தானாக முன்வந்து செயற்பட்டு வாழ்வதற்காக முன்வருவார்கள்.

# 6

# உடல் இயலாமையுள்ள குழந்தைகள்

## உடற்குறைபாடுடைய குழந்தைகள்

உடற்குறைபாடு என்பது, பிறப்பிலிருந்தோ வளர்ச்சி நிலைகளிலோ குழந்தையின் உடல் உறுப்புக்களில் காணப்படும் குறைபாடு அல்லது உடல் உறுப்புக்கள் சரிவரச் செயற்பட முடியாத நிலையிலிருந்தால் அதனை உடல் ஊனம் என்கின்றனர். இந்த உடற்குறைபாடு பல வகையில் அமைகின்றன.

1. உடலியக்கக் குறைபாடு

   கை, கால் முதலிய உறுப்புக்கள் சரிவர இயங்காத நிலையில் உள்ளோர்.

2. புலனியக்கக் குறைபாடு

   பார்வைத்திறன், காதுகேளாமை, இழப்பு, பேசுவதற்கு இடர்படுதல் முதலிய குறைபாடு உள்ளோர்.

## உடல் அங்கவீனமுடைய மாணவர்கள்

இந்த வகை மாணவர்கள் மற்றய விசேட உதவி தேவைப்படும் மாணவர்களின் தன்மையிலிருந்து சற்று வித்தியாசமானவர்களும், வகுப்பறையில் விசேடகற்பித்தல் முறை தேவைப்படாத மாணவர்களுமாவார். இவர்களில் இரண்டு வகைப்படுவர்.

1. உடல் அசௌரியங்களை இழிவளவாக்குதல்.
2. சூழலினால் ஏற்படுத்தப்படும் அசௌரியங்களை இழிவளவாக்குதல்.

இந்த வகை மாணவர்கள் ஏதோ ஒரு வகையில் குறைபாடுடையவர்களாக இருப்பார்கள். இவ்வாறானவர்களுக்கு ஆசிரியர்

வகுப்பறையில் பொருத்தமான உதவிகளை மேற்கொண்டு சமகாலக் கல்வியினை வழங்குவது அவசியமாகின்றது. சூழல் தொடர்பான அசௌரியங்களை இழிவளவாக்குதலில் ஆசிரியர் கவனம் செலுத்துதல் வேண்டும். மாணவர்கள் 'கக்க' ஊன்றுகோலுடன், செயற்கைக் காலுடன், ஊன்றுகோலுடன், சக்கர நாற்காலியுடன் பாடசாலைக்கு வருகின்றபோது அதற்கான தடைகளை ஏற்படுத்தக்கூடாது. உதாரணமாக மாடிக்கட்டடங்களில் வகுப்பு அமைத்தல், மாடிப்படிகளில் ஏறச்செய்தல், சமதரையற்ற நிலம், சேற்றுடன்கூடிய பாதைகள் என்பனவற்றை இழிவளவாக்குதல் வேண்டும். இந்தத் தடைகள் அவர்களுக்கு ஆபத்துக்களை ஏற்படுத்தலாம். மாணவர்களுக்குத் தேவையான பொருட்களை வழங்குவதற்கு பெற்றோர்களை வழிப்படுத்துதல் வேண்டும். அத்தோடு இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் அவர்களை ஈடுபடச் செய்யவேண்டும். எனினும், பளுவான காரியங்களில் ஈடுபடுவதனைத் தவிர்த்தல் நல்லது. கூனல் உள்ள மாணவர்கள் பிழையான நிலையில் நிற்கின்ற முறையில் இருந்து தவிர்ப்பதற்காக நிமிர்ந்த, நேரான ஆசனங்களை ஒதுக்குதல் அவசியமாகும். இவ்வாறு உடல் அங்கவீனமுடைய மாணவர்களுக்கு உதவி, வகுப்பறைக் கல்வியினை மேம்படுத்த முடியும். இன்றைய நிலையில் இத்தகையவர்களுக்காக பாடசாலைக் கட்டிடங்களின் அமைப்பில் மாற்றம் செய்யப்பட்டுவருகின்றது. அத்தோடு அரச, தனியார் கட்டிட அமைப்புக்களிலும் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

உடற்குறைபாடுடையவர்கள் மற்றவர்களைப்போல இயலபுத் தன்மைபெற்று விளங்குவார்கள். இயல்பான மாணவர்களுக்குக் கொடுக்கும் கல்விச் செயற்பாடுகளை இவர்களுக்கும் கொடுக்க வேண்டும். இவர்கள் கல்வியைப்பெறுவதில் இடர்பாடுகாணப்படுமாக இருந்தால் அதற்காக ஆசிரியர் விசேட செயற்பாடுகள் வாயிலாக கல்வியளிக்க முயற்சி செய்யவேண்டும். இவர்களுக்கு கல்வியளிக்கும்போது சமூகப் பொருத்தப்பாட்டினை விருத்திசெய்யும் வகையில் இருப்பது அவசியமாகின்றது. அதற்காகப் பயிற்சிக் கல்வி துணைபுரிகின்றது. அதாவது, தொழிற்பயிற்சியளிப்பது சிறந்தது. அதனால் அவர்கள் தாங்கள் தேர்வுசெய்யும் தொழில் பற்றிய

திறன்களைப் பெறுகின்றார்கள். இதனால் தங்களுக்கும் ஒரு தொழில் தெரியும் என்ற நிலையில் சமூக மதிப்பீட்டைக்கூட அவர்கள் பெறு கின்றார்கள். இவ்வாறான நிலையில் கல்வி வழங்கப்படுமாக இருந் தால் மாணவர் நலனோம்பல் என்ற சிந்தனை அதிகரிக்க வாய்ப்பு எற்படுகின்றது.

## வகுப்பறையில் ஆற்றக் கூடிய விசேட பணிகள்

1. வசதியான ஆசனங்களை வழங்குதல்.
2. உடல் சமநிலை இல்லாத பிள்ளைகள் அங்கும் இங்கும் செல் லும்போது அவர்களைக் கவனித்தல், கண்காணித்தல்.
3. உடற்சமநிலை குறைந்த பிள்ளைகளுக்கு உதவுவதற்காக ஏனைய மாணவர்களுக்கு பயிற்சியளித்தல்.
4. இடர்பாடுகளுக்கு மத்தியில் அவர்கள் செய்யும் செயற்பாடு களுக்கு ஊக்கம் கொடுத்தல். அதனால் ஏதும் குறைபாடு நிகழுமாக இருந்தால் அதனை பொறுமையுடன் கவனித்து ஊக்கப்படுத்தல்.
5. அவர்கள் பயன்படுத்தவதற்குத் தேவையான விசேட உபகர ணங்கள் இருந்தால் அவற்றை வகுப்பறைக்கு கொண்டுவரச் செய்தல்.

## கேட்டல் குறைபாடுடையோர்

கேட்டல் குறைபாடுடைய மாணவர்கள் பற்றி பி.ஆர்.கெகார் பின்வருமாறு விபரிக்கின்றார்.

1. சாதாரண மாணவர்களுடன் பழகுவதன் மூலம் அவர்களுடன் சம உரிமைகளை அனுபவிப்பதற்கு சந்தர்ப்பம்பெறும் அதே சமயம், தாமும் மற்றவரைப் போன்ற ஒருவரே எனப் புரிந்து கொள்வர்.
2. மொழி தொடர்பான பரந்த ஓர் அனுபவத்தினைப் பெற்றுக் கொள்வாற்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.
3. கேட்டல் குறைபாடுடைய மாணவனின் பேச்சுத் திறனையும் மொழியையும், தக்க அளவிற்கு வளர்ச்சியடையச் செய்ய வேண்டும். இக்குறிக்கோளை அடைவதற்கு அம்மாணவர்களை

வகுப்பறையில் தனித்து வைக்காமல் மாறாக இவர்களைச் சாதாரண மாணவர்களுடன் சேர்த்துச் செயற்படச்செய்தல் வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் சமவயதுடைய மாணவனின் பேச்சாற்றலையும் மொழியாற்றலையும் இனங் காண்பதற்கான சந்தர்ப்பத்தை கேட்டல் குறைபாடுடைய மாணவர் பெறுவர்.

4. மேலும், இம்முறையில் கேட்டல் குறைபாடுடைய மாணவர் கல்வித்துறை சார்பாக மற்றைய மாணவருடன் போட்டியிடு கின்றனர். ஆகவே, மற்றய மாணவருடன் போட்டியிட முடியாது போவதால் குறைபாடுடைய மாணவர்கள் விரத்தியடைய இம்முறை வழிசமைக்கிறது என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும்.

5. சாதாரண வகுப்பறையினுள் கல்வி கற்கும் இம் மாணவன், கேட்கும் உலகினுள் உட்புகுகின்றான். ஆகவே, இம்மாணவன் தனது குறைபாடு காரணமாக சகமாணவனுடன் தங்கிநிற்க முடியாதுபோகும். எனவே, இம்மாணவன் தனியொரு நபராகவே செயற்படுவான்.

கேட்டல் குறைபாடுடைய குழந்தைகள் சிலர் வகுப்பறையில் இருக் கலாம். எனினும், அவர்கள் பல்வேறு மட்டங்களில் குறைபாடுடைய வர்களாகக் காணப்பட வாய்ப்புள்ளது.

★ மந்தமாகக் கேட்டல்.

★ சாதாரணமாகக் கதைப்பதைக் கேட்கமுடியாதிருத்தல். இதனைச் சாதாரண குறைபாடு என்பர்.

★ சத்தமாகக் கதைப்பதனையும் கேட்கமுடியாதிருத்தல். இதனை அதிககுறைபாடு என்பர்.

★ மிகப் பலமான சத்தத்தையும் கேட்கமுடியாதிருத்தல். இதனை மிகக்கூடிய கேட்டல் குறைபாடு என்பர்.

செவிப்புலக் குறைபாடுடைய மாணவர்களை இனங்காணுதல்

★ அவதானிப்பதில் குறைபாடுடையவர்களாக இருப்பார்கள்.

★ அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதில் சிக்கலுடையவர்களாக இருப்பார்கள்.

- ★ அறிவுறுத்தல்கள் இடம்பெறும்போது தலையைத் திருப்பிக் கேட்பார்கள்.
- ★ முரட்டுத்தனம், வெட்கம், பின்வாங்குதல் முதலிய செயற்பாடு களைச் செய்வார்கள்.
- ★ கதைப்பதற்கும் பாடங்களில் பங்குபற்றுவதற்கும் விருப்ப மின்மையால் முன்வர தயங்குவார்கள்.
- ★ வகுப்பறையில் கொடுக்கப்படும் அறிவுறுத்தல்களைத் திரும்பத் திரும்பக் கேட்பார்கள்.
- ★ நண்பர்களின் பயிற்சிப் புத்தகங்களைப் பார்த்து எழுதுவார்கள்.
- ★ எதிர்பார்க்கும் அடைவைப் பெறாதிருப்பார்கள்.
- ★ விளையாட்டில் அதிக கவனம் செலுத்தாது பின் நிற்பார்கள்.
- ★ காதுவலியும் காதிலிருந்து சீல் வடிதலும் காணப்படும்.
- ★ அமைதியற்ற நிலையில் காணப்படுவார்கள்.

கேட்டல் குறைபாட்டுக்கு,

1. பிறவிக் காரணங்களும்
2. மரபுநிலையும்
3. பிறநோய்களும்

காரணமாக அமையலாம். இவ்வாறானவர்களைச் சிறுவயதிலே பரிசோதனைகளின் வழி அறியமுடிகின்றது. ஒரு குழந்தையின் செவித்திறன் 50 டெசிபெல் அல்லது, அதற்குமேல் குறைபாடுடை யதாக இருப்பின் அவ்வாறான தன்மை உடைய மாணவர்களுக்கு விசேட முறையில் கற்பிப்பது அவசியமாகின்றது. சிறுவயதில் சிறப்புப் பரிசோதனைகளை மேற்கொண்டு அவர்களது நிலையினைச் சீராக்க ஆசிரியர் முயற்சி செய்யவேண்டும்.

கற்பிக்கும் முறைகள்

1. வாய்மொழிக் கற்பித்தலுக்கு அதிக கவனம் செலுத்துதல்.
2. அவர்கள் அவதானிக்குமாறு அவர்களுக்கு நேராக நின்று பேசுதல் வேண்டும். அப்போது அவர்கள் உதட்டசைவை அவதானிப்பார்கள்.

3. பேசும்போது உங்களைப் பின்பற்றுவதற்கு அவர்களைத் தூண்டுதல்.
4. பலதரப்பட்டவர்களினதும் பேச்சைச் செவிமடுக்க சந்தர்ப்பம் கொடுத்தல்.
5. கரும்பலகையில் எழுதும்போது மாணவர்களை நோக்கியபடி பேசுதல்.
6. விளக்கமளிக்கும்போது எளிமையான வாக்கியங்களைப் பயன்படுத்துதல்.
7. வகுப்பறையினை அவர்களுக்கு ஏற்றவாறு ஒழுங்கு படுத்துதல். அதாவது கதவு, யன்னல் போன்ற ஒளி உட்புகும் சாதனங்களை நோக்கியவாறு அவர்களை அமரச்செய்தல்.
8. கூடியவரை காட்சி அட்டைகளையும், வேறு கற்பித்தல் உபகரணங்களையும் பயன்படுத்துதல்.
9. சொற்களைப் பிழையின்றி உச்சரித்தல்.
10. ஆசிரியரின் முகம் நன்றாகத் தெரியக்கூடியவாறு அவர்களை இருக்கச் செய்தல்.
11. மாணவர்களைப் பார்த்தபடியே பாடம் நடத்துதல்.
12. சொற்களை மிகத் தெளிவாக விளங்கும் வகையில் உச்சரித்தல்.
13. கற்பித்தலுக்கும் - கற்றலுக்குமான தொடர்பினை அறிய இடையில் வினாக்கேட்டு உறுதிப்படுத்துதல்.
14. பாடவிடயம் விளங்காத சந்தர்ப்பத்தில் வினாக்கேட்க வழிப்படுத்துதல்.
15. கற்பித்தல் சாதனங்களை அதிகமாகப் பயன்படுத்துதல்.
16. அவசியமான மாணவர்களுக்கு செவிப்புலக் கருவிகளை வழங்குதல்.
17. ஆசிரியர் பொறுமையுடன் செயற்படுதல்.
18. நேரத்தினைக் கவனத்தில் கொள்வதனை ஓரளவு தவிர்த்தல்.
19. ஒளித்தூண்டல், தொடுபுலன் தூண்டல்களைப் பயன்படுத்துதல்.

20. மாணவர்களைப் பேச்சுநிலைக்குக் கொண்டுவருவதற்கு உளவியல் முறையினைக் கருத்திற்கொண்டு மொழிப் பயிற்சியளித்தல்.

★ குரல் நாளங்களின் துடிப்பைத் தொட்டுணர்தல்.

★ ஒரு சொல்லை ஆசிரியர் உச்சரிக்கும்போது அவரது உதடுகளின் அமைப்பையும் அசைவையும் கவனித்தல்.

★ கண்ணாடியைப் பார்த்து உதடு, நாக்குப் போன்றவற்றை ஒலிக்கேற்ப அமைத்து இயக்குதல்.

★ விரல்களைப் பயன்படுத்தி கருத்தை வெளியிடும் சைகை மொழி (Sing Language)

### கேட்டல் குறைபாடுடைய பிள்ளைகளுக்கு உதவும் முறை

1. கேட்டல் குறைபாடுடைய மாணவனுக்கு உதவுவதற்காகச் சாதாரண மாணவன் ஒருவனைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இந்த இரண்டு மாணவர்களையும் அருகருகில் இருப்பதற்கு வாய்ப்பளியுங்கள். இதனால் பல சிக்கல்கள் தீர்வதற்கு வாய்ப்பு எற்படுகின்றது.

2. விவாதங்கள், நாடகங்கள், நாட்டியங்கள், பேச்சுக்கள் போன்ற விடயங்களில் அதிக ஈடுபாடுகாட்ட வாய்ப்பளியுங்கள்.

3. இவர்கள் பிழையாக உச்சரிக்கும் சந்தர்ப்பங்களில் ஊக்கமளித்து உச்சாகப்படுத்துங்கள்.

4. பாடத்துக்குப் பொருத்தமான புதிய உபகரணங்களை முன்னரே பெற்று செயற்படுத்துங்கள்.

5. நீண்டநேரம் செவிமடுக்கச் செய்யாதிருக்கச் செய்யுங்கள். அதற்காக வகுப்பறையில் வித்தியாசமான கற்பித்தல் சூழலை ஏற்படுத்துங்கள்.

### கேட்டலுக்கு உதவும் கருவிகள்

இன்று கேட்டல் குறைபாட்டினை இழிவளவாக்குவதற்காக நவீனமானதும் நுண்ணியதுமான கருவிகள் பயன்பாட்டில் உள்ளன. கேட்டல் குறைபாடுடைய மாணவர்களில் ஓரளவு கேட்கும் திறன்

இருக்கின்றது. இதனை இழிவுச் செவியுறல் என்பர். இழிவுச் செவியுறலை வகுப்பறையில் பயன்படுத்திக் கொள்ளமுடியும். முற்றுமுழுதாக செவியுறும் ஆற்றலை இழந்தவர்கள் மிகச் சிலரே இருக்கின்றனர். கேட்டல் குறைபாட்டினை நிவிர்த்தி செய்வதற்காக விசேட கேட்டல் உதவிக் கருவிகளைப் பயன்படுத்துவார்கள். (Hearing Aid) செவிப்பன்னி வகைகள் பாடசாலைகளில் பயன்படுத்தப் படுகின்றன. பொருத்தமான செவிப்பன்னியைப் பயன்படுத்திக் கொள்வது அவசியமாகின்றது. செவிப்பன்னியின் முக்கியத்துவம் அறிந்து அதனைப் பயன்படுத்துவது சிறப்பானதாகும்.

### பார்வைத்திறன் குறைபாடு

பார்வைத்திறன் குறைபாடுடைய மாணவர்கள் இரண்டு வகையில் உள்ளடக்கப்படுகின்றனர்.

1. பார்வைத்திறன் குறைந்தோர்
2. பார்வையற்றோர்

பார்வைத் திறன் குறைபாடு என்பது இன்று பெரும் பிரச்சினையாக மாறிவருகின்றது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இந்த தன்மையினை உணர்ந்து கொள்ளலாம். எனினும், பார்வைத் திறன் குறைபாடுடைய மாணவர்களை இனங்காண்பதற்காகக் கீழ்வருவனவற்றில் கவனம் செலுத்தப்படுகின்றது.

1. புற இயல்புகள்
2. நடத்தைகள்
3. கண் மற்றும் பார்வை தொடர்பான முறைப்பாடுகள்

### இனங்காணும் முறை

பார்வைத்திறன் குறைபாடுடையவர்களை இனங்காண்பதற்காக அமெரிக்க நாட்டு இலண்டல் ரி.யோசே (Randall T.Jose) என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

1. பூரணமான அந்தகர் (குருடர்)
2. நடந்து செல்லும் திறனுடையவர்
3. தூரப்பார்வைக் குறைபாடுடையோர் - குறும்பார்வை

4. அண்மைப்பார்வைக் குறைபாடுடையோர் - நீளப்பார்வை
5. ஒரு கண் பார்வை, வாக்குக் கண், நிறக்குருடு, இருட்டில் பார்வை இன்மை, வெள்ளெழுத்து முதலியன.

## பாடவேளைகளைத் திட்டமிடுதல்

மேற்கூறப்பட்ட குறைபாடுடைய மாணவர்கள் வகுப்பறையில் இருக்கும் சந்தர்ப்பத்தில் பாடவேளைகளைப் பொருத்தமாகத் திட்டமிடுட்டுக் கவனம் செலுத்துதல் வேண்டும். பாடவேளை யில் முக்கியம் பெறுவது பாடமுன்னாயத்தமாகும். எனவே, பாட வேளையில் கீழ்வரும் விடயங்கள் இருப்பது அவசியமாகின்றது.

1. பார்வைத் திறன் (Visual Activity)
   (மாணவனின் பார்வைத் திறன் / பொருளொன்று தெளிவாகத் தெரியும் தூரம்)
2. பார்வைப் புலம் (Visual Field)
   (பார்வைக்கு உட்பட்ட பரப்பு)
3. பார்வைச் செயற்பாடு (Visual Functioning)

ஆசிரியர் என்ற வகையில் பார்வைத் திறன் பற்றி அறிந்தும் தெளிந்தும் கொள்வது அவசியமாகின்றது. ஒருவருடைய பார்வைத் திறன் பலவாறு மதிப்பிடப்படுகின்றது. அவற்றுள் 1862ஆம் ஆண்டில் ஹர்மன் ஸ்னெலன் (Hermon Snellen) வடிவமைத்துச் சமர்ப்பித்த 6 மீற்றர் (20) அடி பார்வையை அளக்கும் அட்டவணை குறும்பார்வையை அளர்ப்பதற்காக இலங்கையில் பயன்படுத்தப்பட் டன. இதனை 'ஸ்னெலன்' அட்டவணை என்றனர். இன்று பார்வைக் திறன் குறைபாட்டினை அளப்பதற்காகப் பல்வேறு முறைகள் நடைமுறையில் உள்ளன.

பார்வைத்திறன் குறைபாடுடைய மாணவர்களுக்குப் பல வகையில் கல்வி கற்பித்துக் கொடுக்கப்படுகின்றது. அதற்காக விசேட வேலைத்திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

1. செவிவழியே அறிவுபுகட்டுதல்.
2. ஒளிபடக்கூடிய முன்வரிசை ஆசனங்களைப் பெற்றுக் கொடுத்தல்.

3. வெளிச்சம் நன்குபடக்கூடிய இடங்களை ஒதுக்கிக் கொடுத்தல்.
4. ஒரு கண் பார்வையுடைய மாணவர்களை வகுப்பின் நடுவில் அமரச் செய்தல்.
5. வாசிக்கும்போது புத்தகங்களை கண்ணுக்கு பக்கத்தில் வைத்து வாசிக்கும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பத்தினைப் பெற்றுக்கொடுத்தல்.
6. உணர் திறன்களை வளர்ப்பதற்காக அவதானிக்கும் சந்தர்ப்பங் களை பல்வேறுவழிகளில் அதிகரித்தல்.
7. கற்றல் செயற்பாடுகளுக்கும் மதிப்பீட்டுச் செயற்பாடுகளுக்கும் அதிக நேரத்தினை ஒதுக்குதல்.
8. தொடு புலனுணர்ச்சியைப் பயன்படுத்தி பிரெயில் (Braille) முறையில் எழுத்தினைக் கற்பித்தல்.
9. ஒளித்தூண்டலுக்குப் பதிலாகப் பிறதிறன்களின் தூண்டல் களை அதிகரித்து பயிற்சியளித்தல்.
10. பிரெயில் புத்தகங்கள், பேசும் நூல்கள், பிரெயில் எழுத்துக் கோல், தட்டச்சுப் பொறி போன்றவற்றைப் பயன்படுத்திக் கற்பித்தல்.
11. பார்வைக் குறைபாடுடையோருக்கு சிறந்த வில்லையுடனான கண்ணாடிகளைப் பயன்படுத்துதல்.
12. தனிவகுப்பறையில் பெரிய எழுத்துக்களாலான அட்டைக ளைப் பயன்படுத்துதல், கண்ணாடி வில்லைகள், வெளிச் சத்தினை அதிகரிக்கச் செய்து படித்தல் போன்ற செயற்பாடு களைச் செய்தல்.
13. மாணவர்களை எப்போதும் பெயரிட்டு அழைத்தல்.
14. எழுதுவதற்குச் சாதாரண அளவைவிட, தடிப்பான முனையை உடையதும் கருமையானதுமான பேனாவைப் பயன்படுத்துதல்.
15. சுயஆற்றலை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
16. மேலதிக வாசிப்புக்காக வாசிக்கும் ஒருவரின் உதவியினைப் பெற்றுக்கொடுத்தல்.

17. முடிந்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் விளையாட்டுக்களிலும் உடற் பயிற்சிகளிலும் பங்குபெறச்செய்தல்.
18. கல்விச் செயற்பாடுகளின் விருத்திக்காக வீட்டில் பெற்றோர்களின் பங்களிப்பை பெற்றுக்கொடுத்தல்.
19. வைத்திய ஆலோசனை பெறுவதற்காக பெற்றோருடன் கலந்து ரையாடி நெறிப்படுத்துதல்.
20. பாடம் தொடர்பாக ஏற்படும் சிக்கலின்போது விசேட ஆசிரி யரிடம் இருந்து உதவியைப் பெற்றுக்கொள்ளுதல்.

உடலியக்கக் குறைபாடுடையோர்

உடற்குறைபாடு என்பது உடலினை இயக்குவதில் உள்ள குறை பாடாகும். இத்தகைய மாணவர்களுக்கான கல்வியும் விசேட தன்மைகொண்டதாக இருப்பது அவசியமாகின்றது. இவர்களை விசேடநிலையில் கவனித்தல் அவசியமாகும்.

1. கையெழுத்து தெளிவற்றமுறையில் இருத்தல்
2. மழலைப் பேச்சுக் காணப்படல்
3. தெற்றிப் பேசுதல்
4. திக்கிப் பேசுதல்
5. இடக்கைப் பழக்கம் இருத்தல்

முதலிய குறைபாடுடையவர்களாக இருக்கும் மாணவர்களுக்கு கல்வி புகட்டுவதில் அன்பும் அரவணைப்பும் அவசியமாகின்றன. இத்தகையவர்களுக்குச் சாதாரண வகுப்பிலே கற்பித்தலை மேற்கொள்ளச் செய்யலாம். அதற்காக அவர்களுக்கு விசேட மாற்றங்களைச் செய்தல்வேண்டும்.

1. பாடசாலைக் கட்டடத்தில் மாற்றங்களை மேற்கொள்ளல்.
2. தரைத்தளத்தினை சக்கர நாற்காலி உருளக்கூடிய விதத்துக்கு மாற்றுதல்.
3. சரிவான சாய்தரையினை அமைத்தல்.
4. ஊன்றுகோல் வசதியினையும் சுவரைப் பிடித்துக்கொண்டு நடப்பதற்கும் வசதிசெய்தல்.

5. சகபாடிகளுடன் சரளமாக உரையாடுவதற்கு வாய்ப்பினை அதிகரித்தல். இதனால் சமூகத்திறன் அதிகரிக்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது.
6. இவர்களது கருத்தும் சிந்தனைகளும் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும். இதனால் இவர்கள் கற்றலில் ஊக்கம் உடைய வர்களாகக் காணப்படுவார்கள்.
7. தன்னம்பிக்கை வளர்க்கக்கூடிய செயற்பாடுகளைச் செய் தல் வேண்டும். முடியும், செய்யலாம் போன்ற சொற்களைப் பயன்படுத்துதல்.
8. உடலியக்கக் குறைபாடுடையவர்கள் பெற்ற வெற்றியினையும் அரவர்களது செயற்பாடுகளையும் ஊக்கப்படுத்தல்.
9. உடலியக்கக் குறைபாடுடையவர்களுக்கு கொடுக்கப்படும் வாய்ப்பும் மரியாதையும் பற்றித் தெளிவுபடுத்திக் கூறுதல்.
10. பிறருடன் கூடிய சமூகச் செயற்பாடுகளைச் செய்வதற்கான வாய்ப்பினைப் பெற்றுக்கொடுத்தல்.

ஏனைய புலனியக்கக் குறைபாடுகள்

1. வலிப்பு நோய்
2. மூளை நோய்
3. முடக்குவாதம்
4. ருமேட்டிக் இதய நோய்கள்
5. ஓட்டிசம்
6. தீவிர புலனியக்க குறைபாடு

இவ்வாறான குறைபாடுடைய மாணவர்களுக்கு விசேட கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு கல்வி புகட்டுதல் வேண்டும். இவர்களுக்கான பிரத்தியேகமான கற்றல் சூழல் அவசியமாகின்றது. இத்தகைய குழந்தைகளுக்கு மருத்துவ சிகிச்சையுடன் தசை இயக்கப் பயிற்சியும் அவசியம். இந்த குறைபாட்டு நோய்களில் ஓட்டிசத்தின் தன்மை பற்றி அவதானிக்கலாம்.

ஓட்டிசம்

ஓட்டிசம் என்பது நரம்பு மற்றும் மூளையின் செயற்பாடுகள் சீரின்மையால் வரக்கூடிய ஒரு விளைவு எனக் கருதப்படுகின்றது. இக்குறைபாடு உடையவர்கள் மூளைவளர்ச்சி குறைந்த குழந்தை களாவர் என்று கருதுகின்றனர். ஓட்டிசம் ஆரம்பக் கட்டத்திலிருந்தே மூளை விருத்தியில் சிறுபாதிப்பை ஏற்படுத்தும். அதனால் மனநலக் குறைபாடு ஏற்பட்டு வலிப்பும் உண்டாகின்றது. எமது நாட்டைப் பொறுத்தவரையில் இந்தப் பெயர் அதிகளவு பரிச்சயமற்ற பெய ராகவே இருந்துவருகின்றது. 1943ஆம் ஆண்டு அமெரிக்க மருத்துவ நிபுணர் கேணர் என்பவர், பிள்ளைகளுக்கு ஓட்டிசம் என்ற ஒரு மனரீதியான பிரச்சினை இருப்பதை முன்வைத்தார். இலங்கையில் ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பலர் உள்ளனர். அவர் களை நாம் அடையாளம் காணத் தவறுகின்றோம். ஏனெனில், பரிசோதனைகளால் இவர்களுடைய ஓட்டிசக் குறைபாடுபற்றிக் கண்டறிவது சிரமமாகும். இவர்களை அவதானித்தால் சாதாரண பிள்ளைகள் போலவே நடந்து கொள்வார்கள். ஆனால், இவர்க ளுடைய நடத்தை மற்றும் பழக்க வழக்கங்களில் காணப்படும் மாற்றங்களை அவதானித்தே இவர்களை அடையாளம் காணலாம். இன்று ஒவ்வொரு 110 குழந்தைகளில் ஒருவருக்கு ஓட்டிசம் இருப்ப தாக கண்டறியப்பட்டுள்ளது. இவர்களுள் சிறுமியரைவிட சிறுவர் களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இந்தப்பாதிப்பு மூன்று அல்லது நான்கு மடங்காக இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஓட்டிசம் உள்ளவர்கள் பல்வேறு பண்புகள் கொண்டவர்களாக இருப்பார்கள்.

1. இவர்களைப் பெயர் சுட்டி அழைக்கும்போது அதனைப் பொருட்படுத்தாது இருப்பது மட்டுமல்லாமல், நேருக்கு நேர் நோக்காமல் வேறு ஏதோ ஒன்றைப் பார்ப்பது போல் இருப்பார்கள்.
2. மூளை வளர்ச்சி இவர்களுக்கு சாதாரணநிலையில் (குறைபாடு) இருப்பதனால் கிரகிப்பதிலும் பேசுவதிலும் தாமதம் ஏற்படுகின்றது.

3. பேசுவதும் மற்றவர்களுடன் உறவுகளைப் பேணுவதும் ஆரம்பத்தில் சாதாரணநிலையிலே இருக்கும். பின்னர் காலப்போக்கில் குறைந்து செல்லும்.
4. ஆரம்பத்தில் பேசத் தொடங்கும் இவர்கள் இரண்டு வயதை அடையும் போது, சிலவேளை பேச்சு இல்லாமலும் போய் விடுவார்கள். சில வேளைகளில் ஊமையர் போல் பேசாமலும் இருப்பார்கள். இப்பிள்ளைகள் பொருள், இடம், காலம் பார்த்துப் பேசுவது குறைவு.
5. காரணமின்றி அழுதல், சிரித்தல், தனிமையில் இருத்தல் முதலிய செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள்.
6. சேர்ந்து விளையாடுதல் குறைவாக இருப்பதோடு, தனக்குப் பிடித்த விளையாட்டினைத் திரும்பத் திரும்ப விளையாடு வார்கள்.
7. தங்களுடைய உடல்களை தேவையில்லாமல் அசைப்பார்கள். அதாவது, தலையை ஆட்டுதல், கைகளை அசைத்தல், துள்ளுதல் முதலிய அங்க அசைவுகள்.

ஓட்டிசம் இவ்வாறுதான் ஏற்படுகின்றது என்பது அறியப்படவில்லை. ஆனால், பரம்பரை அலகுகளும், ஏனைய சுற்றுச் சூழல் காரணிகளும் தாக்கம் செலுத்துகின்றன. பத்து முதல் பதினைந்து வீதமான பிள்ளைகளுக்கு பெற்றோரிலிருந்து பரம்பரை அலகுகள் மூலம் ஓட்டிசம் கடத்தப்படுவதாக அறியக்கிடைக்கின்றது. அதனால், ஏனைய நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் காணப்படுவதற்கு வாய்ப்புள்ளது. இவற்றைவிட குறிப்பிட்ட கிருமிகளால் ஏற்படும் நோய்கள், இரசாயனப் பொருட்களின் பாவனை முதலியவையும் ஓட்டிசம் ஏற்படுவதற்கு காரணமாக அமையலாம் என்கின்றனர். அதாவது, தாய் கர்ப்பமாக இருக்கும் காலத்தில் இத்தகைய தாக்கங்களுக்கு அவர் உள்ளாகுவதனால் அவர் பெற்றெடுக்கும் குழந்தைக்கு ஓட்டிசம் ஏற்படலாம். ஒச்சிசன் குறைவினாலும் ஓட்டிசம் ஏற்படுகின்றதாக வைத்தியப் பரிசோ னைகள் காட்டுகின்றன. ஓட்டிசம் உடைய பிள்ளைகளில் நாற்பது வீதமானோருக்கு வலிப்பு நோய் ஏற்பட வாய்ப்புள்ளமை கண்டறியப் பட்டுள்ளன. மனநலக் குறைப்பாடு கொண்ட பிள்ளைகளுக்கு

வலிப்பு ஏற்படுவது பொதுவானது. ஓட்டிசத்தால் பாதிப்புக்குள்ளாகிப் பிறக்கும் குழந்தைகளில் அதிகம். ஆண் பிள்ளைகளாகவே இருக்கின் றார்கள். இவ்வாறான நிலையில் குழந்தைப் பிறந்தவுடன் பெற்றோர் பிள்ளைகளுக்கு சிறப்பான பயிற்சி வழங்குவதன் வாயிலாக அதனைக் குறைத்துக்கொள்ளமுடியும் என வைத்தியர்கள் ஆலோ சனை முன்வைக்கின்றனர். அத்தோடு இவ்வாறான தாக்கத்துக் குள்ளானவர்கள் அடுத்த கர்ப்பந்தரிதலைத் திட்டமிடுவதற்கு முன் வைத்திய ஆலோசனையை நாடுதல் அவசியமாகும்.

ஓட்டிசம் வாழ்நாள் நீடித்த குறைபாடாக இருப்பினும் பரா மரித்தல், சிகிச்சை வழங்குதல், தொடர் பயிற்சி முதலிய செயற்பாடு களினால் குணப்படுத்தமுடிகின்றது. இவ்வாறான செயற்பாடுகளால் காலப்போக்கில் அவற்றினைக் கட்டுப்பாடாக வைத்திருக்கலாம் என்கின்றனர். ஆனால், சிலரைக் குணப்படுத்த முடியாமலும் செல்லும் ஆபத்தானநிலை உருவாகின்றது. வேறுசில பிள்ளைகளின் நுண்ணறிவு மட்டம்கூட சாதாரணநிலையினை அடைவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. சமூக இடைவினைகள் அதிகரிப்பதனால் அவர்களுடைய தொடர்பாடல் திறனை விருத்திசெய்து கொள்ள முடியும். ஆறு வயதுக்கு முன்பாக பேசுவதற்குத் தமது எண்ணங்க ளையும் கருத்துக்களையும் வெளிப்படுத்தி கற்றுக்கொள்ளும் அறிவாற்றலைக்கொண்ட பிள்ளைகள் அதிகமானோரின் முன்னேற்றம் சிறப்பானதாக அமைவதற்கு வாய்ப்பு அதிகம் என்கின் றனர். ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை வாய்மொழிப் பரீட்சையினால் மதிப்பிடுவது பொருத்தமானது. எழுத்துப் பரீட்சை களைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

வெளிநாடுகளில் ஓட்டிசம் பற்றிய சிந்தனை அதிகமாகவே உள்ளது. அந்த நாடுகளில் பயிற்றப்பட்ட வளவாளர்கள், உளவிய லாளர்கள் முதலியோர் உள்ளனர். அவர்கள் ஊடாக அக்குழந்தைகள் பராமரிக் கப்பட்டு வருகின்றனர். ஆனால், ஓட்டிசம் பற்றிய புரிதல் இலங் கையைப் பெறுத்தவரையில் ஆரம்பநிலையிலேயே உள்ளது. தற்போது அதற்கான ஏற்பாடுகள் பற்றிப் பேசுகின்றனர். அது பற்றிய மாநாடுகளையும் செயலமர்வுகளையும் அந்த தினத்தையும் நினைவு கூர்கின்றனர். இன்று ஓட்டிசம் நிலையம் ஒன்றை

அமைப்பது பற்றி ஆலோசிக்கின்றனர். அவ்வாறு அமைக்கப்படும் நிலையத்தினால் ஓட்டிசம் உள்ள பிள்ளைகளை இனங்கண்டு அவர்களுக்குப் பயிற்சியளித்து அவர்களைச் சாதாரணநிலைக் குக் கொண்டுவரலாம் என்று நம்பப்படுகின்றது. வெளிநாடு களில், சரியான பயிற்சி மற்றும் பராமரிப்பு மூலம் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை கல்வியாளர்களாகவும், விளையாட்டு வீரர்களாகவும் ஏனைய செயற்பாட்டாளர்களாகவும் திகழச் செய்யலாம் என்பதை சாத்தியமாக்கிக் காட்டியிருக்கிறனர்..

இலங்கையில் ஓட்டிசம் உள்ள குழந்தைகள் பலர் தனிமைப் படுத்தல் அல்லது தனித்துவிடல் என்ற நிலையிலேயே உள்ளனர். அதுமட்டுமல்ல அவர்களை வித்தியாசமாகப் பார்க்கும் நிலையும் இருக்கின்றது. அவர்களைக் கேலியும் கிண்டலும் செய்யும் தன்மை யும் உள்ளது. அதனால் சமூகத்தில் அவர்களுக்குக் கிடைக்கும் மதிப்பும் வாழ்வியலும் தடங்கலுடன் காணப்படுகின்றது. அத்தோடு கல்வி வேலைவாய்ப்பு தொடர்பான சேவைகளைப் பெறுவதிலும் தடங்கல் ஏற்படுகின்றது.

### இவர்களுக்கு உதவும் முறை

1. வசதியான இருக்கையினை ஏற்பாடு செய்துகொடுத்தல்.
2. உடற்குறைபாடுடைய பிள்ளைகள் நடமாடும்போது கவன மாக இருத்தல். மற்றப் பிள்ளைகள் அவர்களுக்கு உதவுவதற்கு வழிப்படுத்துதல்.
3. அவர்கள் செய்கின்ற செயற்பாடுகளை மதித்து ஊக்கப்படுத்தல்.
4. அவர்கள் உபயோகிக்கின்ற சாதனங்களை வகுப்பறையில் கவனமாக பாதுகாத்து அவர்களுக்கு உதவுதல்.
5. மற்றவர்களால் ஊக்கப்படுத்துவதற்கு வழிப்படுத்துதல்.
6. நோயுற்ற மாணவர்களின் சிகிச்சைக்கு உதவுதல்.
7. கல்வியுடன் இணைந்த கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள உதவுதல்.

# 7

# கற்கும் திறனில் குறைபாடுடைய மாணவர்கள்

கற்றல் இயலாமைகள் மற்றும் கற்றல் இடர்பாடுகள் என்பன மாணவர்களின் கற்றல் திறன்களைப் பாதிக்கின்றன. கற்றல் இயலாமை (Disability) தொடர்ந்து கற்கமுடியாத நிலையினையும், கற்றல் இடர்பாடு (Distress) கற்கும்போது இடையிடையே தோன்றும் குறைபாட்டினையும் அடையாளப்படுத்துகின்றது. இந்த இரண்டு நிலைகளிலும் வாசிப்பு, எழுத்து, கணிதக்குறைபாடு காணப்படு கின்றது. ஆகவே, கற்றல் குறைபாடு என்பது பேசுவதற்கு அல்லது எழுதுவதற்கு அல்லது மொழியைப் புரிந்து கொள்வதற்கு அல்லது மொழியைப் பயன்படுத்துவதற்குத் தேவைப்படுகின்ற அடிப்படை உளவியல் செய்முறைகள் ஒன்றாலோ பலவற்றாலோ ஏற்படும் குறைபாடாகும்.

### பேச்சுத்திறன் குறைபாடு

வாசிப்பு, எழுத்து, கணிதம் ஆகிய திறன்களை கற்கும் திறனில் குறைபாடுடையோர் எனும் பகுதியில் அமைந்தாலும் பேச்சுத்திறன் குறைபாடு பற்றியும் இந்த இடத்தில் பதிவிட்டுச் செல்வதனால் இப்பகுதி வலுவுடையதாக இருக்கும் என எண்ணுகின்றேன். ஆரம்பத்தில் ஒரு குழந்தை பெறும்திறன் இதுவாகும். கேட்கும் திறன் முதல் திறனாக இருந்தபோதும் பேசுவதன் மூலமே தனது கருத்தை வெளிப்படுத்துகின்றது. பேச்சுத்திறன் குறைபாடுடைய மாணவர்களின் பண்புகள் சிலவற்றினை அவதானிக்க முடியும்.

1. உச்சரிக்கும் போதுபலவித தவறுகள் ஏற்படும்
2. குரலில் பலவிதக் குறைபாடுகள் காணப்படும்

3. கொன்னையாகப் பேசுவார்கள்
4. பலவகைப் பேச்சுப் பலவீனங்கள் காணப்படும்

தவறாக உச்சரிக்கும் மாணவர்கள்

1. சில ஒலிகளைத் தவறாக உச்சரித்தல்
2. சில ஒலிகளை விட்டு உச்சரித்தல்
3. ஒலிகளை மாற்றி உச்சரித்தல்

குரலில் பலவிதக் குறைபாடுகாட்டும் மாணவர்கள்

1. ஆண் - பெண் வித்தியாசமின்றிக் குரல் இருத்தல்
2. குரல் அதிகம் தடிப்பாக இருத்தல்
3. குரல் (கீச்சுக் குரல்) நாசிகளின் ஊடாக வெளிப்படுதல்
4. குரல் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருத்தல்

இவ்வாறான குரலில் குறைபாடு காணப்படும் மாணவர்களை இனங்கண்டு பெற்றோர்களுக்குத் தெளிவுபடுத்தி வைத்தியரின் உதவியினை நாடச் செய்தல்வேண்டும். இல்லாவிட்டால் இத்தகைய குறைபாடு கற்பித்தல் - கற்றலில் சிக்லைத் தோற்றுவித்துவிடும்.

கொன்னைத் தன்மையினைக் காட்டும் பிள்ளைகள்

கொன்னைத் தன்மை என்பது சிறுவயது முதற்கொண்டு காணப்படும் ஒரு குறைபாடாகும். சிறுவயதில் இருந்தே இந்த நிலை தொடருமாக இருந்தால் பெற்றோருக்கு விளக்கமளித்து வைத்திய உதவியை நாடச்செய்தல்வேண்டும்.

பேச்சுக்குறைபாடுடைய மாணவர்களின் பொதுவான இயல்பு களாகப் பின்வரும் பண்புகளை அவதானிக்க முடிகின்றன.

1. கொன்னுதல்
2. ஒரே சொல்லை மீண்டும் மீண்டும் உச்சரித்தல்
3. சொல்லின் ஒரு பகுதியை இடர்பாட்டுடன் உச்சரித்தல்
4. இயற்கைக்கு முரணாக கண் இமைகளை அடிக்கடி மூடுதல்
5. தொடர்ச்சியாக அமைதியைப் பேணுதல்
6. கதைப்பதற்கு விருப்பமின்மை
7. கதைக்கும்போது முகபாவனையில் இடர்பாடுகளைக் காட்டுதல்

ஆசிரியர் செய்யவேண்டியவை

1. அவர்களைத் தொடர்ந்து கவனித்து அவர்கள் மீது விசேட கவனம் காட்டுதல்.
2. மாணவர்கள் உச்சரிப்பது போன்று சொற்களையோ, சொற்றொடர்களையோ வாக்கியங்களையோ உச்சரித்து தவறுகளை உணரச் செய்தல்.
3. எழுத்துக்களை விட்டு உச்சரிக்கும் மாணவனுக்கு அவர்கள் தவறவிடும் எழுத்துக்களை எடுத்துக்காட்டி, அவற்றை மேன் மேலும் உச்சரிப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுத்தல்.
4. அவர்களது உச்சரிப்புத் தவறுகளை இனங்கண்டு திரும்பத்திரும்ப அதே சொற்கள் வரக்கூடியவாறான பாடல் ஒன்றை அல்லது, விளையாட்டு (பேச்சு) ஒன்றினைத் தயார்செய்து முன்கொண்டு செல்லுதல்.
5. குறைபாடுடைய சொற்களை உள்ளடக்கும் வாக்கியங்களை அமைத்து அவற்றை வாசிக்கச் செய்தல். திருத்தி வாசிப்பதற்காக அவற்றை மீண்டும் மீண்டும் வாசிக்கச்செய்தல்.
6. சிறிய சிறிய பாடல்கள், கவிதைகள் போன்றவற்றை செவி மடுக்கச் செய்வதன்மூலம் உச்சரிப்புத் தெளிவினை ஏற்படுத் துதல்.
7. வகுப்பறையில் இவ்வாறான மாணவர்களைத் தனிமைப் படுத்தாது, அவர்களுக்குப் பேசுவதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக்கொடுத்தல்.
8. அவர்களுடைய பேச்சினைப் பொறுமையுடன் கேட்டல்.
9. அவர்களது தேவையினை இயன்றளவு நிறைவேற்றுவதற்கு முயலல்.
10. அவர்களுடைய சமுதாய வளர்ச்சியில் விசேட கவனம் செலுத்தல்.
11. குழுச் செயற்பாடுகளில் மற்ற மாணவர்களைப் போல் இவர்களையும் பங்குபெறச்செய்தல். அப்போது அவர்களுக்கான தன்னம்பிக்கை வளர வாய்ப்பு அதிகமாக ஏற்படுகின்றது.
12. அவர்களது குறைபாடு பற்றி அவர்களுக்குத் தெரிவிப்பதனைத் தவிர்த்தல்.

13. ஏதாவதொரு செயற்பாட்டின்போது மாணவரது கொன்னைத் தன்மை அதிகரிக்குமாயின் மாணவரை அவ்வாறான செயற் பாட்டில் ஈடுபடச் செய்வதனைத் தவிர்த்தல்.
14. இயன்றவரை பேசுவதற்கு ஊக்கமளித்து, சரியான துலங்கலை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தல்.
15. சரியான உச்சரிப்புடன் கூடிய பேச்சுக்களைச் செவிமடுக்கச் செய்தல்.
16. பெற்றோர்களைச் சந்தித்து இடர்பாடுகளை விளக்குதல். அதனை நிவிர்த்தி செய்வதற்கான வழிமுறைகளை அவர்களுக்குத் தெளிவாக முன்வைத்தல்.

## வாசிப்புத் திறன் குறைபாடு (Dyslexia)

ஒரு மனிதனின் வாசிப்புத்திறனைப் பாதிக்கும் மூளைசார்ந்த கற்றல் குறைபாட்டினை டிஸ்லெக்சியா என்பர். இது ஒரு வளர்ச்சிக் குறை பாடுமாகும். இந்த வளர்ச்சிக்குறைபாடு வாசிப்புக் குறைபாடாக அமைகின்றது. வாசிப்புக் குறைபாட்டினை பிரித்தானியாவின் பொதுநல மருத்துவர் பிரிங்கல் மோர்கன் (Pringle Morgan) 1896ஆம் ஆண்டு பிரித்தானிய மருத்துவ ஆய்விதழில் (British Medical Journal) பதிவு செய்திருந்தார். ஒரு மாணவனின் அறிவில் எந்தக் குறையும் இல்லை. ஆனால், அவனால் வாசிக்கமுடியாமல் இருக்கின்றது. அவன் வாசிப்பதில் பல தவறுகளை விடுகின்றான். எழுத்துப்பிழைகள் அதிகமாக உள்ளன. சொற்களின் எழுத்துக்களை மாற்றி எழுது கின்றான். அவனால் 7 என்ற எண்ணை வாசிக்கமுடியுமே தவிர அதனை ஏழு என்ற வடிவில் எழுதினால் வாசிப்பதற்கு இடர்படு கின்றான் என்றவாறு தனது ஆய்வினை முன்வைத்தார்.

டிஸ்லெக்சியா குறைபாடுடையவர்களிடம் சாதாரண அறிவி ருக்கும், கல்வி வாய்ப்புக் குறைபாடும் இருக்காது, ஆனால் போது மான அறிவு பெற்றிருந்தாலும் இவர்கள் சொற்களை வாசிப்பதில் குறைவான திறன்களைப் பெற்றிருப்பர். இவர்கள் பல்திறன்கள் கொண்டிருந்தபோதும் ஒரே வேகத்திலும் ஒரே சீராகவும் ஒன்றி ணைந்து வாசிக்கமுடியாமலும் காணப்படுவார்கள். இவர்கள் வாசிக்கும்போது பல்வகையான தவறுகளை விடுகின்றனர்.

1. ஓர் எழுத்தை விட்டுவிட்டு வாசிப்பது. (பாதகம் - பாதம்)
2. ஓர் எழுத்துக்குப் பதிலாக வேறு ஒரு எழுத்தினை புகுத்தி வாசிப்பது. (பகுப்பு - பருப்பு)
3. ஒரு சொல்லுக்குப் பதிலாக வேறு ஒரு சொல்லை உச்சரிப்பது. (தவறு - தப்பு)

மேலும், புதிய சொற்களைக் கற்றுக்கொள்வதற்குச் சிரமப்படுவார்கள். ஒருமுறை கற்ற சொற்களை விரைவில் மறந்துவிடுவார்கள். புறநானூறு போன்ற சொற்களை வாசிப்பதில் சிரமப்படுவார்கள். வாசிப்புத் திறன் குறைந்தவர்கள் மேல் வகுப்பிலும் எழுத்துக்கூட்டி வாசிக்க வேண்டிய நிலைக்கு ஆளாகின்றனர்.

டிஸ்லெக்சியா எனும் குறைபாடு மனித சமுதாயத்தில் வேறு பாடின்றி காணப்படுகின்றது. இது கண்ணுக்குப் புலப்படாத குறை பாடாக இருப்பதனால் ஆசிரியர்களும் இதன் தன்மையினை அறிவதில்லை. பெற்றோர்களும் அதனை அறியத் தவறிவிடுகின்றனர். இறுதியில் பிள்ளை பாடசாலையில் இருந்து விலக்கப்படுவதோடு, தானாக விலகியும் செல்கின்றது. டிஸ்லெக்சியா ஆண்-பெண் தொகைக்கு எற்ப 2:1 என்ற விகிதாசாரத்தில் காணப்படுகின்றது.

இந்தக் குறைபாடு பரம்பரையினால் ஏற்படுகின்றது என்பர். ஆய்வு முடிவுகளின்படி டிஸ்லெக்சியா உள்ள ஒருவரின் தகப்பனுக்கு 44 வீதமும் தாய்க்கு 33 வீதமும் இருப்பதனை உறுதி செய்கின்றது. இந்தக் குறைபாடு உண்டாவதற்கு மரபணுக்கள் ஒருவகையில் காரணமாக அமைகின்றன. இந்த மரபணுக்கள் உள்ளவர்களில் 15 வீதத்தினருக்கே இந்தக் குறைபாடு தோன்றுகின்றது என்பதனையும் முன்வைக்கின்றனர். மேலும், சூழல் காரணிகளும் டிஸ்லெக்கியா குறைபாட்டினைத் தோற்றுவிக்கின்றன.

டிஸ்லெக்கியா குறைபாடு ஆரம்பத்திலே கண்டறியப்பட வேண்டும். இன்றைய கல்வி உலகில் மூன்று வயதில் குழந்தைகள் பாலர் பாடசாலைக்கு அனுப்பப்படுகின்றனர். இந்தக் குறைபாட்டின் அறிகுறிகளை இரண்டு வயதில் இருந்து ஐந்து வயதுக்குள் அவதானிக்கமுயுயும் என்கின்றனர். அவ்வாறெனின் டிஸ்லெக்கியா பற்றிய குணங்குறிகளைப் பெற்றோர்களும் தெரிந்திருப்பது அவசிய மாகும். மேலும், பாலர்பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள்

கவனமாக இந்தப் பிள்ளைகளை இனங்கண்டு அவர்களுக்கான கல்வியை வழங்குவதற்கு தேவையான பயிற்சியினைப் பெற்றிருப்பது அவசியமாகின்றது. இதன் அறிகுறிகள் பலவாக அமைந்தபோதிலும் முக்கியமான சிலவற்றைக் அடையாளப்படுத்தமுடிகின்றது.

1. அரிச்சுவடியைக் கற்றுக்கொள்வதில் சிரமப்படுவார்கள்.
2. சிறிய பாடலைப் பாடுவதற்குச் இடர்படுவார்கள்.
3. பொருட்கள், நிறங்கள், எண்களின் பெயர்களைக் கூறுவதில் சிரமத்தைக் காட்டுவார்கள்.
4. வயதுக்குப் பொருத்தமற்ற மழலைப்பேச்சுப் பேசுவார்கள்.
5. சகபாடிகளைக் காட்டிலும் தாமதமாகவே பேசுவார்கள்.
6. சொற்களின் ஒலியை உச்சரிப்பதில் குழப்பத்துடன் காணப் படுவார்கள்.

பாலர் பாடசாலையில் கற்ற பிள்ளை ஆரம்பக் கல்வியைப் பெறுவ தற்காக பாடசாலைக்கு வருகின்றான். மாணவர்கள் ஆரம்பக் கல்வி யைப் பெறுவதற்கு பாடசாலைக்கு வந்ததன் பிற்பாடு காணப்படும் டிஸ்லெக்சியாக் குறைபாடு பெரிதும் கற்றலில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. இந்தக் குறைபாடு ஐந்து வயதுக்குமேல் உள்ள பிள்ளைகளைப் பாதிக்கின்றது. ஒரு மாணவன் தொடர்ந்து வகுப்பேற்றப்பட்டாலும் அவனிடம் இத்தகைய குறைபாடு இருக்குமாக இருந்தால் அவனிடம் பின்னடைவான தன்மைகளே காணப்படும்.

1. தனது வயதுக்குரிய நிலையைவிட இரண்டு வகுப்புக்கள் குறை வான மாணவர்களின் நிலையினை ஒத்திருத்தல்.
2. தடங்கித் தடங்கி மெதுவாக வாசித்தல்.
3. வகுப்பறையில் உரத்து வாசிப்பதில் சிரமப்படுதல்.
4. கரும்பலகையில் உள்ள எழுத்துக்களை எழுதுவதில் சிரமப் படுதல்.
5. வாய்மொழியாகப் பதில்கள் கூறினாலும் எழுத்து வடிவில் முன்வைக்க இடர்படுதல்.
6. இரண்டாவது மொழி ஒன்றைக் கற்றுக் கொள்வதற்கு சிரமப் படுதல்.

7. தான் கூறவந்த வார்த்தைக்கு வேறுவார்த்தையை முன்வைக்கச் சிரமப்படுதல்.

இவ்வாறான குறைபாடுடைய மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு விசேடமான முறையில் கல்வி புகட்டுதல் வேண்டும். இங்கு காணப்பட்ட மொழிசார்ந்த குறைபாடுகளைக் கணிசமான அளவு தீர்த்துக்கொள்ள முடியும். இதற்காக கற்பித்தல் முறையில் மாற்றத்தினைக் கொண்டுவர வேண்டும். ஒரு சொல்லில் உள்ள ஒலியன்களை பிரித்துக் கற்பிப்பது சிறப்பானது. அதனால் அதில் உள்ள அசைவுகளை அந்த மாணவனால் படிப்படியாக விளங்கிக் கொள்ள முடிகின்றது. டிஸ்லெக்கியா உள்ள மாணவர்களை ஒதுக்காது அவர்களுக்கான கல்வியைத் திட்டமிட்டுக் கற்பிப்பதன் மூலம் முன்கொண்டு செல்லவேண்டும். இத்தகைய மாணவர்களுக் கென்று வேறு வகுப்புக்களை உருவாக்காது சாதாரண மாணவர்கள் கற்கின்ற வகுப்பறையில் வைத்துக் கற்பிக்க வேண்டும். இதனை இன்று உட்படுத்தல் கல்வி முறை என்கின்றனர். மேலும், வாசிப்புப் பயிற்சி அளிப்பதற்காக விசேட கல்வியில் சிறப்புப் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் உள்வாங்கப்பட வேண்டும். இத்தகைய பயிற்சியினை வெற்றிகரமாக முன்கொண்டு செல்வதற்கு வளமிகு வகுப்புக்களைப் பயன்படுத்துவது பொருத்தமானது. பயிற்சியளிக்கும்போது ஒரு குழுவில் மூன்று அல்லது நான்கு மாணவர்கள் அமைவதுதான் பொருத்தமுடையது. வாசிப்புத்திறன் குறைபாடு இனங்காணப்பட்டு பொருத்தமான செயற்பாட்டினால் அதனைச் சீர் செய்யவில்லையாயின் அக்குறைபாடு எழுத்துத் திறனிலும் கணிதத்திறனிலும் தாக்கத்தினை ஏற்படுத்திவிடும்.

### எழுதும் திறனில் குறைபாடு (Dysgraphia)

இது ஒரு கற்றல் குறைபாடாகும். இது ஒரு மொழி அடிப்படையிலான குறைபாடு என்பர். பலருக்கு கையெழுத்துக் குறைபாடு இருந்தாலும் இந்த குறைபாடு உடையவர்கள் அதிகம் பாதிக்கின்றனர். மொழியின் ஒலிகளை எழுத்துவடிவில் கொண்டுவருவதில் சிரமம், எழுத்துக் களைச் சரியாக எழுதாமல் தலைகீழாக எழுதுதல், எழுத்துக்களுக் கிடையே பொருத்தப்பாடின்மை, ஒழுங்கற்ற அளவுகளில் எழுத்து காணப்படல், சொற்களைக் கொண்டு முடிப்பதில் சிரமப்படுதல்,

கோடுகள் விழிம்புகள் என்பனவற்றுக்கிடையே பொருத்தப் பாடின்மை, சொற்களுக்கிடையேயான இடைவெளி சீரற்ற தன்மை கொண்டதாக காணப்படுதல், எழுது கருவியினைப் பிடித்து எழுதுவதில் சிக்கல் நிலை காணப்படுதல், வினைச் சொற்களைப் பயன்படுத்தி சொற்களை முடிக்கமுடியாதிருத்தல், உச்சரிப்பில் இடர்பாடு காணப்படுதல் முதலிய குறைபாடுகள் இக்குறைபாடுடை யவர்களுக்கு இருக்கும்.

இவ்வாறான குறைபாடுடையவர்களை மக்கள் ஆதரவுடன் குறைத்துவிடலாம் என்கின்றனர். அதாவது மதிப்பீடுகளைச் சரி செய்தல், எதிர்பார்ப்புக்களை அதிகரித்துப் பலவீனத்தைத் குறைத்தல், கையெழுத்து மற்றும் எழுத்துத் திறன்களை மேம்படுத்துவதற்கு வழிமுறைகளை வழங்குதல் முதலிய செயற்பாடுகளை மேற் கொள்வது சிறந்தது.

### கணிதத் திறனில் குறைபாடு (Dyscalculia)

இந்தக் குறைபாடுடையவர்கள் கணித எண்ணக்கருக்களைக் கற்பதிலும் விளங்குவதிலும் இடர்படுவார்கள். கடிகாரங்களில் நேரத்தினை சரியாகச் சொல்வதற்குச் சிரமப்படுதல், இரண்டு எண்களில் பெரிது சிறிதினை அடையாளம் காண்பதற்கு முடியாத வர்களாக இருத்தல், எண் 5 என்பதனை 5 என்று புரிந்துகொள்ளாதவர் களாக இருத்தல், பொருட்களின் விலைகளை மதிப்பீடு செய்வதில் இடருறுதல், கணிதக் குறிகளைச் சரியாகப் பயன்படுத்தி கணிப்பதில் சிக்கலுடன் காணப்படுதல், கணிதத்திறன்களைப் புரிந்துகொண்டு நடைமுறைக்குக் கொண்டுவருவதில் தாமதமும் சிக்கலும் உண்டாதல், எண்களின் பெயர்களை வாசிப்பதில் சிரமப்படுதல், பின்நோக்கி வேலை செய்வதில் சிக்கலுடன் காணப்படதல் முதலிய குறைபாடுகள் இவர்களிடம் காணப்படும். இவ்வாறான குறைபாடு டையவர்ளுக்கு அதனை நிவிர்த்தி செய்வதற்கு விளையாட்டு மூலம் கணிதம் கற்பித்தல் சிறப்பானது. அட்டைப் படங்களை முன்வைத்து கணிதத் திறன்களோடிணைந்த செயற்பாடுகளை முன்கொண்டு செல்லலாம். அத்தோடு, கணனி மென்பொருளைக் கையாண்டு கற்பித்தலை மேற்கொள்வதனால் மாணவன் அதன்பால் இலகுவாக ஈர்க்கப்பட வாய்ப்புள்ளது. இவற்றுக்கப்பால் முதலில் குழந்தைகள்

பரிசோதனை செய்யப்பட்டு அவர்களின் குறைபாடு கண்டுபிடிக்கப்படுவது அவசியமானதாகும்.

## கற்கும் திறன் குறைவிற்கான காரணங்கள்

### மரபுநிலை

பரம்பரை கற்கும் திறனில் தாக்கத்தை உண்டுபண்ணுகின்றது என்பர். இந்தத் தாக்கத்தில் பெற்றோர் அல்லது குடும்ப உறுப்பினர்களின் தாக்கம் காணப்படுவதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கின்றது.

### கருவுற்றிருக்கும் காலத்திலும் குழந்தை பிறப்பிலும் ஏற்படும் பிரச்சினைகள்

கருவிலே ஏற்படும் மூளை வளர்ச்சி, கருவுற்ற காலத்தில் வரும் தொற்று நோய்கள், போதைப்பொருள் தாக்கம், விபத்துக்களால் காயம் ஏற்படுதல், பிரசவத்தின் போது ஏற்படுகின்ற பல்வேறு தாக்கங்கள் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

### பிறப்புக்குப் பின் விபத்துக்கள்

சத்துணவுக்குறைபாடு, நச்சுப்பொருட்கள் உடலில் கலத்தல், தலைக்காயம் ஏற்படுதல் முதலிய குறைபாடுகள் நிகழ்கின்றன.

### கற்கும் திறன் விருத்தி செய்தல்

1. சிறந்த மருத்துவமுறைகளைப் பெற்றுக்கொடுத்தல்.
2. நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துதல்.

இத்தகைய மாற்றங்களை சிறு வயதிலே இனங்கண்டு பரிகாரம் காணுதல் வேண்டும்.

### தேர்ச்சிப் படிவம்

1. கற்கும் ஒவ்வொருவரையும் தமது தேர்ச்சி நிலைக்கேற்ப செயற்படச் செய்தல்.
2. வகுப்பறையில் அதிகளவு பயிற்சி கொடுத்து அதனை திருத்திக் கொடுத்தல்.
3. ஒரு குறிப்பிட்ட நிலைக்கான அடிப்படைத் திறன்களைக் கற்று தேர்ச்சியடைந்த பின் அடுத்த நிலைக்கு நகருதல்.

நேரடியாகக் கற்பித்தல் மேற்கொள்ளுதல்

1. கற்பித்தலை நன்கு வடிவமைத்து முறையாகப் பயிற்சியளித்தல்.
2. கவனமாகத் திட்டமிடப்பட்ட பாடங்களையும் கற்றல் திறனுக்கேற்ப முன்கொண்டு செல்லுதல்.
3. ஆசிரியர் - மாணவர் இடையே அதிகளவிலான இடைத் தொடர்பினை அதிகரித்தல்.
4. மாணவருடைய தவறுகள் உடன் திருத்தப்படுதல்.
5. குழுநிலையில் அடைவினை பரீட்சித்தல்.
6. அடைவினை அடிக்கடி பரீட்சித்தல்.

வகுப்பறையில் சில மாற்றங்களை மேற்கொள்ளல்

1. சிறப்பான இட அமைப்பினை மேற்கொள்ளுதல்.
2. மாற்றியமைக்கப்பட்ட ஒப்படைகளைக் கொடுத்தல்.
3. அமைதியான சூழலைப் பேணுதல்.

பிரத்தியேகக் கருவிகளைப் பயன்படுத்துதல்

1. சொற்களைப் பகுத்தாராய்தல், சொற்களின் சரியான எழுத்துக் களைக் கண்டறிதல், சொற்களஞ்சியம் ஆகியவற்றை உள்ளடக்கிய கணினியைப் பயன்படுத்துதல்.
2. பேசுவதை எழுத்துவடிவில் மாற்றுதல், எழுத்துவடிவில் உள்ளதை பேச்சுவடிவுக்குக் கொண்டு வருதல்.
3. பேசும் கணக்கீட்டுக் கருவிகளைப் பயன்படுத்துதல்.
4. ஒலிநாடாவில் பதியப்பட்ட புத்தகப் பயிற்சியினைக் கொடுத்தல்.

சிறப்புக் கல்வி வழங்குதல்

1. கால அளவினைக் கருத்திற்கொண்டு செயற்படச் செய்தல்.
2. உட்படுத்தல் வகுப்பறையில் சேர்ந்து கற்பித்தல்.
3. தனிநபருக்கான கல்வித்திட்டத்தை மேம்படுத்துதல்.
4. நடத்தையைத் திருத்தும் முறைகளை கல்வியில் பயன்படுத் துதல்.

## 8

# பிழையான சீராக்கமுடைய பிள்ளைகள்

வகுப்பறையில் அல்லது தாம் அங்கம் வகிக்கும் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சில நடத்தை முறைகளைப் பின்பற்றாது இருப்பவர்களை பிழையான சீராக்கமுடையோர் என்று அழைக்கின்றனர். பிழையான சீராக்கம் ஒரு சமூகப் பிரச்சினையாகும். அது ஒரு சமூகப் பிரச்சினையாக இருப்பினும் கல்வியுடன் தொடர்புபடுத்தி அதன் செயல்நிலை அவதானிக்கப்படுகின்றது. பிழையான சீராக்கமுடைய பலர் பிற்போக்குடையவர்களாக உள்ளனர். இந்தப் பிரச்சினை மாணவர்களது அடைவுமட்டத்தை நேரடியாவே பாதிக்கின்றது.

### நடத்தை அமைப்பு

முரட்டுத்தனம், வன்செயலில் ஈடுபடுதல், பொய்கூறுவதனைப் பழக்கமாகக் கொள்ளுதல், ஒதுங்கி வாழுதல், எப்போதும் கேலி விளையாட்டுகள் புரிதல், கல்வியில் அக்கறையின்மையுடன் இருத்தல் முதலிய செயற்பாடுகள் நடத்தைமுறையில் வெளிப்படுகின்றது.

### உடலுக்குரிய இயல்புகள்

இவர்கள் நகம் கடித்தல், களைப்பு உருவாதல், கொன்னையாய்ப் பேசுதல், வாந்தி எடுத்தல் முதலிய குறைபாடுடையவர்களாக இருப்பார்கள்

### மனவெழுச்சி இயல்புகள்

அதிகம் கோபப்படல், தேவையற்ற பயம், தாழ்வுச் சிக்கல், உயர்வுச் சிக்கல், கீழ்ப்படியாமை போன்ற பண்புகள் வெளிப்படும்.

### பிழையான சீராக்கமுடையவர்களுக்கான கல்வி மேம்பாடு

1. பிழையான சீராக்கத்தின் பண்புகளை பட்டியற்படுத்துதல்.
2. அவர்களுடைய நடத்தையில் ஆசிரியர் கவனம் செலுத்துதல்.
3. பெற்றோர்களுடன் கலந்துரையாடி விடயத்தினைத் தெளிவு படுத்துதல்.
4. வகுப்பில் ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகளுக்கு உடன் பரிகாரம் காணுதல்.
5. ஆசிரியர் - மாணவர் தொடர்பினை சுமுகமாக ஏற்படுத்தி ஜனநாயகமுறையில் செயற்படுத்துதல்.
6. வகுப்பறையில் தொடர்ச்சியாக ஒழுங்கு முறையிலான வேலைத் திட்டத்தினைச் செயற்படுத்துதல்.
7. விளையாட்டு, வினோதச் செயற்பாடுகள் போன்ற இணைப் பாடவிதானச் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களை ஊக்கப்படுத்துதல்.
8. சகல பிள்ளைகளும் வெற்றி கொள்ளும் வகையில் செயற் பாட்டினை ஒழுங்குபடுத்தி வடிவமைத்துக் கொள்ளுதல்.
9. முரட்டுத்தனமான பிள்ளைகளையும் கீழ்ப்படிய வைப்பதற் கான வகையில் பாடமுன்னாயத்தம் செய்தல்.

### நெறிபிறழ்ந்த பிள்ளைகள்

பிழையான சீராக்கமுடைய பிள்ளைகள் நெறிபிறழ்வதற்கான வாய்ப்பு அதிகமாகின்றது. கட்டிளமைப் பருவத்தில் அதிகமான பிள்ளைகள் நெறி பிறழ்வுக்கு உள்ளாகின்றனர். இந்தப் பருவப் பிள்ளைகளால் உலகம் இன்று பாரிய சிக்கலை எதிர்நோக்கி நிற்கின்றது. இவர்கள் சமூகம் ஏற்றுக்கொள்ளாத நடத்தைகளில் ஈடுபடுகின்றனர். சமூகநடத்தை என்பது கலை கலாசாரத்துக்கேற்ப, சூழலுக்கு ஏற்ப, சமூகத்தற்கு ஏற்ப தீர்மானிக்கப் படுகின்றது. ஒருவனது ஆளுமையில் அதியகம் எனும் சக்தியில் ஏற்படும் குறைவளர்ச்சி காரணமாகவே நெறிபிறழ்வு ஏற்படுகின்றது. இவ்விளக்கத்தின் பிரகாரம் ஒருவன் தான்வாழும் குடும்பம் சமூகம் என்பவற்றால் முன்வைக்கப்படும் ஒழுக்கமுறைகள், நடத்தை முறைகள் என்பதற்கு ஏற்ப தன்னை

மாற்றிக்கொள்வதற்கு முடியாத போதே அவன் நெறிபிறழ்கின்றான். ஆகவே, சமூகநியமங்களை கோட்பாடுகளை உடைத்துக்கொண்டு தனது இயலாத்தன்மையினைப் போக்கிக்கொள்ள முயல்கின்றான். ஜோன்சன், சுரேக் போன்றவர்கள் நெறிபிறழ் அதியகத்தில் ஒரு தாக்க நிலை காரணமாக ஏற்படுகின்றது என்கின்றார்கள். பன்தூரோ, வோல்டன், முதலியோர் நெறிபிறழ்வு என்பது அடைய முடியாத தேவையை அடைய முனையும் போது ஒருவன் வன்செயல் செய்ப வனாக மாறுகின்றான். சில உளவியலாளர்கள் மையநரம்புத் தொகுதியின் ஓர் இரகசியமான தொழிற்பாடு நெறிபிறழ்வாகும் என்றும் குறிப்பிடுவர். ஒருவனது நடத்தை சமூகவிரோத நடத்தையாக மாறி இறுதியில் அந்த நடத்தை சட்டத்தால் தண்டிக்கப்படுமாயின் அது நெறிபிறழ் நடத்தையாகும் என சிரில் போர்ட் குறிப்பிட்டுள்ளார். தனது உள்ளத்தில் தோன்றும் பல்வேறு ஆசைகளை நிறைவேற்ற முயல்வதனாலேயே ஒருவன் நெறிபிறழ்கின்றான் என சமயங்கள் குறிப்பிடுகின்றன. ஒருவனது நரம்புத் தொகுதியில் ஏற்படும் தாக்கங்கள் காரணமாக நெறிபிறழ்வுக்குத் தூண்டப்படுகின்றான் என உயிரியல் விஞ்ஞானம் கூறுகின்றது. சமூக அடிப்படையில் தனியாளிடம் ஏற்படும் ஒரு நடத்தை நெறிபிறழ்வு என சமூக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அதாவது, ஒரு சமூகத்தில் காணப்படும் அநீதி, ஊழல், ஏற்றத்தாழ்வுகள் என்பன காரணமாகவே தனியாட் களின் சமூகவிரோதச் செயல்கள் பிறக்கின்றன என இவர்கள் அடை யாளப்படுத்துகின்றனர். சமூகம் நிர்ணயித்த இலக்கை அடைவதில் தடை ஏற்படும்போது மனமுறிவடையும் தனியாள் தனது இலக்கை வேறு சமூகவிரோதச் செயல்களின் மூலம் அடைவதற்கு முயல்வ தனாலேயே நெறி பிறழ்வு ஏற்படுகின்றது. சட்டம் என்பது இல்லா விட்டால் நெறிபிறழ்வு என்ற ஒன்றும் இருக்காது. ஒரு நடத்தை திடீரென நெறிபிறழ்வான நடத்தையென முடிவு செய்து விடக்கூடாது எனவும், ஏதாவது நடத்தைக்கு நீதி மன்றம் தண்டனை வழங்கினால் அதனை நெறிபிறழ்வு நடத்தையெனக் கூறமுடியும் என்றும், அதுவன்றி ஒரு நடத்தையை சமூகவிரோதமானது என்பதனால் மட்டும் அதனை நெறிபிறழ்ந்த நடத்தை எனக் கூறமுடியாது என நீதித்துறையைச் சேர்ந்தோர் விளக்கம் தருகின்றனர்.

## நெறிபிறழ்வு நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

### பரம்பரைக் காரணிகள்

விவேக ஆற்றல் பரம்பரையினால் தீர்மானிக்கப்படுகின்றது என்பதனை கெலிகட் குடும்பம், யூக்குடும்பம் ஆகியவற்றின் அடிப்படையில் முன்வைக்கின்றனர். குற்றவாளிகளை ஆராய்ந்த எலாம் பிராசோ சிலருடைய உடலியல் இயல்புகள் இயல்பிலே அமைந்தவை என்றும் குறிப்பிடுவார். அதனை எதிர்த்த ஆங்கில நாட்டுக் கோரிங் என்பவர் குற்றவாளிகளையும் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகப் பட்டதாரிகளையும் ஆய்வுக்குட்படுத்திக் குற்றச் செயல்களுக்கு அடிப்படையாக இருப்பது விவேகம் எனவும் அவர் விளக்கினார். ஸ்மித் என்பவர் கிரன்டீன்களின் தொழிற்பாடு களுக்கும் குற்றம் புரிவதற்கும் இடையிலுள்ள தொடர்பைக் காட்ட முயன்றார். ஷெல்டன், குழுஎக் போன்றோர் உடல் அமைப்புக்கும் குற்ற நடத் தைக்கும் இடையில் உள்ள தொடர்பைக் காட் டமுயன்றார். அதாவது, அதிக தசைநார் வளர்ச்சி பெற்றோர் குற்றச் செயல்களைப் புரிவதற்கு முன்வருகின்றனர். சாதாரண விவேகம் உடையவர்களைவிட விவேகம் குறைந்தவர்கள் ஐந்து மடங்கு அதிகமான குற்றச் செயல்களைப் புரிகின்றார்கள் என ஹீலி, புரோகூர் போன்றோர் விளக்குகின்றனர். குறைந்த விவேகத்துக்கும் குற்றம் புரியும் செயலுக்கும் இடையே உள்ள தொடர்புகள் அமெரிக்காவின் கோர்டாட் செய்த பரிசோதனையில் காட்டப்படுகின்றது.

### சூழல்காரணிகள்

சூழல்காரணிகள் நான்கு பிரிவாக அமைகின்றன.

1. பௌதிகச் சூழலுடன் தொடர்புடைய காரணிகள்
2. வீட்டுடன் தொடர்புடைய காரணிகள்
3. பாடசாலையுடன் தொடர்புடைய காரணிகள்
4. சமூகத்துடன் தொடர்புடைய காரணிகள்

### பௌதிகச் சூழலுடன் தொடர்புடைய காரணிகள்

பௌதிகச் சூழலுக்கும் குற்றச் செயல்களுக்கும் இடையே பின்வரும் தொடர்புகள் இருப்பது அடயாளப்படுத்தப்படுகின்றன.

- ★ அதிக சனநெருக்கம் உள்ள இடங்களில் குற்றச் செயலில் ஈடுபடுவோர் அதிகம்.
- ★ கைத்தொழில் பிரதேசங்களில் குற்றவாளிகள் அதிகம்.
- ★ கிராமப் பகுதிகளில் குற்றவாளிகள் அதிகம்.

### வீட்டுடன் தொடர்புடைய காரணிகள்

வீட்டுச் சூழல் பிள்ளைகளின் நெறிபிறழ்வுக்குக் காரணமாக இருப்பது பல்வேறுநிலைகளில் சுட்டிக்காட்டப்படுகின்றன. பெற்றோரிடையே உள்ள உறவு நீட்சியால் இந்த நிலை அதிகம் எழ வாய்ப்பு ஏற்படுகின்றது. இந்த நிலை வீட்டுப் பொருளாதாரத்தில் நேரடியாகவே தாக்கம் செலுத்துகின்றது. அவ்வாறான நிலையில் குடும்பம் பிரிகின்றது. அதனால் பெற்றோர் என்ற நிலையில் விரிசல் ஏற்படுகின்றபோது பிள்ளைகளின் அடிப்படைத் திறமை பாதிப் படைகின்றது. அந்தநிலையில் ஏற்படும் தாக்கம் நெறிபிறழ்வினை ஏற்படுத்துகின்றது. மேலும், பெற்றோர் கல்வியறிவற்றவர்களாக இருத்தல், ஒழுக்கம் பற்றிய தெளிவு பெற்றோருக்கும் மற்றோருக்கும் இல்லாமல் இருத்தல், பிள்ளைமீது காட்டப்படும் அதிக அன்பும் அன்பு காட்டப்படாமையும், குடும்ப அங்கத்தவர்களிடையே ஏற்படும் அச்ச உணர்வு, ஓய்வு நேரத்தில் ஈடுபடுவதற்குப் பொருத்த மான செயற்பாடுகள் இன்மை, குடும்ப அங்கத்தவர் தொகை அதிக மாக இருத்தல், வழிதவறிய முதியோர் மற்றும் சகோதரர் வீட்டில் இருத்தல், நெறிபிறழ்ந்தவர்களுடன் கொண்டுள்ள ஈடுபாடு போன்ற னவும் நெறிபிறழ்வுக்கான காரணங்களாக அமைகின்றன.

### பாடசாலையுடன் தொடர்புடைய காரணிகள்

பாடசாலை நெறிபிறழ்வைத் தடுக்கின்ற சமூகநிறுவனங்களில் முக்கியமானதாகும். ஆனால், பாடசாலையில் இடம்பெறுகின்ற சில செயற்பாடுகள் மாணவர்கள் நெறிபிறழ்வதற்குக் காரணமாக அமைகின்றன. இந்த நிலை கற்பித்தல் - கற்றலில் இருந்து தொடர்கின்றது. கற்பித்தல் - கற்றல் சிறப்பாக இடம் பெறாமை நெறிபிறழ்வுக்கான அடிப்படைக்காரணமாக அமைகின்றன. அதன் தொடர்ச்சியினால் மாணவரிடையே ஒழுக்கம் இன்மை, மாணவர்க

ளிடையே சிறந்த தொடர்பு காணப்படாமை, மாணவர்களிடையே காணப்படும் ஒழுக்கமற்ற நடத்தைகள், ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே உள்ள இடைத்தொடர்பில் விரிசல், இணைப் பாட விதாணச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான வசதியின்மை, பொருத்தமான நேரத்தில் சிறந்த வழிகாட்டலைச் செய்யக்கூடிய ஆற்றல் ஆசிரியரிடம் இல்லாமை, கலைத்திட்டத்தில் உள்ள குறைபாடு முதலியன மாணவர்கள் நெறிபிறழ்வதற்கான காரணங்களாக அமைகின்றன.

**சமூகத்துடன் தொடர்புடைய காரணிகள்**

சமூக அடுக்கமைப்பில் காணப்படுகின்ற சிக்கல்கள் நெறிபிறழ்வுக்கான காரணமாக அமைக்கின்றன. அதாவது, சாதி, மத, பேதம் காரணமாகக் காணப்படும் ஏற்றத் தாழ்வுகள் நெறிபிறழ்வின் பிரதான காரணங்களாக அமைகின்றன. அதனால் தனிநபர்களிடையே காணப்படும் மனவெழுச்சி உச்சநிலையினை அடைகின்றது. அந்த நிலை தொடருமாக இருந்தால் சமூகத்தில் கொள்ளை, கொலை, கற்பழிப்பு முதலியன நிகழ்வதற்கு வாய்ப்பேற்படுகின்றது. மேலும், நீதி சரியாக வழங்கப்படாமையினாலும் பிறகாரணங்களாலும் ஏற்படும் மனமுறிவு, அதனால் உண்டாகும் சமூக ஒற்றுமையின்மை முதலிய பல காரணங்கள் சமூக நபர்களிடையே நெறிபிறழ்வைத் தூண்டுவதற்கு ஏதுவாகின்றது.

**நெறிபிறழ்விற்கான மேலும் சில காரணிகள்**

1. முரண்பாடு
2. உளச்சோர்வு
3. மனமுறிவு
4. பதகளிப்பு
5. அதட்டல் முதலியன

**முரண்பாடு**

எப்போதும் எங்கும் இடம்பெறக்கூடிய ஒன்று. அது சமூகக் கட்டமைப்பில் பல்வேறு தன்மை கொண்டவைகளாக அமைவதற்கு

வாய்ப்பு அதிகமுண்டு. ஒரே நேரத்தில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சிந்தனைகளின் நிமித்தம் முரண்பாடு எழுகின்றது. அது தொடருமாக இருந்தால் ஒருவரை இறுதியில் நோயாளியாகக்கூட மாற்றிவிடுகின்றது. உதாரணமாக பாடசாலைக் காலத்தில் படித்து முன்னேற வேண்டும் என்ற சிந்தனை இருக்கும்போது மறுபுறம் பொருளாதாரக் கஷ்டமும் இருக்கின்றது. இந்த இரண்டும் நேரடி முரண்பாடுடையவை. இவற்றிலிருந்து ஒன்றைத் தெரிவுசெய்யும் நிலை ஏற்படும்போது அங்கு முரண்பாடு சிக்கல் தன்மை கொண் டதாக மாறுகின்றது. இங்கு சிக்கல்நிலை தொடர முரண்பாடு அதிகமாகின்றது. இவ்வாறான நிலையில் சிக்கல் வலுப்பெற்று மேலும் பல முரண்பாட்டுச் சிந்தனைகளை, செயற்பாடுகளைத் தோற்றுவிக்க வழியமைக்கின்றது.

## உளச்சோர்வு

தனியாள் தமது சூழலின் தேவைகளுக்கேற்ப துலங்கும்போது அத்துலங்கலுக்கு ஈடுகொடுக்கமுடியாது சஞ்சலம் அடையும் ஒரு நிலையை உளச்சோர்வு எனக் குறிப்பிடலாம். பாடசாலைகளில் அல்லது, வீட் டில் கொடுக்கப்படும் வேலைகள், சூழல் மாசடைதல், பதகளிப்பு, மனமுறிவு முதலிய காரணங்களால் உளச்சோர்வு ஏற்படு கின்றது. தாம் வாழுகின்ற சூழலில் பல்வேறு நெருக்கிடைகளைச் சந்திக்கின்ற ஒருவருக்கு தாமாகவே மனச்சோர்வு உண்டாகின்றது. அதன் காரணமாக அவனால் அந்தச் சமூகச் செயற்பாடுகளுக்கு முகங்கொடுக்க முடியாத நிலை எற்படுகின்றது. உளச்சோர்வு உடையவர்களிடம் கவலை, கோபம், அவதானமின்மை, குழப்ப மடைதல், உணவு உட்கொள்ளவிரும்பாமை, தலைவலி போன்ற செயற்பாடுகள் இடம்பெறலாம். உளச்சோர்வு நிலைக்கு முகங் கொடுக்க முடியாத ஒருவன் நெறிபிறழ் நடத்தைக்கு உட்படுகின்றான்.

## மனமுறிவு

மனமுறிவு பல்வேறு செயற்பாடுகளால் இடம்பெறுகின்றது. அதாவது, ஒரு செயலைச் செய்யவிடாது தடுத்தல் காரணமாக இது உண்டாகின்றது. ஒருவருக்கு ஊக்கிகளால் ஏற்படுகின்ற திருப்தியைத் தடைசெய்யும் பொழுது அல்லது, தாமதப்படுத்தும் நிலையில்

மனமகிழ்ச்சி அற்றநிலை உருவாகின்றது. இந்த நிலையினை மனமுறிவு என்பர். ஒரு செயல் மாணவனுக்குப் பொருத்தமாக இருக்கின்றது ஆனால், அது நடைமுறைக்குச் சாத்தியம் இல்லை என்பதனை ஆசிரியர் உணர்ந்தால் மாணவனை திசைதிருப்பிவிடுதல் வேண்டும். செய் - செய்ய வேண்டாம் என்பதற்கு அப்பால் அவனை வேறு வழிக்குக் கொண்டுவருவதற்கு ஆசிரியர் முயற்சி செய்வது சிறப்பானதாகும். அதற்காக ஆசிரியர் சிறந்த உளவியலாளராகச் செயற்படுதல் வேண்டும். அப்போது ஏற்படும் மனமுறிவினைக் தடுக்கலாம் அல்லது, குறைத்துக்கொள்ளலாம்.

### பதகளிப்பு

ஒருவர் சங்கடமான நிலையினைச் சந்திக்கும்போது பதகளிப்பு நிலை உருவாகின்றது. இந்த நிலையினைத் தவிர்ப்பு என்றும் அழைப்பர். இது உணர்வு நிலையில், அறிதல் நிலையில் மற்றும் நடத்தைக் கோலங்களில் நிகழும் உடல் மாற்றமாகும். இதனால் உளரீதியான மாற்றமும் ஏற்படுகின்றது. இந்தப் பதகளிப்பு நிலை ஒன்றை எதிர்பார்த்து ஏமாறுதல், நடக்கக்கூடாத ஒன்று நடத்தல் முதலிய நிலைகளால் ஏற்படுகின்றது. இந்தப் பதகளிப்பால் பயம், கவலை, நம்பிக்கையின்மை முதலிய செயற்பாடுகள் தோன்றுகின்றன. இவை ஒவ்வொன்றும் வாழ்க்கையினை எதிர்மாறாக மாற்றிய மைக்கக் கூடியவைகள். பதகளிப்பு நிலை மூளையில் ஏற்படும் உயிர் இரசாயன மாற்றங்கள் மற்றும் தைரொயிட்டுச் சுரப்பிகள் அதிகரித்துச் செயற்படுதல் முதலிய காரணங்களாலும் ஏற்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகள்மூலம் பதகளிப்பு உருவாகும் சந்தர்ப்பத் தில் அமைதியினைக் கடைப்பிடிப்பது சிறந்ததாகும். அமைதியினைத் தொடர்ந்து யோகாசனம் செய்தல், மனநல வைத்தியரிடம் மனநல ஆலோசனை பெறுதல், மருந்து மாத்திரைகளைப் பாவித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவது சிறப்பானது. இவ்வாறான நிலையில் ஆசிரியர்கள் மாணவர்களை வழிப்படுத்துதல் வேண்டும்.

### அதட்டல் (அச்சுறுத்தல்)

அச்சுறுத்தல் எதிர்கால விளைவு பற்றிய ஒரு அமைதியற்ற உளநிலை யாகும். இவ்வாறான நிலையால் நல்ல நடத்தைக்குப் பதிலாகப்

பொருத்தமற்ற நடத்தைகள் பிறப்பதற்கு இடமுண்டு. இந்த நிலை பாடசாலைகளில் ஒருவனுக்குத் தொந்தரவான ஒரு சூழ்நிலை உருவாகும்போது அவன் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றான். பரீட்சை போன்ற சவால்களைச் சந்திக்கும் போதும் அதில் தேறமுடியாதபோது அச்சுறுத்தலுக்கு உள்ளாக வாய்ப்பு அதிகமாகின்றது. எனவே, ஆசிரியர் அச்சுறுத்தலின் தன்மை கருதி மாணவர்களை முன்கொண்டு செல்லவேண்டும்.

## நெறிபிறழ் நடத்தையின் சில இயல்புகள்

ஷெல்டன், குளுஎக் முதலியோர் நெறிபிறழ் நடத்தைக்கான சில இயல்புகளைத் தமது ஆய்வின்வழி முன்வைக்கின்றனர்.

உடல் சார்ந்தது - இறுக்கமான தசையுடையோர், பயமற்றோர்.

உளப்பாங்கு - உயிர்த்துடிப்புள்ளவர்கள்.

புறமுகிகளாக இருப்பதால் வன்செயல், அழிவு என்ற குணம் இவர்களிடம் அமைந்திருக்கும்.

மனப்பான்மை - குரோத மனப்பான்மை கொண்டவர்கள், சந்தேகம் சமூகவிரோத மனப்பான்மை, அதிகாரிகளுக்கு அடிபணியாத தன்மை கொண்டவர்கள்.

உளவியல் சார்ந்தது - எதிரான வார்த்தைகளை உபயோகித்தல்.

விவேக வெளிப்பாடு குறைவு, பிரச்சினைகளைத் தீர்ப்பதில்

ஒழுங்கான அணுகுமுறை இல்லை.

சமூகப் பண்பாடு சார்ந்தது - பொறுமை, உறுதித்தன்மை, மரியாதை என்பன குறைவு.

# 9

# உட்படுத்தற் கல்வி

விசேடகல்வி இலங்கையைப் பொறுத்த வகையில் முன்னேற்றம் உடையதாகவே இருக்கின்றது. நாட்டின் பல பகுதிகளில் அவர்களுக்கான பாடசாலைகள் இருக்கின்றன. இங்கெல்லாம் அந்தந்தக் குறைபாடுடைய மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களுக்கான கல்வி வழங்கப்படுகின்றது. இந்தநிலையில் பிள்ளைகளின் இயலாமைகள், கஷ்டங்கள், இடர்பாடுகள் முதலியன வெளிப்படுகின்றன. இதனால் கல்வியில் பின்னடைவு ஏற்படுவதனை கண்டுகொள்ள முடிகின்றது. இவ்வாறான முறையில் கல்வி வழங்குவது பொருத்தமுடையதல்ல என்பதனை உணர்ந்து, விசேட கல்வியினை வினைத்திறனுடையதாக்குவதற்கு உட்படுத்தற் கல்வி எனும் கல்விச் சிந்தனை முன்கொண்டு செல்லப்படுகின்றது. உட்படுத்தற் கல்வி என்பது ஒரு செயற்றிட்டமல்ல. அது பாடசாலைப் புலத்தினுள் மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அவ்வேறுபாடுகளுக்கேற்ற கற்பித்தல் - கற்றல் செயற்பாடுகளை ஏற்படுத்திக் கொடுக்கும் ஒரு நடவடிக்கையாகும். சிலர் இந்த இரண்டு சொற்களையும் ஒன்றாகவே நோக்குகின்றனர். அதனால், இன்று விசேட கல்வி இல்லை என்றும் அது உட்படுத்தற் கல்வியாக மாற்றம் பெற்றுள்ளது என்றும் தங்கள் கருத்தினைப் பதிவிடுகின்றனர். ஆனால் நாட்டின் பல பகுதிகளில் விசேட பாடசாலைகள் இன்னும் இயங்கிய வண்ணமே உள்ளன.

உட்படுத்தற் கல்வி என்பது விசேட கல்வி என்பதற்கான மற்றுமொரு பெயரல்ல அது, பிள்ளைகளின் கற்றலுக்குத் தடை ஏற்படுத்தும் காரணிகளை இனங்காணுதல், அவற்றை இயன்றளவு குறைத்தல், பிள்ளைகளது பங்கேற்பையும் கற்றலையும் உயர்மட்டமாக்குதல், வளங்களைப் பயனுறுதிமிக்கதாக உபயோகித்தல் முதலிய

அனைத்து விடயங்களையும் உறுதிசெய்யும் ஒரு புதிய கல்வி எண்ணக்கருவாகும். அதாவது, உட்படுத்தற் கல்வி என்பது, சகல பிள்ளைகளினதும் பல்வகைமைக்கு மதிப்பளித்து, பிள்ளைகளை எவ்வித வேறுபாட்டுக்கும் உட்படுத்தாது கல்விபெற வாய்ப்பளித்த லாகும். ஆகவேதான், உட்படுத்தல் என்பது ஒரு வேலைத் திட்ட மல்ல அது ஒரு தொகுதி எண்ணக்கருவாகும் என்பர். அது சகல பிள்ளைகளும் கல்வி பெறுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தி கின்றது. எந்தவிதப் பாகுபாடுமின்றி கற்பதை உறுதிசெய்கின்றது. இத்தயை மாணவர்களுக்கு விசேட வகுப்போ, விசேட பாடசாலை களோ தேவைப்படுவ தில்லை. எல்லா மாணவர்களுடனும் சேர்ந்து கற்பிப்பதையே உறுதி செய்கின்றது.

விசேட கல்வி பற்றிப் பேசிய உலகு அதனிலும் ஒருபடி மேலே சென்று உட்படுத்தற் கல்வி பற்றிப் பேசுகின்றது. உட்படுத்தற் கல்வி என்ற எண்ணக்கருவானது புதியதொன்றல்ல, அது பண்டைய தமிழ் இலக்கியங்களில் பரவலாகப்பேசப்பட்ட விடயமாகும். ''அனைவருக்கும் கல்வி'' என்ற வாசகத்தின் அடிப்படையில் அதன் செல்நெறி பரவலாக்கப்பட்டு வருகின்றது. அனைவரும் கல்வி பெறுகின்ற நிலை உருவாகவேண்டும் என்பதற்காக உட்படுத்தற்கல்வி என்ற எண்ணக்கருவானது 1960ஆம் ஆண்டு தொடக்கம் பேசுபொருளாக இருந்துவருகின்றது. இதன்தேவை கருதி 1994ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டின் சாலமங்கா (Salamanca) நகரின் இடம்பெற்ற விசேட தேவைகள்சார் கல்வி பற்றிய சர்வதேச மாநாடு இடம்பெற்றது. இந்த மாநாட்டின் கருப்பொருளாக உட்படுத்தற் கல்வி பரவலாக்கப்பட வேண்டும் என்பது பற்றி உணரப்பட்டது. அதாவது, ''அனைத்துப் பிள்ளைகளுக்கும் சமமான உட்படுத்தற் கல்வி வழங்கல்'' எனும் தொனிப்பொருளின் அடிப்படையில் கல்வி சகலருக்கும் என்ற நிலை உணரப்பட்டது. 1947ஆம் ஆண்டு மனித உரிமைப் பிரகடனத்தின்போது முன்வைக்கப்பட்ட ''தனிமனித பேதமின்றி சகலருக்கும் கல்வி'' என்ற பொதுவான தொனிப்பொருள் இங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனை யுனஸ்கோ - சாலமங்கா பிரகடனம் என்பர். இதன் அடிப்படையில் அனைத்து சிறுவர்களும் கட்டாயம் கல்வி பெறுவதற்கான வாய்ப்பு முன்மொழியப்பட்டது.

அதாவது, குழந்தைகளின் பல்வகைமைத் தன்மையினைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு கல்வி வழங்கவேண்டிய தேவை உணர்த்தப்பட்டது. இங்கு ஒவ்வொரு நாட்டினரும் தங்களுடைய கலாசார பின்னணிக்கு எற்ப உட்படுத்தற் கல்விக் கொள்கைகளை உருவாக்கி செயற்படுத்துவதற்கான வாய்ப்பளிக்கப்பட்டது. எனவே, உட்படுத்தற் கல்வியைப் பெறுவதற்கு திட்டவட்டமான மாதிரியோ, இவ்வாறுதான் செயற்படவேண்டும் என்ற வேலைத்திட்டமோ கிடையாது என்பது உணரப்படுகின்றது. அந்தந்த நாடுகள் தங்களுடைய கல்விக் கொள்கைக்கு எற்றாற்போல் உட்படுத்தற் கல்விக்கு முன்னுரிமைகொடுத்து அனைவரும் கல்விபெறும் வாய்ப்பினை சிறந்த முறையில் உருவாக்கவேண்டும் என்பது உணர்த்தப்படுகின்றது. எனவே, இயல்பு மீறிய குழந்தைகள் அனைவரையும் ஒரே வகுப்பறையில் வைத்து அவர்களது தன்மைக்கு ஏற்ப கல்வி வழங்கப்பட வேண்டும் என்பதனை உட்படுத்தற் கல்வி என்ற எண்ணக்கரு தெளிவுபடுத்துகின்றது.

உட்படுத்தற் கல்வி அமைப்பு முறை சிறுவர் நேயப் பாடசாலைக்குள் வருகின்றது. சிறுவர் நேயப் பாடசாலை என்பது சர்வதேச சிறுவர் உரிமைகள் பிரகடனத்தின்படி சகல பிள்ளைகளதும் சகல உரிமைகளையும் செயல்ரீதியில் நிறைவேற்றும் பாடசாலையாகும்.

1. உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட செயல் ரீதியான உட்படுத்தல். (Inclusion)
2. ஆண் - பெண் சமூக நிலைப்பாட்டுக்குத் துலங்கல் காட்டுதல்.
3. பாடப்பொருளின் கற்றல் பேறுகளை விருத்தி செய்தல்.
4. பிள்ளைகளின் சுகாதாரப் பாதுகாப்பையும் காப்பையும் உறுதிப்படுத்தல்.
5. பிள்ளைகளின் குடும்பங்களுக்கும் சமுதாயத்தினரின் செயல் ரீதியான பங்களிப்புக்கு வாய்ப்பளித்தல்.
6. சிறுவர் நேய முறைமைகள், கொள்கைகள், ஒழுங்கு விதிகள் மூலம் உதவி பெறுதல்.

**உட்படுத்தற் கல்வி எண்ணக்கருவின் முக்கியமான விடயங்கள்**

1. ஒவ்வொரு பிள்ளையும் பாடசாலையொன்றில் சேர்வ தற்கும், கல்வியைப் பெறும் செயன்முறையில் சமமாகப் பங்குபற்று வதற்கும் உரிமையுண்டு என்பதை நடைமுறைப்படுத்துதல்.
2. பொருளாதார நிலை, சமூகத்தில் உயர்ந்த, தாழ்ந்த மட்டங்கள், இன, மதம், மொழி, ஆண் - பெண் சமூக நிலைப்பாடு, கற்றல் இடர்ப்பாடுகள், உடல் ஊனங்கள் போன்ற எந்தவொன்றுக்கும் அமையப் பிள்ளையை வேறுபடுத்திக் கருதாதிருத்தல் அல்லது ஒதுக்கி வைத்தல் முதலியவற்றிற்கு வாய்ப்பில்லாமல் போதல்.
3. பாடசாலையிலிருந்து இடைவிலகுவதைத் தடுப்பதற்கும், பாட சாலை செல்லாத பிள்ளைகள் தொடர்பாகத் தேடியறிவதற்கும் துலங்கல் காட்டுவதற்கும் பயனுறுதியுடைய பொறிமுறை யினைச் ஒன்று செயற்படுத்தல்.
4. பாடசாலையில் இடம்பெறும் செயற்பாடுகளில் கலந்துகொள் வதற்கும் வளங்களைப் பயன்படுத்துவதற்கும் சகல பிள்ளைக ளுக்கும் சமமான வாய்ப்பினைப் பெற்றுக்கொடுத்தல்.
5. உடல் - உள தண்டனைகள், பயமுறுத்தல், தொந்தரவு செய்தல் போன்றவற்றைத் தடுப்பதற்கான செயன்முறைகளை விரிவுபடுத்தி, அவற்றுக்குத் துலங்கல் காட்டுதலை மேம் படுத்தல்.
6. சிறுவர் உரிமை தொடர்பாக பாடசாலைச் சமூகத்தினருக்கு தெளிவினை ஏற்படுத்தி செயற்படச் செய்தல்.
7. கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் போது எந்தவொரு பிள்ளையும் ஒதுக்கப்படுவதற்கோ வேறுபடுத்திக் காட் டப்படுவதற்கோ அச்சுறுத்தப்படுவதற்கோ இடமில்லாமல் போகின்றது.
8. பிள்ளைகள் செயல் ரீதியிலும் கூட்டாகவும் பங்குபற்றிக் கற்கவும் மற்றும் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடவும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

9. உட்படுத்தற் கல்வியும் சிறுவர் உரிமையும் ஒன்றோடு ஒன்று தொடர்புபடுவதனால் சிறுவர் உரிமை பாதுகாக்கப்பட்டு செயற்படுகின்றது.
10. பிள்ளைகள் மற்றவர்களுடன் இணைந்து செயற்படுவதனால் அவர்களுக்கு சமூக மதிப்பு கிடைக்கின்றது.

### உட்படுத்தற் கற்றல் நேயச் சூழல்

1. பிள்ளைகளின் நாளாந்த வாழ்க்கைத் தேவைகளுக்கு ஏற்ப கற்றல் நடைமுறைப்படும்.
2. பங்கு பற்றுதல் ஒற்றுமை, ஒத்துழைப்பு முதலியவற்றை விருத்தி செய்யும்.
3. ஆரோக்கியமான வாழ்க்கைத் திறன்களையும் வாழ்க்கைக் கோலங்களையும் விருத்திசெய்யும்.
4. பிள்ளைகளின் பல்வகைமைக்கு மதிப்பளித்து, கற்றலுக்கு ஊக்கமளிக்கும்.
5. கற்றல் கற்பித்தல் செயல்முறை ஆசிரியரது விருத்திக்குப் பங்களிக்கும்.
6. ஆண் - பெண் என்ற பால்நிலை வேறுபாடு இல்லாமல் போகிறது.
7. பிள்ளையின் கற்றலில் குடும்பமும் சமுதாயமும் ஆசிரியரும் செயல் ரீதியில் தொடர்புறுவர்.
8. வெவ்வேறு பண்பாடுகளைச் சேர்ந்த வெவ்வேறு மொழிகள் பேசுகின்ற, வெவ்வேறு தேவைகளைக் கொண்ட பிள்ளைகள் உள்ளடங்குகின்றனர்.
9. கொடுமைப்படுத்தல், துஷ்பிரயோகம் முதலிய பிரச்சினைக ளிலிருந்து சகல பிள்ளைகளையும் பாதுகாக்கப்படுகின்றனர்.

### உட்படுத்தற் கல்வி நியமங்கள்

உரிமைகளை அடிப்படையாகக்கொண்ட, செயல் ரீதியில் உட்படுத் தலை ஏற்படுத்தியுள்ள பாடசாலையொன்றில் காணப்படவேண்டி யனவாக இனங்காணப்பட்ட உத்தேச நிலைமைகள் கீழே தரப்பட்

டுள்ளன. இவை சிறுவர்நேயப் பாடசாலை மாதிரியின் முதலாவது பரிமாணத்துக்கு உரிய நியமங்களாகும்.

1. பாடசாலையிலிருந்து இடைவிலகுவதைத் தடுப்பதற்கும் பாடசாலை செல்லாத பிள்ளைகள் தொடர்பாகத் தேடிய றிவதற்கும் துலங்கல் காட்டுவதற்குமான பயனுறுதியுடைய பொறிமுறை உள்ளது. அப்பொறிமுறை செயற்படுகின்றது.
2. பாடசாலையில் காணப்படும் செயற்பாடுகளில் கலந்து கொள்வதற்கும் வளங்களைப் பயன்படுத்துவதற்கும் சகல பிள்ளைகளுக்கும் சமமான வாய்ப்பு உண்டு.
3. உடல், உள தண்டனைகளுக்கு வாய்ப்பில்லாமல் போவதோடு, பயமுறுத்தல், தொந்தரவு செய்தல் முதலிய செயற்பாடுகளைத் தடுப்பதற்கான செயன்முறைகளும், அவற்றுக்குத் துலங்கல் காட்டுதலும்.
4. சிறுவர் உரிமை தொடர்பாக பாடசாலைச் சமூகத்தினர் தெளிவு படுத்தப்பட்டு பாடசாலைச் செயற்பாடுகளை முன்கொண்டு செல்லுதல்.

## உட்படுத்தற் கல்வியின் கோட்பாடுகள்

1. ஆசிரியர் - மாணவர் தொடர்பினை மேம்படுத்தல்.
2. மாணவர்களிடையே காணப்படும் முரண்பாடுகளைக் களைந்து ஒத்துழைப்பை வளர்த்தல்.
3. பொருத்தமான கற்றல் செயற்பாடுகளூடாக ஊக்கப்படுத்தல்.
4. பாடமுடிவிலோ அல்லது ஏனைய நேரங்களிலோ உடனடியாக கருத்து தெரிவித்தல்.
5. பணியின் நேரத்தை வலியுறுத்தல்.
6. அதிக எதிர்பார்ப்புகளைத் முன்வைத்தல்
7. பல்வேறு திறமைகள் மற்றும் கற்றல் வழிகளை மதிப்பாய்வு செய்தல்.

## உட்படுத்தற் கல்வியை மேம்படுத்தல்

1. புதிய புதிய திறன்களை அளவீடு செய்துகொள்ளல்.
2. ஒவ்வொரு தேவைக்கும் உரையாற்றும் பகுதிகளைத் தேர்ந் தெடுத்தல்.
3. அனைத்து பங்கேற்பாளர்களையும் உள்ளடக்குதல்.
4. தேவைப்படும்போது அவ்வப்போது நடவடிக்கைகளை மாற்றிய மைத்தல்.
5. மரபு அடிப்படையில் வரும் வழிமுறையை மாற்றம்செய்து முன்கொண்டு செல்லல்.
6. உதவி மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவித்தல்.

## உட்படுத்தற் கல்வியின் அவசியம்

1. பிள்ளைகள் ஒருங்கு சேர்ந்து இருப்பதனால் சிறந்த மனப்பாங்கு வளரும்.
2. பிள்ளைகளிடையே வேறுபாட்டினைவிட ஒற்றுமையே அதிகமாகக் காணப்படும்.
3. பிள்ளைகளிடையே காணப்படும் இயலாமைகள் அவர்களுடைய கற்றலில் பாதிப்பனை ஏற்படுத்தாது.
4. பங்குபற்றுதலும் தேர்ச்சியும்கொண்ட ஒத்தவயதுக் குழுவினரை பின்பற்றும்போது சிறந்த கற்றல் இடம்பெறும்.
5. சாதாரண வகுப்பறைகளில் மேற்கொள்ளப்படும் கற்பித்தல் - கற்றல் செயற்பாடுகள் பிள்ளைகளின் இயலாமைகள் குறை வடைவதற்கு ஏதுவாக அமையும்.
6. வித்தியாசமான கற்றல் பாங்குகள் மற்றும் நடத்தைக் கோலங்கள் கொண்ட பிள்ளைகளுடன் கற்பதால் சிறந்த ஆளுமை உருவாகும்.
7. பிள்ளைகளிடையே பல்வேறு திறமை சார்ந்த கற்றல் தொடர்பு உருவாகும்.

### உட்படுத்தற் கல்வியை நடைமுறைப்படுத்தல்

உட்படுத்தற் கல்வியை நடைமுறைப்படுத்தும்போது பல சவால் களைச் சந்திக்கவேண்டி ஏற்படலாம். அதனை ஏற்று உட்படுத்தற் கல்வியை நடைமுறைப்படுத்துவதற்காக சில படிமுறைகளை அமைத்தல் வேண்டும்.

1. ஆசிரியருக்குச் சிறந்த முறையில் பயிற்சியளித்தல்.
2. பெற்றோரை விழிப்படையச் செய்து, அவர்களின் ஒத்துழைப் பினைப் பெறுதல்.
3. உட்படுத்தற் கொள்கையினை சகல மட்டங்களிலும் பரவலாக்கி அதனை ஏற்றுக் கொள்ளச் செய்தல்.
4. கற்பித்தல் - கற்றலுக்கான உபகரணங்களைப் தயார்படுத்திக் கொள்ளுதல்.
5. கலைத்திட்டத்தில் கடினத்தன்மை காணப்படுமாக இருந்தால் அதனை நெகிழ்ச்சியுடையதாக ஆக்குதல். அதாவது, சிறிய சி றிய அலகாக கற்பித்தலுக்கு ஏற்ப பிரித்தல்.
6. கற்பித்தல் - கற்றலுக்குப் பொருத்தமான வகையில் வகுப்பறைச் சூழல் சிறப்பாக இருக்க வேண்டும்.
7. விசேட உதவிகளையும் வழங்களையும் பெற்றுக் கொள்ளுதல்.
8. உட்படுத்தற் கல்வியைச் செயலில் கட்டியெழுப்புவதற்கும், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குமான குழுக்களை அமைத்தல்.
9. தலைமைத்துவத்தை வழங்கி நட்புறவைக் கட்டியெழுப்புதல்.

### தேசிய கல்வி நிறுவகத்தின் பணி

அனைவருக்கும் கல்வி வழங்குவதற்கான எண்ணக்கருவின் இயக்கப் பாட்டை அடைந்துகொள்வதில் தேசிய கல்வி நிறுவகத்தின் உட்படுத்தற் கல்வித்துறை முன்னிற்கின்றது. விசேட கல்வி ஆசிரியர்களுக்கு நிகழ்ச்சிகளை முன்னெடுத்தல், அவற்றை அமுல் படுத்தல், விசேட வழிகாட்டற் சேவைகளைப் பெற்றோருக்கும் / பாதுகாவலருக்கும் வழங்குதல் முதலிய செயற்பாடுகளை இந்த நிறுவகம் மேற்கொண்டு வருகின்றது.

★ வருடா வருடம் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டு அவர்களுக்கு டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

★ நிகழ்காலத் தகவல்களை பரவலாக்குவதற்கு உட்படுத்தற் கல்வி சம்பந்தமாக சஞ்சிகையொன்று வெளியிடப்பட்டது.

★ இலத்திரனியல் கற்றல் சாதனமொன்றும் சைகைமொழிக் கற்றல் நூலொன்றும் தயாரிக்கப்பட்டன.

★ பிறையில் கல்விக்காக ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படுகின் றனர்.

மேலும்,

1. விசேட கல்வி டிப்லோமாக் கற்கைநெறி
2. சைகைமொழி டிப்லோமாக் கற்கைநெறி
3. பிறைல் சான்றிதழ் கற்கை நெறி

முதலிய சான்றுதல் கற்கைநெறிகளும் இடம்பெறுகின்றன. மேலும் அதிபர், ஆசிரியர்கள் கல்விப் புலத்தில் உள்ள அனைவரும் விசேட கல்வியினை கற்கின்றனர். ஆனால் விசேட கல்வியினைக் கற்பிக்கின்றவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படுகின்றது. இதற்காக வருடாவருடம் வளநூல் தயாரித்தல், செயலமர்வுகள் நடத்துதல் என்பவற்றோடு மாநாடுகளும் இடம்பெறுகின்றன. அத்தோடு விசேட கல்வி தொடர்பாக வெளிநாட்டு அனுபவங்களைப் பெறுவதற்காகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு புலமைப்பரிசிலும் வழங்கப்படுகின்றது.

# 10

# இலங்கையில் கல்விபெறும் வாய்ப்பு

ஐரோப்பியரின் வருகையினைத் தொடர்ந்து விசேட தேவை யுடைய பிள்ளைகள் கருத்தில் கொள்ளப்பட்டு அவர்களுக்கான கல்விபெறும் வாய்ப்பு கொடுக்கப்பட்டு இன்று பெரிதும் வளர்ச்சி யடைந்த நிலையில் முன்கொண்டு செல்லப்படுவதனை அவதானிக்கமுடிகின்றது. எனினும், கி.பி 4 நூற்றாண்டில் புத்ததாசன் எனும் மன்னன் தனது ஆட்சிக்காலத்தில் நாட்டின் பல்வேறு இடங்களில் பார்வையற்றோர், செவிப்புலனற்றோர், வலுவிழந்தோர் முதலியோர்களைப் பாதுகாப்பதற்கான நிலையங்களை அமைத்ததாக அறியக்கிடைக்கின்றது. அவனது மகனான உபதிஸ்சகுமாரன் என்பவனும் முடவர், அந்தகர், நோயாளர், கற்பமுற்றோர் போன்றோருக்காக பராபரிப்பு நிலையங்களை அமைத்திருக்கின்றனர். இன்று விசேட கல்விக்கான தன்மைகள் கீழ்வரும் வகையில் அமைந்துள்ளன.

1. பிரித்து வைக்ககும் கட்டம்

   விசேட உதவி தேவைப்படுகின்றவர்கள் சமூகத்தில் இருந்து பிரித்து வைக்கப்பட்டனர். இவர்களுக்காக தனிமையான மடங்கள், நிலையங்கள் என்பன அமைக்கப்பட்டன.

2. பராமரிக்கும் காலகட்டம்

   விசேட தேவை உடையவர்களுக்கு அடிப்படைத் தேவைகள் அளிக்கப்பட்டன. குறைபாடுகளை உடைய வயது வந்தோரும் இந்த நிலையங்களில் தங்கவைக்கப்பட்டனர். இதனால் பொது வாழ்வில் பங்காளராகும் சந்தர்ப்பம் இவர்களுக்குக் கிடைக்க வில்லை.

3. புனர் நிவாரண காலகட்டம்

இது ஒரு அபிவிருத்தி அடைந்த காலகட்டமாகும். தொழிற் பயிற்சிகளைப் பெற்றுக்கொடுத்து அவர்களை உற்பத்தியில் ஈடுபட வைப்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது. குறை பாடுடையவர்களால் செய்துமுடிக்கும் விடயம் பற்றியே இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

4. ஒன்றிணைக்கும் காலகட்டம்

சமூக அமைப்பினை உருவாக்கும் காலகட்டமாகும். மற்ற வர்களைப் போலவே சமூக அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும் என்பது உணரப்பட்டது. விசேட தேவையுடைய மாணவர்களின் தேவையினைப் பூரணப்படுத்துவதற்காக தனிநபர் அபிவிருத்தி முக்கியம் பெற்றது. இதனால் பௌதிக ரீதியாக ஒன்றிணைத்தல், செயல்சார்பான ஒன்றிணைப்பு, பாடசாலைச் சமூகத்துடன் ஒன்றிணைத்தல் முதலிய ஒன்றிணைப்புக்கள் முக்கியம் பெறுகின்றன.

இரத்மலானையில் 1912ஆம் ஆண்டு விழிப் புலனற்றவர்களுக்கான மற்றும் செவிப்புலனற்றவர்களுக்கான விடுதிப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1956ஆம் ஆண்டு கைதடியில் செவிப்பு லனற்றவர்களுக்கும் விழிப்புலனற்றவர்களுக்கு மான நவீல்ட் பாட சாலை ஆரம்பிக்கப்பட்டது. இன்று ஆர்க் உளவிருத்தி குன்றிய சிறுவர்களுக்கான பாடசாலையும், வாழ்வகம் எனும் பெயரில் செவிப்புலன் விழிப்புலன் அற்ற பிள்ளைகளுக்கான பராபரிப்பு நிலையமும், சிவபூமிப் பாடசாலை எனும் பெயரில் செவிப்புலன், விழிப்புலன், உளவிருத்தி குன்றிய சிறுவர்களுக்கான பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுகின்றன.

1943 கன்னங்கரா அறிக்கையில் பார்வை அற்றவர்களும் கல்வி பெறமுடியும் என்றும் இதற்கு பிறையில் முறையினைப் பயன்படுத்தவேண்டும் எனவும், செவிப்புலனற்றவர்களுக்கு உதட்டு வாசிப்பு முறையினைப் பயன்படுத்தவேண்டும் எனவும் முன்மொழியப்பட்டது. 1961 ஜயசூரிய அறிக்கையில் பூரண கேட்டல் திறன் அற்றவர்களுக்கு கேள் கருவிகள் வழங்கப்படவேண்டும் எனவும் தீவிரமான குறைபாடுடைய பிள்ளைகள் ஒரு பாடசா

லையிலும், மிதமான குறைபாடுடைய பிள்ளைகள் வேறொரு பாட சாலையில் கல்வி கற்கமுடியும் எனவும் கூறப்பட்டதோடு, பிரதே சத்தில் காணப்படும் பிள்ளைகளின் செறிவுக்கேற்ப தனித்தனிப் பாடசாலைகள் அமைக்கப்படவேண்டும் எனவும் சிபார்சு செய்தது.

1962இல் ஜீன் கென்மோர் அறிக்கையில் விழிப்புலனற்றோர் கல்வி தொடர்பான முன்மொழிவில் கண்பார்வை குறைந்த பிள்ளை களின் கல்விக்கு முன்னுரிமைக் கொடுக்கப்பட்டது. பார்வைக் குறைபாடு பாரதூரமானதென்றும், அவர்களின் கல்வி வசதிகள் விசேட பாடசாலைகளினால் வழங்கப்படவேண்டும் என ஆலோ சனை கூறப்பட்டது. 1962இல் வித்தியோதயாப் பல்கலைக்கழகத்தில் விசேட ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி வெளிநாட்டு உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. 14 பட்டதாரி ஆசிரியர்களுக்கு கல்வி தொடர் பான பட்டப்பின்படிப்பு ஆரம்பிக்கப்பட்டு முடிவில் சான்றிதழ் வழங்கப்பட்டது. 1970ஆம் ஆண்டு மகரகம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விசேட ஆசிரியர் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டது. அத்தோடு 21.01.1985இல் மந்தபுத்தியுள்ள மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்கான ஒரு விசேட ஆசிரியர் பயிற்சி நெறியும் இக் கலாசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக முதற் தடவையிலே 30 பட்டதாரி ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 1972இல் உடல் ஊனமுற்ற மாணவர்கள் சாதாரண பாடசாலையில், சாதாரண மாணவர்களுடன் இணைந்து கல்வி கற்பதற்கான ஏற்பாடு செய்யப் பட்டது. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் 1976இல் உளக்குறை பாடுடைய பிள்ளைகளுக்குக் கற்பிப்பதற்காக பட்டதாரிகளுக் கான விசேட டிப்ளோமா பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது.

1997ஆம் ஆண்டு முன்மொழியப்பட்டு 1998ஆம் ஆண்டு நடைமுறைக்குவந்த புதிய கல்விச் சீர் திருத்தத்தில் விசேட கல்வி தொடர்பான பல்வேறு கருத்துக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. யாழ்ப்பாணம், தர்காநகர், அட்டாளைச்சேனை ஆகிய தேசிய கல்வியல் கல்லூரிகளில் தாய்மொழிமூலமான விசேட கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தேசிய கல்வி நிறுவகத்திலும் திறந்த பல்கலைக்கழத்திலும் விசேட கல்விக்கான டிப்ளோமாக் கற்கையின் மூலம் வருடாவருடம் டிப்ளோமாச் மற்றும் பட்டச் சான்றிதழ்

வழங்கப்படுகின்றன. இன்று நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பார்வைக் குறைபாடு மற்றும் கேட்டல் குறைபாடுடைய பிள்ளை களுக்கான பாடசாலைகளும், உளக் குறைபாடுடைய மாணவர்க ளுக்கான பாடசாலைகளும், வலதுகுறைந்த மாணவர்களுக்கான பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படு கின்றன.

விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு சமமாக கல்விய ளிப்பதற்கான பின்வரும் கொள்கைகளும் உத்திகளும் அறி முகப்படுத்தப்பட்டுள்ளன.

1. விசேட கல்வி தேவையுடைய பிள்ளைகளை இனங் காண்பதற்கு புதிய உத்திகளையும் கருவிகளையும் விருத்திசெய்தல்.
2. பொதுச் சுகாதார தாதிமார் மற்றும் கிராமசேவை உத்தியோகத்தர் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வி அமைச்சு முதலிய கல்வி நிறுவனங்கள் இணைந்து 2008ஆம் ஆண்டில் மாகாண மட்டத் தில் உள்ள விசேட தேவைகளுடனான பிள்ளைகளையும் அங்கவீனர்களையும் பதிவுசெய்து பட்டியற்படுத்தியது.
3. போதனாமொழி அடிப்படையில் காணப்படும் விசேட கல்வித்தேவைகளை கணிப்பிடுவதற்கு பாடசாலை மற்றும் பிராந்திய மட்டங்களில் தேவைக் கணிப்பீட்டாய்வு ஒன்றை மேற்கொள்ளல்.
4. விசேட கல்விக்கான தேசிய நிலையமொன்றை உருவாக்கி அதனைப் பலப்படுத்தல்.
5. தற்போதுள்ள நிறுவனங்களது இயலளவுகளை மேம்படுத்த வதற்கு தனியார் மற்றும் பொதுத்துறை வளங்களையும் முயற்சி யாண்மைகளையும் முன்கொண்டு செல்லல். பொதுத் துறை, தனியார்துறை பங்குடைமைகளில் ஊடாக விசேட கல்வி நிறுவனங்கள் இல்லாத இடங்களில் நிறுவனங்களை உருவாக்குவதற்கு ஒவ்வொரு மாகாணத்தையும் ஊக்கு வித்தல்.
6. விசேட கல்வி தேவைகளுடைய பிள்ளைகளை இனங்காண் பதற்கு ஒழுங்கான மதிப்பீட்டாய்வுகளை மேற்கொள்ளுதல்.
7. விசேட கல்வித் தேவைகள் பற்றி பொற்றோர் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வுகளை உருவாக்கி விசேட

கல்வி தேவைகளையுடைய பிள்ளைகளுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் ஒழுங்கான காலஇடைவெளியில் கல்வி முகாம்களை நடத்துதல்.

8. விசேட கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான பாடத்திட்டங்கள் அல்லது மொடியூல்களை இற்றைப்படுத்துதல். தேவைப் படும்போது புதிய பாடத்திட்டங்களையும் / மொடியூல்களையும் தயாரித்தல்.

9. கொழும்பு பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகங்களது கல்விப்பீடங்களினதும் தேசிய கல்வி நிறவகத்தினதும் ஆலோச னைகளுடன் விசேடகல்வி ஆசிரியர்களுக்கு நிகழ்ச்சிகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளுதலும், உட்படுத்தல் கல்வியில் முறையான அசிரியர்களுக்குப் பயிற்சியளித்தலும்.

(Education Sector Development Framework And Programme - 2006)

விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு சாதாரண பாடசாலை அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு கீழ்வரும் கொள்கைகள், வழிகாட்டல்கள், தந்திரோபாயங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

1. விசேட கல்வித் தேவையுடைய பிள்ளைகளை இனங்காண் பதற்கு நவீன உத்திகளை விருத்திசெய்தல்.

2. 2008ஆம் ஆண்டளவில் மாகாணங்களில் உள்ள அங்கவீன மற்றும் விசேட கல்வித் தேவையுடைய பிள்ளைகளை, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் கிராமசேவை உத்தி யோகஸ்தர்கள் ஆகியோருடன் கல்வி அமைச்சு, மாகாண கல்வி அமைச்சு என்பன இணைந்து செயற்பாடுகளை மேற்கொண்டு பட்டியற்படுத்தியது.

3. விசேட கல்வி தொடர்பாக தேசிய நிறுவகத்தை நிறுவி அதனை வலுப்படுத்துதல்.

4. அரச மற்றும் தனியார் துறையினர் வளங்கள் மற்றும் முயற்சி யாண்மைகளை ஒன்றிணைத்து நடாத்தப்படும் நிறுவனங்களது வினைத்திறனை மேம்படுத்துவதுடன், விசேட கல்வி நிறுவ னங்கள் காணப்படாத இடங்களில் அரசு, தனியார் துறையின் துணையுடன் இணைந்து விசேட கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கு ஒவ்வொரு மாகாணமும் முயற்சி செய்தல்.

5. விசேட கல்வித் தேவையுடைய பிள்ளைகளை இனங்காண்பதற்கு தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொள்ளல்.
6. விசேட கல்வி தேவையுடைய பிள்ளைகள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்காக முற்கூட்டியே விழிப்புணர்வு முகாம்களை நடத்துதலும், விசேட கல்வி தொடர்பாக பெற்றோர்களுக்கும் பொதுமக்களுக்கும் அறிவூட்டுதலும்.
7. விசேடகல்வி நிகழ்ச்சித்திட்டத்துக்காக உள்ள பாடத்திட்டங்களை / மொடியூல்களை மேம்படுத்துதல்.

இலங்கையில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பாடசாலைகள் பல இன்னும் இயங்குநிலையில் உள்ளன.

| இடம் | பார்வை குறைபாடு | கேட்டல் குறைபாடு | உளக் குறைபாடு | வலகு குறைந்தோர் |
|---|---|---|---|---|
| இரத்மலானை | ✓ | ✓ | | |
| றாகமை | | ✓ | | |
| கைதடி | ✓ | | | |
| மொறவெவ | ✓ | ✓ | | |
| பலாங்கொடை | ✓ | ✓ | | |
| கண்டி | ✓ | ✓ | | |
| அனுராதபுரம் | ✓ | ✓ | | |
| மாத்தறை | ✓ | ✓ | | |
| குருனாகல் | ✓ | ✓ | | |
| தங்காலை | ✓ | ✓ | | |
| கொரேதுடுவை | | ✓ | | |
| பண்டாரவளை | | ✓ | | |
| மாத்தளை | | ✓ | | |
| திஹநீரிய | | | | ✓ |

| | | | | |
|---|---|---|---|---|
| மொரட்டுவை | | | | |
| மாதிவெல | | | ✓ | |
| வத்தளை | | | ✓ | |
| மகரகம | | | ✓ | |
| கிக்கடுவை | | | ✓ | |
| கொழும்பு | | | ✓ | |
| கொடகலை | | | ✓ | |
| நல்லூர் | | | ✓ | |
| காலி | | | | ✓ |
| கேகாலை | | | | ✓ |
| கோட்டை | | | | ✓ |

தொழில்முறைக் கல்வி

இலங்கையில் தேசிய இலக்கு மற்றும் அடிப்படைத் தேர்ச்சிகளை நிறைவுசெய்யும் வகையில் கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப எல்லா மாணவர்களும் கற்கக்கூடிய வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. கட்டாயக் கல்வி வயது 5 - 14 என்றும் 5 - 16 வயது என்றும் என்று இருந்த நிலைமை மாற்றமடைந்து இன்று தரம் 1 இல் சேரும் மாணவன் தரம் 13 வரையும் கற்கலாம் என கல்விபெறும் வாய்ப்பு திறந்துவிடப்பட்டுள்ளது. மாணவர் நலமே இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, எந்தவகை மாணவனும் ஒரு துறையில் முன்னேறுவதற்கான வாய்ப்பு இன்று உருவாகியுள்ளது. இதனை ஏலவே தேசிய இலக்குகளும் அடிப்படைத் தேர்ச்சிகளும் உறுதிசெய்கின்றன. இந்த இரண்டு வகைப்பாட்டின் அடிப்படையின்கீழ் கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டு நடைமுறையில் இருந்துவருகின்றது. எல்லா மாணவர்களும் கற்பதற்கான வாய்ப்பு தொழிற்கல்வி மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமையானது இயல்புமீறிய குழந்தைகளுக்கும் கொடுக்கப்பட்ட வாய்ப்புமாகும்.

## தொழில்முறைக் கல்வி அறிமுகம்

கல்வியின் மறுசீராக்கமானது காலத்துக்குக் காலம் இலங்கையில் இடம்பெற்றுவருகின்றது. 1943இல் கன்னங்கரா சீர்திருத்தம், 1960இல் தேசிய கல்விச் சீர்திருத்தம், 1972 ஆம் ஆண்டு சீர்திருத்தம், 1981 ஆண்டு கல்வி வெள்ளை அறிக்கை, 1997 தொடக்கம் இன்று வரையிலான புதிய கல்விச் சீர்திருத்தம் போன்ற சீர்திருத்தங்களைக் கொள்ளமுடிகின்றது. இத்தகைய பின்னணியில் 13 வருட உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்ட முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் மாணவர்கள் தொடர்ந்து கற்கவேண்டும் என்ற சிந்தனை முன்மொழியப்பட்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டம் மாணவர்களின் திறனையும், அவர்கள் சூழலுக்கு ஏற்றவாறு இயைந்து செல்லக்கூடிய வாய்ப்பினையும், எதிர்காலச் சவால்கலுக்கு முகங்கொடுக்கக் கூடிய மாணவர்களை உருவாக்குகின்ற நோக்கத்தினையும் உறுதிசெய்கின்றது. சகல பிள்ளைகளுக்கும் தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையும் தொடர்ச்சியான பாடசாலைக் கல்வியை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் கல்வி அமைச்சினால் 13 வருட உத்தரவாதப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டம்'' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (37/2017 சுற்று நிருபம்) க.பொ.த (சா/த)இல் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் சித்தியடைந்தமை மற்றும், சித்தியடையாமை என்பவற்றைக் கவனத்திற்கொள்ளாது, அவர்களை பாடசாலைக்குள் உள்வாங்கி கற்றலுக்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்து, எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளக்கூடிய மாணவர்களை உருவாக்குவதற்கு இந்த தொழிநுட்பக் கல்வி பெரிதும் சாதகமாக அமையும். 2017ஆம் ஆண்டு தொடக்கம் இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைக்குவந்துள்ளது. இதன் முன்னோடி நிகழ்ச்சித்திட்டமானது 2017ஆம் ஆண்டு அக்ரோபர் தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்காக ஒன்பது மாகாணங்களில் இருந்தும் 43 முன்னோடிப் பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. 2018ஆம் ஆண்டு 100 பாடசாலைகளாகவும் தொடர்ந்து வருகின்ற காலங்களில் மேலும் விரிவு படுத்தப்பட உள்ளதாக கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

## கட்டாயக் கல்வி

கட்டாயக் கல்வி பற்றிய எண்ணப்பாட்டினை இலங்கையில் முதன் முதல் அறிமுகப் படுத்தியவர்கள் ஒல்லாந்தர்கள். மாணவர்கள் 5 வயது தொடக்கம் 14 வயது வரையும் கற்கவேண்டும் என்பதனை அவர்களுடைய கல்விமுறை முன்மொழிந்தது. பின்னர் 1961ஆம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக்குழு 6 வயது தொடக்கம் 14 வயது வரையும் மாணவர்கள் கற்கவேண்டும் என்று, கட்டாயப் பாடசாலைக் காலத்தினை உறுதி செய்து. 1997ஆம் ஆண்டு இடம்பெற்ற புதிய கல்விச் சீர்திருத்தம் கட்டாயக் கல்வியினைப் பெறும் வயது 5 தொடக்கம் 14 வரையும் என்று பரிந்துரைத்தது. மேலும் அந்த வயதெல்லை 5 தொடக்கம் 16 வரையும் என்று மாற்றியமைக்கப்பட்டது. கல்வி அமைச்சு 2017ஆம் ஆண்டு தொடக்கம் மாணவர்கள் தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையும் தொடர்ச்சியாகக் கற்க முடியும் என்று உத்தரவாதப்படுத்தியுள்ளது. 13 வருட உறுதிப் படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டம் 12, 13 தரங்களுக்கான தொழில்முறைக் கல்வி துறைப் பிரிவினை அறிமுகப்படுத்துகின்றது. எதிர்காலச் சவால்களுக்கு முகம்கொடுக்கக்கூடிய மாணவர்களை உருவாக்கும் இத்திட்டம் இன்றைய சமூகச் சூழலுக்கு சாலப் பொருத்தமுடையது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இன்றைய பாடசாலைக் கல்விச் சூழலை அவதானிக்குமிடத்து மரபுவழிக் கல்வியினைப் பெறமுடியாது பல மாணவர்கள் இடைவிலகிச் செல்கின்றனர். க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் தோற்றி சித்தி பெறாதவர்கள் பாடசாலையினைவிட்டு விலகிச் செல்கின்றவர்களாகவே உள்ளனர். ஆனால், அத்தகைய மாணவர்களிடம் ஏதோ ஒருவகையான புத்தாக்கத்திறன் மறைந்து கிடப்பதனை யாரும் அறிவதில்லை. நாம் அவர்களை படிக்காதவர்கள் என்ற எண்ணப்பாட்டுடனே பயணம் செய்ய வைக்கின்றோம். எனவே, அத்தகைய மாணவர்களிடையே காணப்படும் திறனுக்கு முன்னுரிமை கொடுப்பதாக இந்த தொழில்முறைக்கல்வி அமையப்பெறுகின்றது.

## கல்வியின் தரமேம்பாடும் கன்னங்கராவும்

தன்சானியாவில் நைரேயும் (Nyerere), இந்தியாவில் வர்தா கல்விமூலம் மகாத்மா காந்தியும் செயற்பட்டு தொழிற்கல்வியில் மாற்றத்

தினைக்கொண்டு அந்த சமுதாயத்தினை மேம்பாடடையச் செய்தனர். இதே சிந்தனையில் செயற்பட்ட கன்னங்கரா அவர்கள் ஹெந்தஸ்ஸ கிராமியக் கல்வித் திட்டத்தினை அறிமுகம் செய்தார். சமுதாயத்தின் சமூகப் பொருளாதார வாழ்வுடன் கல்வியைத் தொடர்புபடுத்த கலாநிதி C.W.W. கன்னங்கராவின் கீழ் செயற்பட்ட உயர்மட்டக்குழு நடவடிக்கை எடுத்தது. இந்த முயற்சியே கிராமப்புறக் கல்வி தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்தின் முதற்படியாகும். கண்டியில் உள்ள ஹெந்தஸ்ஸ எனும் கிராமத்தில் உள்ள பாடசாலையில் தரம் 6, தரம் 7, தரம் 8 மாணவர்களை புத்தாக்கக் கலைத்திட்டத்தில் ஈடுபடுத்தினர். அவர்கள் வாழ்க்கைத் திறன்கள், சுகாதாரக் கல்வி, வாழ்விடச்சூழல், அழகியல்கல்வி ஆகிய நான்கு துறைகளினூடாக தமது கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டனர். வாழ்க்கைத்திறன்கள் என்ற பாடத்தின் மூலம் அவர்களுக்கு மரவேலை, களிமண்வேலை, செங்கல் உற்பத்தி, பிரம்பு வேலை, விவசாயம், கால்நடை வளர்ப்பு, தேனீ வளர்ப்பு ஆகிய பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மாணவர்கள் பாடசாலைத் தளபாடங்களைத் திருத்துவதிலும், பாடசாலைத் தோட்டத்தில் மரக்கறிப் பயிர்களைச் செய்கை பண்ணுவதிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். இத்திறன் உடைய மாணவர்கள் சமுதாயத்தின் அங்கத்துவர்களான விவசாயிகளுட னும் தொழிலாளர்களுடனும் இணைந்து ஊக்கத்துடன் செயற்பட்டனர்.

சுகாதாரக்கல்வி என்ற பாடத்தின்கீழ் நீர் நிலைகளைச் சுத்தி கரித்தலும் பராமரிப்பதிலும், மலசலகூடங்களை நிர்மாணிப்பதிலும் உபயோகிப்பதிலும், மலேரியா நோயைக் கட்டுப்படுத்துவதிலும் ஈடுபட்டனர். தமது வாழ்விடச்சூழல் பற்றிய பாடத்தைக் கற்கையில் மாணவர்கள் தமது பிரதேசத்தின் புவியியல், அதன் சனத்தொகை, மக்களின் பொருளாதார நடவடிக்கையின் இயல்புகள் போன்றன பற்றிக் கற்றனர். அழகியல் கல்விப் பாடத்தின் கீழ் இலக்கியம், கலை, சங்கீதம், நடனம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அவர்கள் காலைவேளைகளில் மேற்படி பாடங்களைக் கற்பதில் ஈடுபட்ட அதேசமயம், மாலை வேளைகளில் வாசிப்பு, எழுத்து, பேச்சு, கணிதப் பாடங்களைக் கற்றனர். அத்தோடு, அவர்கள் காலை வேளைகளில் கற்ற கல்விசார் பாடங்களின் பிரயோகவேலை பற்றிய

அறிவையும்பெற்றனர். கலாநிதி C.W.W. கன்னங்கரா அவர்கள் குறித்த பத்தாண்டில் இந்நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தி 253 பாடசாலைகளுக்கு விரிவுபடுத்தினார். இப்பாடத்திட்டத்தைக் கற்ற மாணவர்கள் பொதுப் பரீட்சையில் ஏனைய மாணவர்களிலும் பார்க்க அதிக திறமையைக் காட்டியமை தெரியவந்தது.

1943இல் கலாநிதி C.W.W. கன்னங்கரா, கல்விக்கான விசேட குழுவின் அறிக்கையில் முன்வைத்த பிரதான சீர்திருத்தங்களாக, இலவசக் கல்வியை வழங்கியமை, இடைநிலை, சிரேஷ்ட இடை நிலை, செயன்முறை எனும் மூன்று வகையான பாடசாலைகளை நிறுவியமை, ஆரம்பமட்டத்தில் தாய்மொழிமூலப் போதனையும், கனிஷ்ட இடைநிலை மட்டத்தில் இருமொழி ஆங்கில மொழிமூலப் பாடசாலைகளும் சிரேஷ்ட இடைநிலைக்கும் உயர் கல்விக்கும் ஆங்கிலப் பாடசாலைகளும் நிறுவப்பட்டமை, விடுதி வசதிகளுடன் மத்திய பாடசாலைகளையும் உயர் இடைநிலைக் கல்விக்கு புலமைப் பரிசில்களையும் நிறுவியமை, சமயக் கல்வியை அறிமுகம் செய்தமை, எழுத்தறிவற்ற வளந்தோருக்கு வளந்தோர் கல்வியை ஊக்குவித்தமை, ஆசிரியர்களுக்கு ஒழுங்காக மாதச் சம்பளங்களை நிலையாகச் செயற்படுத்தியமை, கலைத்திட்டங்களையும் பரீட்சைகளையும் நாட்டுக்குரியதாக்கியமை, தன்னாட்சியான பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவியமை முதலியவற்றைக் குறிப்பிடலாம். இந்தக் கலைத்திட்ட மாற்றத்தில் கன்னங்கராவின் செயன்முறைப் பாடசாலை சமுதாயத்தின் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தியது. செயன்முறைப் பாடசாலைக் கல்விமுறை தொடர்ச்சியாக முன்கொண்டு செல்லப்படாமையினால் அதன் பயனைப் பெறமுடியாமல் போயுள்ளது.

கலாநிதி C.W.W. கன்னங்கராவினுடைய கிராமியக் கல்விக்கு மேலும் ஊக்கம் கொடுப்பதாக இன்று அறிமுகமாகியுள்ள தொழில் முறைக் கல்வி அமையப்பெறுகின்றது. மாணவர்களுடைய திறமைக்கு ஏற்றவகையில் பாடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. தொழில்முறைக் கல்வியின் நோக்கங்களாக, தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையும் கற்பதை உறுதிசெய்தல், கற்கும் விருப்பத்தினைத் தூண்டுதல், யாவருக்கும் கற்கும் ஆற்றல் உண்டு என்ற சிந்தனையை உருவாக்குதல், அறிவுப்பொருளாதாரத் தேவையை உணரச் செய்தல்,

சமூகத் தொடர்புகளை மேம்படுத்துதல், தானாகவே உணர்ந்து கற்கச் செய்தல், சுய ஆற்றலை வெளிக்கொண்டுவருதல், ஆளுமை வளர்ச்சியின் முக்கியத்துவத்தினை வெளிக்கெண்டுவருதல், இடைவிலகலைக் குறைத்தல், மாணவரிடையே புதைந்துள்ள புத்தாக்கத்திறனை மலரச்செய்தல், வேலை உலகுக்கு ஏற்ற தகைமையினைக் கொண்டவர்களை உருவாக்குதல், எதிர்காலச் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய மாணவர் சமுதாயத்தினை உருவாக்குதல், வேலை இல்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல், எல்லோரும் க.பொ.த (உ/த) கற்கலாம் என்ற எண்ணப்பாட்டை மலரச்செய்தல், பட்டப்படிப்புக்களைப் பெறுவதற்கு வழிகாட்டுதல். (NVQ 5 Level – Diploma, NVQ 6 Level – Advance Diploma, NVQ 7 Level – Degree) முதலியனவாகும்.

தொழினுட்பப் பாடத்துறை மூன்று முக்கிய கூறுகளைக் கொண்டிருக்கின்றன.

1. பொதுப் பாடத்துறை
2. பிரயோக விடயத்துறை
3. நிறுவனஞ்சார் தொழிற்பயிற்சி என்பன.

### பொதுப் பாடத்துறை

பொதுப்பாடத்துறை கீழ்வரும் பாடங்களைக் கொண்டுள்ளது. தொழில்முறைப் பாடத்தைத் தெரிவுசெய்கின்ற மாணவர்கள் பொதுப் பாடத்துறையில் உள்ள பாடங்களைக் கற்கவேண்டும். இதனால் அவர்கள் பல்வகைத் தேர்ச்சியினைப் பெறுகின்றார்கள். தரம் 12 க்குப் பிரவேசிக்கும் மாணவர்கள் முதலாம் தவணையில் 9 வகையான பொதுப்பாடங்களைக் கற்பது கட்டாயமானதாகும். இரண்டாம், மூன்றாம் தவணைகளில் 26 பாடங்களில் மாணவர்கள் தாங்கள் விரும்பும் மூன்று பாடங்களைத் தேர்ந்தெடுக்கலாம். அவர்கள் தேர்ந்தெடுக்கும் மூன்று பாடங்கள் கற்பித்துக் கொடுக்கப்படும்.

| | | அலகுகளின் எண்ணிக்கை | மணித்தியால அளவு |
|---|---|---|---|
| 1. | முதல்மொழி (சிங்களம் அல்லது தமிழ்) | 10 | 40 |
| 2. | பிரயோக ஆங்கிலம் மற்றும் தொடர்பாடல் திறன் | 10 | 60 |
| 3. | அழகியல் நயப்பு | 04 | 40 |
| 4. | தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்திறன் | 07 | 60 |
| 5. | பிரஜைத்துவத்துக்கான திறன் | 08 | 40 |
| 6. | சமூகநன் நிலவுகைக்கு தேவையான சுகாதார மற்றும் வாழ்க்கைத்திறன்கள் | 07 | 40 |
| 7. | முயற்சியாண்மைத்திறன் | 06 | 40 |
| 8. | விளையாட்டு மற்றும் ஏனைய பாட இணைச் செயற்பாடுகள் | -- | 30 |
| 9. | தொழில் வழிகாட்டல் வேலைத்திட்டம். | -- | 60 |

தரம் 12 இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைகளில் கீழ்வருகின்ற பிரயோகப் பாடங்களில் மூன்று பாடங்களைத் தெரிவுசெய்து கொள்ளமுடியும்.

1. பிள்ளை உளவியல் மற்றும் நலன் பேணல்
2. சுகாதார மற்றும் சமூகநலன் பேணல்
3. உடற்கல்வி மற்றும் விளையாட்டு
4. அரங்காற்றல் கலைகள்
5. நிகழ்ச்சி முகாமைத்துவம்
6. கலையும் கைப்பணியும்
7. உள்ளக வடிவமைப்பு
8. புதுப்பாணி வடிவமைப்பு

9. கிரபிக் வடிவமைப்பு
10. கலையும் வடிவமைப்பும்
11. நிலத்தோற்ற வடிவமைப்பு
12. பிரயோகத் தோட்டக்கலைக் கற்கைகள்
13. கால்நடை உற்பத்தி தொழினுட்பக் கற்கைகள்
14. உணவு தயாரிப்பு தொழினுட்பக் கற்கைகள்
15. நீரியல்வள தொழினுட்பக் கற்கைகள்
16. பெருந்தோட்ட உற்பத்தி தொழினுட்பக் கற்கைகள்
17. நிர்மாணத் தொழினுட்பம்
18. தானியங்கி இயந்திர தொழினுட்பக் கற்கைகள்
19. மின் மற்றும் இலத்திரனியல் தொழினுட்பக் கற்கைகள்
20. புடைவை மற்றும் ஆடைத் தொழினுட்பக் கற்கைகள்
21. உலோக நிர்மாண தொழினுட்பக் கற்கைகள்
22. அலுமினிய கட்டுமான தொழினுட்பக் கற்கைகள்
23. மென்பொருள் விருத்தி
24. இணைத்தள வடிவமைப்பு
25. உல்லாசப் பயணம் மற்றும் விருந்தோம்பல்
26. சுற்றாடல் கற்கைகள்

தரம் 12 இல் மாணவர்கள் மூன்று பிரயோகப் பாடங்களைத் தெரிவு செய்து கற்கலாம். அந்த மூன்று பாடங்களில் ஒரு பாடத்தையே தரம் 13இல் கற்க வேண்டும். தெரிவுசெய்யப்பட்ட குறித்த பாடம் பாடசாலையில் கற்பிக்கப்படுவதோடு, அப்பாடத்துக்கான தொழில்முறைப் பயிற்சியும் இடம்பெறும். தரம் 13இல் கற்கின்ற காலத்திலேயே மாணவர்கள் பாடத்துறைசார் நிறுவனங்களுக்கு பயிற்சிக்காக அனுப்பப்படுவார்கள். உதாரணமாக உல்லாசப் பயணம் மற்றும் விருந்தோம்பல் பாடத்தைக் கற்கின்ற மாணவன் அந்த நிறுவனம் உள்ள இடத்துக்கு பயிற்சிக்காக அனுப்பப்படுவான். அங்கு அவருக்கான நிறுவனம்சார் பயிற்சி வழங்கப்படும். பின்னர் அவர்களுக்கான மதிப்பீடு இடம்பெற்று NVQ4 மட்டத் (Level)

தொழில்முறைச் சான்றிதழ் பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்படும்.

தொழில்முறைப் பாடத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளுக்காக கல்வி அமைச்சினால் ஒரு பாடசாலைக்கு நியம அடிப்படை தராதரத் தேர்வின்படி ஒரு தடவைக்கு ரூபா 2 மில்லியன்கள் தேவையின்படி நிதிக் கொடையாக வழங்கப்படுகின்றது. எதிர்காலத்தில் இந்த நிதி மேலும் விரிவுபடுத்தப்படலாம். இந்த நிதியினைச் செலவு செய்கின்ற முறையினை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள 7/2013 சுற்றுநிருபம் தெளிவுபடுத்துகின்றது. இந்த நிதியினை வகுப்பறை, விஞ்ஞான கூடம், வேலைக்கூடம், தொழினுட்ப விஞ்ஞானக் கூடம், வசதிகளை மேம்படுத்தல், உரிய பாடத்துக்காகப் பாடசாலை நூலக புத்தகங்கள் மற்றும் பொருட்களை விலைக்கு வாங்குதல், உரிய கற்றல் பொருள், செயன்முறைப் பயிற்சிகாகான உபகரணங்கள், மற்றும் பொருட்களை விலைக்கு வாங்குதல், பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான செயன்முறையை, பயிற்சி வாய்ப்புக்களை, ஆலோசனை சேவையை, பாட இணைச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல், கைத்தொழில் மற்றும் தொழில் முறைப் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்காகத் தேவையான செலவுகளைச் செய்தல். உதாரணம் போக்குவரத்து செலவு, கணனி மற்றும் பிற உபகரணங்கள் பராபரிப்பு, மின் கட்டணம், மற்றும் இணையத்தளக் கட்டணக் கொடுப்பனவுகள், அடிப்படையான கொடுப்பனவை தொழில்முறைப் பயிற்சிக் காலத்தில் மாணவருக்கு வழங்குதல் போன்ற செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தமுடியும்.

13 வருடம் உறுதிப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டம் பொருத்தமான வகையில் நடைமுறைப்படுத்தப்படும்போது மாணவர்களை கல்வியின்பால் ஊக்கப்படுத்தமுடியும். அதனால், கற்பதில் உள்ள பல்வேறு இடர்கள் நீங்குவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. இந்த முன்னோடியான வேலைத்திட்டம் வருங்காலத்தில் இன்னும் விரிவுபடுத்தப்பட்டு முன்கொண்டுசெல்லப்படுவதோடு, பொருத்தமான வகையில் இந்த அறிவுறுத்தல்கள் மாற்றத்துக்கு உட்படுத்தப்படவும் இருப்பதாக கல்வி அமைச்சு சுற்றுநிருபங்கள்

மூலம் தெளிவுபடுத்தியுள்ளது. இந்தப்பாடங்களை இயல்புமீறிய மாணவர்கள் அவர்களின் தன்மைக்கு ஏற்ப தெரிவுசெய்து கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு திறந்துவிடப்பட்டுள்ளது.

**நியமனங்கள்**

விசேட கல்வியினை மேலும் வலுப்படுத்துவதற்காக பாடசாலைகளில் ஆசிரியர் நியமனங்கள் இடம்பெறுகின்றன. மற்றும் கல்வியற் கல்லூரிகளில் விரிவுரையாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். அத்தோடு இலங்கை கல்வி நிருவாக சேவைக்கு அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர். பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்கள் நியமிக்கப்படுவதோடு அங்கு இப்பாடத்துறையினை மேம்படுத்துவதற்காக விசேட செயற்திட்டங்களும் நடைமுறையில் இருந்து வருக்கின்றன. கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகத்தில் விசேட கல்விக்கான தனியான துறைகள் உண்டு. இவை தவிர மாகாணங்கள், வலயக்கல்வி அலுவலகங்களில் விசேட கல்விக்கான அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர். அத்தோடு இலங்கையின் அரசசார்பற்ற நிறுவனங்கள் விசேட கல்வியைப் பெறுகின்ற மாணவர்களுக்கு அதிக சந்தர்ப்பத்தினை வழங்கி வருகின்றது. திறந்த பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக் கழகம் முதலிய பல்கலைக்கழகங்களில் விசேட கல்விக்காக தனியான துறை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அத்தோடு கல்விப்பீடங்கள் உள்ள யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களில் விசேட தேவையுடைய கல்விக்கான பிரிவும் உண்டு. விசேட கல்வித் தேவையுடைய பிள்ளைகளுக்கான அரசாங்க வேலைவாய்ப்பு பெறுவதும் இலகுவானது. அத்தோடு உயர் கல்வி நிறுவனங்களில் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பும் இலகுபடுத்தப்பட்டு அவர்களுக்கு அதிக சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கதே.

# உசாத்துணை நூல்கள்

## நூல்கள்


அகத்தியலிங்கம்.ச (1997). *தொல்காப்பியத் தோற்றமும் ஏற்றமும்*, மதுரைப் பல்கலைக்கழகம், இலக்கணத்துறை வெளியீடு, மதுரை.

அருள்மொழி. செ(2010) *பிள்ளை வளர்ச்சியும் கற்றலும்*, ராஜாஸ் புத்தக நிலையம், மட்டக்களப்பு.

புலியூர்கேசிகன், (பதிப்பாசிரியர்) (1991). *ஆறுமுகநாவலர் நன்னூல் காண்டி கையுரை*, பகுதி - 1 எழுத்ததிகாரம், முல்லைநிலையம்.

சிவகுமார், த (2007). *விசேட கல்வி அறிமுகங்களும் பிரயோகமும்*, திருநெல்வேலி.

நாகராசன், கி (2015). உளவியல் நோக்கில் கற்போரும் கற்றலும், ஸ்ரீராம் பதிப்பகம், சென்னை.

Jonsson, T (1995). Inclusive Education, International Programme, Fo Disable People UNDP.

Leicester, M. Johnson,G (2004) Storis for Inculisive School, Routledge Falmer, London.


## மொடியூல்கள்


……, உட்படுத்தற்கல்வி, உட்படுத்தற்கல்வித் திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

……, (1990), கல்வியில் விசேட தேவையுடைய மாணவர்கள், தொலைக்கல்வித்து றை தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

……, (1990), விசேட கல்வியின் அவசியம், தொலைக்கல்வித்துறை தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

……, (1990), மெல்லக் கற்கும் மாணவர்கள், தொலைக்கல்வித்துறை தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

……, (1990), விசேட கல்வியின் அவசியம், தொலைக்கல்வித்துறை தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

……, (1990), விசேட கல்வி தேவைப்படும் பிள்ளைகள், தொலைக்கல்வித்துறை தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

……, (1990), விசேட கல்வி தேவைப்படும் பிள்ளைகள், தொலைக்கல்வித்துறை தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

……, (1990), குழந்தைகளின் மனவெழுச்சி வளர்ச்சி, தொலைக்கல்வித்துறை தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

……, (1990), புனர் நிர்மாணமும் சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வும், திறந்த பல்கலைக்கழகம். நாவல.

……, (1990), விசேட தேவைகள்சார் கல்விக்கான பல்துறை அணுகுமுறைகள் திறந்த பல்கலைக்கழகம், நாவல.

……, சிறுவர் நேய அணுகுமுறை தொடர்பான ஆலோசனை வழிகாட்டி, கல்வி அமைச்சு, இசுருபாய.

# இயல்பு மீறிய குழந்தைகள்


## கலாநிதி முருகு தயாநிதி

இந்நூலினை கல்வியியல் என்ற பொதுப் பட்டியலுக்குள் அடக்கலாம் என்றாலும், இதனைப் பிரதானமாக பிள்ளை உளவியல் அல்லது விசேட தேவையுடைய பிள்ளைகள் என்ற பிரிவுக்குள் அடக்குவது சாலப் பொருத்தமென்று கருதுகின்றேன். இவ்வகையில் இத்துறைக்கு ஒரு புதிய வரவாக இந்நூலை நாம் கருத்தில் கொள்கின்றோம். நவீன பிள்ளை உளவியல் அல்லது விசேட தேவையுடைய பிள்ளைகள் என்ற விடயம் தொடர்பாக அண்மைக்கால ஆய்வு களையும் அவை தொடர்பான முடிவுகளையும் தமிழ் வாசகர்களுக்கு குறிப்பாக இத்துறைசார்ந்த ஆசிரியர்களுக்கும் மட்டுமன்றிச் சகல தமிழ் பேசும் பெற்றோர்களுக்கும் பயனுள்ள ஒரு நூலை நூலாசிரியர் தந்துள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

பேராசிரியர் சோ.சந்திரசேகரம்

விசேட கல்வித்துறையானது தமிழுக்கு மிகப் புதியது என்ற கருத்து பலரிடம் காணப்படு கின்றது. ஆனால் முருகு தயாநிதி அவர்கள் வேதம், தொல்காப்பியம், நன்னூல் எனப் பல நூல்களில் இது தொடர்பாக கூறப்பட்டவைகளை விளக்குகிறார். இதன் மூலம் இவர் விசேட கல்வியானது தமிழுக்கு புதிதானதன்று என்பதனை நிறுவுகின்றார். இவ்வாறே மற்றைய கட்டுரைகளிலும் இத்துறைசார்ந்த பல்வேறு விடயங்களை விரிவாக ஆராய்ந்துள்ளார். தமிழ் மொழியைப் பொறுத்த வரையில் இத்துறை சார்ந்த நூல்கள் மிக அரிது என்றே குறிப்பிட முடியும். எனவே, விசேட கல்வித் துறையைப் பொறுத்தவரையில் இந்த நூல் பாலைவனப் பசுந்தரையென்றே குறிப்பிடலாம். விஷேட கல்வித்துறையில் பணிபுரியும் தமிழ் தெரிந்த வர்களுக்கும் தமிழ் பேசுகின்ற விஷேட தேவையுடைய பிள்ளை களின் பெற்றோ ருக்கும் இந்த நூல் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை. நூலாசிரியர் இத்துறையில் மேலும் பல நூல்களைத் தரவேண்டும்.

கலாநிதி தேவராசா முகுந்தன்



முருகுதயாநிதி : தேசிய கல்வி நிறுவகத்தில் சிரேஷ்ட விரிவுரை யாளராகத் தமிழ்த்துறையில் பணியாற்றிவரும் இவர், அந்த நிறுவ கத்திலே தமிழ் மொழி மற்றும் இரண்டாம்மொழி - தமிழ் ஆகிய பாடங் சகளுக்கான செயல் திட்டத் தலைவராகவும் செயற்படுகின்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி, முதுகலைமாணி, முதுதத்துவமாணிப் பட்டங்களையும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முதுகல்விமாணிப் பட்டத்தினையும் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்லோமாப் பட்டத்தினையும் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் கலாநிதி பட்டத்தினையும் நிறைவுசெய்துள்ளார். கல்வி டிப்லோமா, இளங் கல்விமாணி, முதுகல்விமாணி, முதுதத்துவமாணி கற்கைகளை மேற்கொள்ளுகின்ற மாணவர்களுக்கு விரிவுரையாளராகவும் மேற்பார்வையாளராகவும் செயற்படுகின்றார். அம்பிலாந்துறை, படிக்கும்போது, படுவான்கரைக்கு வந்துபார் தம்பி, கிராமியக்கலைகள், பழந்தமிழில் கல்விச் சிந்தனை முதலிய நூல்களையும் பல ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

விடயம் : கல்வி

ISBN 978-955-35603-4-6

9 789553 560346

விலை ரூபா 500.00

Kumaran Printers | kumbhlk@gmail.com